விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 10 புதன்கிழமை (22.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 065

## தேசியம், சுயநிர்ணயம், வட.-கிழ. இணைப்பை ஏற்றால்

# ஈ.பி.ஆர்.எல்.எவ் - புளொட் கட்சிகளுடன் த.தே.ம. முன்னணி இணையத் தயார்!



(யாழ்ப்பாணம்)

தாயகம், தேசியம், சுயநிர்ணயம், வடக்கு-கிழக்கு இணைப்பு இவற்றை யார் ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களின் நலன்களுக்காக செயற்பட முன்வருகின்றார்களோ, அவர்களுடன் இணைந்து செயற்பட தயார் என தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட் ஆகிய கட்சிகளும் இந்த கொள்கையை ஏற்றுக்கொண்டால் அவர்களுடனும்

23 ஆம் பக்கம் பார்க்க....

## கேப்பாப்பிலவு, வலி.வடக்கு

# மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி யாழில் இன்று போராட்டம்

## தெற்கு சகோதரர்களும் இணைகின்றனர்

(யாழ்ப்பாணம்)

கேப்பாப்பிலவு மற்றும் வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்திற்கு ஆதரவுதெரிவித்து தெற்கு சகோதரர்களும் இணையும் மக்கள் போராட்டம் இன்று புதன்கிழமை யாழ். நகரில் நடைபெறவுள்ளது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும், கிராமிய உழைப்பாளர் சங்கமும் இணைந்து இந்த போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளன.

24 ஆம் பக்கம் பார்க்க....

தரம் - 5



புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

ஆசிரியர் : திரு. வே.அன்பழகன்

# புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படாது!

## சுதந்திரக்கட்சி அதிர்ச்சி அறிவிப்பு



(கொழும்பு)

புதிய அரசிலமைப்பை உருவாக்கும் முயற்சியில் இலங்கை அரசாங்கம் முழுமூச்சாக ஈடுபட்டுவருவதாக கூறப்பட்டுவந்த நிலையில் அவ்வாறான புதிய அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்படாது என்று நல்லாட்சி அரசாங்கத்தின் சமுர்த்தி மற்றும் சமூக நலன்புரி அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினருமான எஸ்.பி.திஸாநாயக்க அதிர்ச்சி தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

(23-ம் பக்.)

## தண்ணீர் பிரச்சினை கடும் விவாதம்; அமர்வு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தின் தண்ணீர்ப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்கான சிறப்பு அமர்வு எதிர்வரும் மார்ச் மாதம் 07 ஆம் திகதி பிற்போடுவதற்கு வட மாகாண சபையின் நேற்றைய அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் 85வது அமர்வு நேற்றைய தினம் அவைத் தலைவர் சிவஞானம் தலைமை

24 ஆம் பக்கம் பார்க்க...

## தவிப்புடன் தொடரும் போராட்டம்



08 ஆம் பக்கம் பார்க்க....

## மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டும்; இல்லையேல்

# ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## உதய கம்மன்பில எச்சரிக்கை



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்ற சேவைகளில் தலையீடு செய்துள்ளார். இதனால் நீதிமன்ற சேவையின் சுயாதீனத் தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளார். இதற்காக ஜனாதிபதி மைத்தி

24 ஆம் பக்கம் பார்க்க....

# கொடூர சித்திரவதை செய்து கொன்ற பின்பும் சடலத்தையும் மிக மோசமாக தாக்கினர்

## பொலிஸாரின் வெறியாட்டம் குறித்து நேற்று சாட்சிய பதிவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் விசாரணையின் போது பொலிஸாரால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார் என சம்பவத்தை நேரில் கண்ட கண்கண்ட சாட்சியர்களில் ஒருவர் நேற்றைதினம் மன்றில் சாட்சியமளித்ததுடன், தாக்குதலுக்குள்ளான நபர் உயிரிழந்த பின்னரும் போதையில் இருந்த பொலிஸார் அவரது உடலை மோசமாக தாக்கினார்கள் எனவும் சாட்சி குறிப்பிட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில ஒருவர் விசாரணையின் போது பொலிஸாரால் கொலை செய்யப்பட்ட வழக்குடன் தொடர்புடைய சாட்சிகளின் வாக்குமூலங்கள் நேற்றைய தினம யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் யாழ்.மேல் நீதிமன்றில் பதிவு செய்

23 ஆம் பக்கம் பார்க்க....

## வாக்குறுதிகள் என்னவாயிற்று?

(ஜெனிவா)

2017ம் ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன், பொலிஸாரால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவைக்கு இலங்கை அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்த போதும், அது நிறைவேற்றப்பட

23 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-7619)

# தேவை

கொழும்பில் வீட்டில் தங்கியிருந்து சேவை செய்வதற்கு தாதியர் தேவை.
(உணவு, தங்குமிட வசதியுடன் 25000/=)
தொடர்புகளுக்கு:- 077 678 6312
(44108)

# சீனா உதவி வெளி.அமைச்சர் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு



இலங்கைக்குப் பயணம் மேற்கொண் டுள்ள சீனாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் லியூ ஜியான்சாவோ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கொழும்பில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்றிரவு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்துப் பேசப்பட்டதாக, பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தனது அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் பிரதமருடன் அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் அதிகாரிகளும் சீன உதவி அமைச்சருடன், இலங்கைக் கான சீனத் தூதுவர் மற்றும் அதிகாரிகளும் பங்கேற்றனர்.


முன்னதாக, வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீரவையும் சீனாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் லியூ ஜியான்சாவோ, சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

# விஸ்டத்தின் வெற்றி விழா

விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்று க.பொ.த (உ/த) பரீட்சையில் விசேட சித்திகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும்விஸ்டத்தின் வெற்றி விழா - 2016 நிகழ்வானது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.01க்கு நடைபெறும்.

விஸ்டம் தொழில்நுட்பக்கல்லூரிபணிப்பாளர் க. ரவிக்குமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுறுபாய கல்விப் பணிப்பாளர் ஏ.டி. நந்தசேன, சிறப்பு விருந்தினராக மகரகம பணிப்பாளர் என்.ரி.கே. லொக்குலியன, கௌரவ விருந்தினராக இசுறுபாய பிரதிக் கல்விப் பணிப்பாளர் என்.ரி. நசுமுதீன், மகரகம தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர் ஜி.கே. கமகே, மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. ஆரியசிங்க, தென்மாகாணக் கல்வித் திணைக்கள ஆசிரிய ஆலோசகர் எம்.ஆர்.எம்.நவாஸ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ)

# கண்ணீர் அஞ்சலி



அமரர்
கனகசபை
துரைராஜா

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினரும் பாடசாலை வளர்ச்சியில் அக்கறை கொண்டு மேலதிக வகுப்புக்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி வந்தவரும் பயனுள்ள ஆலோசனைகள் வழங்கி பாடசாலைக்கும் பாடசாலை சார்ந்த சமூகத்துக்கும் சேவைகள் பல புரிந்த பெருந்தகை அமரர் கனகசபை துரைராஜா காலமான செய்தி அறிந்து துயர் பகிர்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

(C-7627) யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய சமூகம்

# அறிவித்தல்

**பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோருதல்**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு**
**வடக்கு மாகாணம்**

**வடக்கு மாகாண பொதுச் சேவையின் மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்-2017**

ஆங்கிலமொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய விண்ணப்பங்கள் (Curriculum Vitae) வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவிவெற்றிடங்களுக்கு நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2017.03.22ஆகும்.

விண்ணப்பதாரிகள் www.np.gov.lk- Recruitment and Exam - Advertisement என்ற வடக்கு மாகாண இணையத்தளத்தில் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தகவல்களையும், தகைமைகளையும் பார்வையிட்டு தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ரூ. வரதலிங்கம்
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு.
வடக்கு மாகாணம்.

(சி-7622)

# மரண அறிவித்தல்



## தில்லைநடராஜா ஜெயரட்னராஜா (ஜெயக்கிளி)

தொண்டைமானாறைப் பிறப்பிடமாகவும் வேல் வீதி, மயிலிட்டியை வசிப்பிடமாகவும் தற்போது வியாபாரிமூலை வீரபத்திரர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லை நடராஜா ஜெயரட்னராஜா (ஜெயக்கிளி) அவர்கள் 20.02.2017 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் தில்லைநடராஜா - இரத்தி அம்பாள் தம்பதிகளின் அன்பு மகனும் ஜெயலட்சுமிதேவி, ரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புக் கணவரும் ஜெயந்தி, சுகந்தி, அமரர் ஜெகநாதன், சரவணபவன் (லண்டன்), லக்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2017) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோவிலடி,
வியாபாரிமூலை.

(C-7625)

தகவல்
குடும்பத்தினர்
(வீமராசா)

## நிதியை நிறுத்துங்கள்

அமெரிக்காவினால் இலங் கைக்கு வழங் கப்படுகின்ற மில்லேனியம் சவால்களுக் கான நிதியை இடை நிறுத்து மாறு.அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. 'ட்ரம்பிற்கான தமிழர் கள்' என்ற புலம்பெயர் அமைப் பினால் இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்படவில்லை எனவும் இலங்கையில் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்பட வில்லை எனவும் தெரிவித்துள்ள குறித்த அமை ப்பு, இந்த நிதி இலங்கைக்கு வழங்கப்படு வதை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத் தியு ள்ளது. ஒபாமா நிர்வாகத் தின் கீழ் ஆரம்பிக் கப்பட்ட இந்த நிதியின் ஊடாக வரு டாந்தம் இலங்கைக்கு 900 மில்லியன் டொலர்கள் வழ ங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எம்.பிக்களின் சொத்து விபரங்களை வெளியிட ட்ரான்பரன்சி நடவடிக்கை

தகவலறியும் உரிமை தொடர் பான சட்டத்தின் கீழ், நாடாளுமன் றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் உறுப் பினர்களின் சொத்து விபரங் களைப் பெற்று, அதனை வெளிப்ப டுத்த நடவடிக்கை எடுக்கத் தயாரா கியுள்ளதாக, ட்ரான்பரன்சி இன் டர்நஷ னல் நிறுவனத்தின் முகா மையாளர் சங்கீதா குணரத்ன தெரி வித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக, ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகி யோரின் சொத்து - வருமான விபர ங்களைக் கோரியுள்ள தாக, நேற்று முன்தினம் நடைபெற்ற செயலமர் வொன்றில், அவர் தெரிவித்தார்.

"சொத்து, வருமானச் சட் டத்தின் கீழ், மக்கள் பிரதிநிதி களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவர்களின் சொத்து - வருமான விபரங்களை வாங்கி விட்டாலும், அந்தச் சட்டத் தின் உப பிரிவுகள் காரணமாக, அவற்றை வெளிப் படுத்துவதற்கு சட்டத்தில் இடமில்லை.

எனினும், தகவல் அறி யும் உரிமை சட்டத்தின் ஊடாக, அவ்வா றான பிரச் சினை இல்லை. இதற்கமையவே, விப ரங்க ளைப் பெற்று வெளிப் படுத்த முடிவு செய்துள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, 'அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்;
Tel. 021 205 4066 / 077 872 5251


# தனியார் மருத்துவப் பல்கலை.பிரச்சினையில் நாட்டிற்கு நன்மை பயக்கும் தீர்மானம் எடுக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு)

மாலபே சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரி உள்ளிட்ட தனியார் பல்கலைக் கழகங்கள் தொடர்பாக எழுந் துள்ள பிரச்சினைக்கு அனைவருடனும் கலந்தாலோசித்து நாட்டிற்கு நன்மை பயக்கக் கூடிய வகையில் தீர்மானம் மேற்கொள்ளப்படுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



மாலபே சைற்றம் தனி யார் மருத்துவக்கல்லூரியை அடிப்படையாகக் கொண்டு இலங்கையில் தனியார் பல் கலைக்கழகங்கள் தொடர் பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து சைற்றம் தனியார் மருத்துவக் கல்லூரி மாண வர்களின் பெற்றோர் மற்றும் வைத்திய கலாநிதி நெவில் பெர்னாண்டோ உள்ளிட்டோ ருடன் நேற்று முன்தினம் இரவு தனது உத்தியோக பூர்வ இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்திய கலாநிதி நெவில் பெர்னாண்டோ மற்றும் சில பெற்றோர் தமது கருத்துக் களை இதன்போது தெரிவித்த துடன், மாணவப் பிரதிநிதி கள் சிலரும் தமது கருத்துக் களையும் ஆலோசனைகளை யும் முன்வைத்தனர்.

இந்த பிரச்சினை தொடர் பாக சகல பிரிவினராலும் முன் வைக்கப்படும் ஆலோசனை களை மிக கவனமாக அவதா னித்து வருவதாக இதன் போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மாணவர்களின் கருத் துக்களுக்கு விசேட அவதா னத்தை செலுத்துவதாகவும் தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரி கள் சங்கம், பல்வைத்திய அதிகாரிகள் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளுடன் தற்போது இவ்விடயம் தொடர்பாக பல கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதுடன், எதிர்காலத்தில் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு மற்றும் மருத்துவ சபை யுடன் கலந்துரையாடல்க ளில் ஈடுபடவும் தான் எண்ணி யுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-3)

## தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்று பிரிவு திறந்து வைக்கப்பட்டது



யாழ் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பெண் நோயியல் மற்றும் மகப்பே ற்றுக் கிளினிக் பிரிவு நேற்று முன்தினம் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஏழாலை களவாவோடை ஸ்ரீ வசந்த நாகபூஷணியம் பாள் ஆலயத்தின் தர்மகர் த்தா வசந்த நாகபூஷணி யம்மன் ஆகியோரால் சம்பிர தாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

ஏழாலை களவாவோடை ஸ்ரீ வசந்த நாகபூஷணியம் பாள் ஆலயத்தின் நிதிப் பங்க ளிப்பிலும் தெல்லிப்பழை நோயாளர் நலன்புரிச் சங்கத் தின் நிதிப் பங்களிப்பிலும் இந்த கட்டடம் நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

அத்துடன் தொழிலாளர்க ளுக்குப் பதிலாக வைத்திய சாலையில் அடையா அடிப்ப டையில் கடமையாற்றும் சுகாதாரத் தொண்டர்களின் முற்று முழுதான ஆளணி வளத்தில் இக் கட்டடம் நிர் மாணிக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் அத் தியட்சகர் யோ.திவாகர் தலை மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வைத்திய சாலை யின் சிரேஷ்ட மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவண பவ, மகப்பேற்று வைத் திய நிபுணர் ம.வதனா, வைத்தி யசாலையின் தாதிய பரிபால கர் சோ.இராஜேந் திரன், நிர் வாக உத்தியோகத்தர் திருக்கு மாரிகந்த சாமி ஆகியோர் இதில் கலந் துக்கொண்டனர்.

மேலும், வைத்தியசா லையின் நோயாளர் நலன் புரிச் சங்கச் செயலாளர் லயன் சி.ஹரிகரன், வலி. வடக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவி சாளர் எஸ்.சுகிர்தன், இனு வில் இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் வி.சச் சிதானந்தன், வைத்திய சிகி ச்சை நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய உத்தி யோகத்தர்கள், பணியாள ர்கள், நலன்விரு ம்பிகள் உள் ளிட்ட பலரும் கலந்து கொண் டிருந்தனர். (இ-9)

## விமான நிலையத்தில் வெளிநாட்டவர்கள் மூவர் நேற்று கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து வெளிநாட்டுபிரஜை கள் மூவர் நேற்று கைது செய் யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான முறை யில் சிகரெட் பைக்கற்றுக்கள் மற்றும் மதுபான போத்தல் களை இலங்கைக்கு கடத்த முயற்சித்த குற்றத்திற்காகவே குறித்த வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள் ளனர் என சுங்க அதிகாரிகள் தெரி வித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட வெளி நாட்டவர்கள் சீன நாட்டு பிரஜைகள் என சுங்க அதி காரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கட்டு நாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடு த்து வருகின்றனர். (இ-7)

## களுத்துறையில் படகு விபத்து; பலி எண்ணிக்கை உயர்வு

(கொழும்பு)

களுத்துறை - கடுகுருந்த கடற்பகுதியில் படகொன்று விபத் துக்குள்ளானதில் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 12 ஆக உயர்வடைந்துள்ளது.

பேருவளையில் இருந்து களுத்துறை நோக்கி, சமய நிகழ்வொன்றுக்குச் சென்று கொண்டிருந்த படகுகளில் ஒன்று கடந்த ஞாயிற்றுக் கிழமை கவிழ்ந்து விபத்துக் குள்ளானது.

இதனையடுத்து, 11 பேரின் சடலங்களை கைப்பற்றிய தோடு, சுமார் 30 பேர் வரை காப்பாற்றப்பட்டு வைத்திய சாலைகளில் அனுமதிக்கப் பட்டனர்.

இவர்களில் சிலர் பேரு வளை மற்றும் களுத்துறை - நாகொடை வைத்தியசாலை களில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந் நிலையில் நாகொடை வைத்தியசாலையின் அவ சர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் நேற்றுபலியாகியுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (இ-7)

## பலியானோருக்கு நட்டஈடு

களுத்துறை, பயாகல கட் டுகுறுந்த கடலில் யாத்தி ரிகர்களுடன் படகு கடலுக் குள் மூழ்கியமையால், பலி யான வர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், பாதிக்கப் பட்டவ ர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபாயும் வழங்குவ தற்கு நடவடி க்கை எடுக்கப்பட் டுள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ அமை ச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார். (இ-7)

# உங்களை விட வேகமாக ஓடுவேன் உசேன் போல்டிடம் ஹோலி தெரிவிப்பு


உலகின் நம்பர் 1 தடகள வீரரா கத் திகழும் உசேன் போல்ட்டை வேகத்தில் ஒருநாள் முந்துவேன் என கிரிக்கெட் வீரர் விராட் ஹோலி தெரிவித்துள்ளார்.

விராட் ஹோலி தனது ஆட்டம் மூலம் மட்டுமல்லாமல் விளம்பரங்கள் வாயிலாகவும் கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்து வருகிறார். இந்த நிலையில் விராட் ஹோலி ஒரு விளம்பரத்தில் மட்டும் ரூ.110 கோடிக்கு ஒப்பந்தமாகி இருக்கிறார்.



சர்வதேச விளையாட்டு நிறுவனமான 'பூமா' விராட் ஹோலியை 8 ஆண்டுக்கு ரூ.110 கோடிக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இந்திய விளையாட்டு வீரர் ஒருவர் ஒரே விளம்பரத்தில் இவ்வளவு அதிகமான தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும். இது புதிய சாதனையாகும்.

இதுகுறித்து பூமா நிறுவனத்தில் ஏற்கெனவே விளம்பரத் தூதராக இருக்கும் உலகின் நம்பர் 1 தடகள வீரர் உசைன் போல்ட் தனது டுவிட்டர் பக்கத்தில் "விராட் ஹோலி இதற்கு சரியான தேர்வு" என புகழ்ந்துள்ளார். இதற்கு பதில் அளித்துள்ள விராட் "ஒருநாள் உங்களை விட வேகமாக ஓடுவேன் நன்றி ஜாம்பவான்" என குறிப்பிட்டுள்ளார். (க)




வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# உடனடி வறட்சி நிவாரணம் இலங்கைக்கு வழங்கப்படும்




(கொழும்பு)

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு 100 மெட்றிக் தொன் அரிசியையும், 8 நீர்த்தாங்கிகளையும் உடனடி உதவியாக இந்தியா வழங்கவுள்ளது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெய்சங்கர், நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, இலங்கைக்கான பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவையும், இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ். ஜெய்சங்கர் தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுக்களில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவும் கலந்து கொண்டிருந்தார். (செ-11)

# த.தே.கூ. அலுவலகத்தில் வெடிகுண்டு

## தகுந்த ஆதாரங்கள் இன்மையால் கைதானவர்கள் நேற்று விடுவிப்பு

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் வெடிகுண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கின் இறுதித் தீர்ப்பு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்தில் வைத்து வெடிகுண்டுகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவத்தின்போது பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டோரிடம், பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் நீதிபதிகள் முன்னிலையில் மன்னிப்பு கோரியுள்ளனர்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்தில் கடந்த 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதி, கொழும்பிலிருந்து சென்ற பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தேடுதல் நடத்தியதுடன், அங்கிருந்து வெடிபொருட்கள் உள்ளிட்ட பல பொருட்களை மீட்டதுடன், அலுவலக ஊழியர்கள் இருவரையும் கைது செய்திருந்தனர்.

இதன்போது கடமையிலிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் அருணாசலம் வேழமாலிகிதனைக் கைதுசெய்து தமது வாகனத்தில் தடுத்து வைத்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர், அலுவலக ஊழியர்களை அலுவலகத்தின் முன்பக்கத்தில் தடுத்து வைத்திருந்தனர்.

இதன் பின்னர் ஆயுதம் தாங்கிய படையினர், பொலிஸார் மற்றும் பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர் இணைந்து அலுவலகத்தில் தேடுதல் நடத்தியதுடன் அங்கிருந்து வெடிபொருட்கள், ஆபாச இறுவட்டுக்கள் உள்ளிட்ட பல பொருட்களை எடுத்துச் சென்றனர்.

அத்துடன் கைதுசெய்து தடுத்து வைத்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலக ஊழியர் வேழமாலிகிதனை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கொழும்புக்கு அழைத்துச்சென்றனர்.

இதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் அப்போதைய பிரத்தியேக செயலாளராக இருந்த பொன்னம்பலம் லக்ஷ்மிகாந்தன் என்பவர் கொழும்பில் தங்கியிருந்த நிலையில், அங்கு வைத்து பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அவரும் கைதுசெய்யப்பட்டார்.

இதனைத்தொடர்ந்து பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட இவர்கள், 13 மாதங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

எனினும் இருவர் மீதும் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இன்மையால் குறித்த இருவரும் கடந்த 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் திகதி நீதிமன்றத்தின் ஊடாக பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்டோரின் வழக்கு நேற்றைய தினம் மீண்டும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த இருவரும் வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# பட்டதாரி ஆசிரியர் நியமனம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

வடக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் 559 பேருக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 1-ம் திகதி வழங்கப்படவிருந்த ஆசிரியர் நியமனம் வடக்கு மாகாண சபையால் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின் போதே இவ்விடயம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவிக்கையில்,

கடந்த இருபதாம் திகதி நடைபெற்ற பொதுமக்கள் முறைப்பாட்டு குழுவிலும் வடக்கு மாகாண சபையின் (நேற்றைய) அமர்விலும் எதிர்வரும் மார்ச் மாதம் 1ஆம் திகதி வழங்கப்படவுள்ள பட்டதாரி நியமனங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. வடக்கு மாகாணத்தில் நிலவும் 849 ஆசிரியர் வெற்றிடங்களுக்கு நடத்தப்பட்ட போட்டி பரீட்சையில் 779 பேர் சித்தியடைந்துள்ளனர்.

பாட ரீதியாக 559 பேருக்கே நியமனம் வழங்கப்படவுள்ளது. இதனால் பரீட்சையில் சித்தியடைந்த 220 பேருக்கு நியமனம் வழங்கப்படாத நிலை காணப்படுகிறது. புவியியல் போன்ற சில பாடங்களுக்கு மேலும் பலர் சித்தியடைந்துள்ளமையையும், சில பாடங்களுக்கு வெற்றிடங்கள் நிரப்பப்படாது போகும் சூழ்நிலையையும்,

பொதுவான சமூக விஞ்ஞான பாடத்துறையுனுள் புவியியல், வரலாறு, குடியியல், மற்றும் ஆலோசனை வழிகாட்டலில் அடங்குவதனையும், சாதாரண பட்டப்படிப்பின் முதலாவது வருட பாடமாக இவற்றில் ஒரு பாடத்தைக் கொண்டவராக உள்ளோர்க்கு அந்த துறையில் நியமனம் வழங்கலாம் என்பதையும், போட்டி பரீட்சையில் சித்தியடைந்த சிலருக்கு நியமனம் வழங்கி சிலருக்கு நியமனம் வழங்காதிருப்பது பாகுபாடாக அமையலாம் என்பதனையும் கருத்திற்கொண்டு,

முழுமையான வெற்றிடங்களை நிரப்பி கூடுமானவரை சித்திபெற்ற எல்லோருக்கும் நியமனம் வழங்க வேண்டும் என வடக்கு மாகாண சபை தீர்மானித்துள்ளது. மேலும் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவுள்ள கல்வி அமைச்சின் அமைச்சு மட்ட ஆலோசனை குழுக்கூட்டத்தில் இதற்கான நியமனம் செய்யப்படும் வரை நியமனம் வழங்கும் நடவடிக்கையை இடைநிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-4)

**University of Jaffna - Sri Lanka**
**Faculty of Graduate Studies**

**Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL)**
**Part time course - 2017/2019**
**Batch II**

Applications will be entertained from eligible candidates for the above course.

**Admission Requirements:**

1. Degree in any field from a recognized University.

And

2. At least three years experience in Teaching English as a Second Language at primary / secondary / tertiary levels in Government or recognized private schools / Institutions.

And

3. Age - below fifty five years

**Duration** : Four Semesters (Two years)

**Medium** : English

**Selection Criteria** : English Language Proficiency Test and Interview

**Course Fee** : **Rs. 85, 000.00**

**Closing date for Applications : 10th March 2017**

**Application Procedure :**

Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P : 021 222 3608) either in person or by post, on a payment of Rs. 500/= per application form on production of receipt in support of the payment to the University Account number **162-1001-8-0000902** at the People's Bank.

Those who wish to obtain application forms by post are requested to send a money order for Rs. 500/= per application form drawn in favour of the Bursar, University of Jaffna together with a **self - addressed stamped envelope** (23 x 10 cm in size) to the value of Rs. 40/=

Application forms and other details will also be available in the Faculty website www.jfn.ac.lk/grad. Those who wish to send the downloaded application form should attach a money order for Rs. 500/= drawn in favour of the **Bursar, University of Jaffna** or the receipt in support of the payment to the University **Account number 162-1001-8-0000902** at the People's Bank.

Duly completed applications should be forwarded to the **Assistant Registrar, Faculty of Graduate Studies and University of Jaffna** on or before the closing date of application.

Name of the course should be written on the top left hand corner of the envelope.

Illegible, incomplete and late applications will be rejected without intimation.

**Note :- The Candidates those who applied for this course earlier and sat the selection examination on 28.12.2016 need not to apply again.**

Registrar
17.02.2017

(C - 7624)

# பட்டமளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

பிசப் மீடியா சென்ரர் ஊடாக தமிழ்நாடு கோயம்புத்துார் பாரதியார் பல்கலைக்கழகத்தில் 2012 -2016 கல்வி யாண்டுகளில் ஊடகக்கற்கை இளங்கலைமாணி மற்றும் ஊடக்கக்கற்கைகள் முதுகலைமாணி கற்கைநெறியினை நிறைவு செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா இன்று 22 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்.இராம நாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடை பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை யாழ்.ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, சிறப்பு விருந் தினர்களாக யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் இணை ப்பாளர் கலாநிதி எஸ்.ரகுராம், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந் தரம்பிள்ளை, யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் , பத்திரிசியார் கல்லூரி லண்டன் பழைய மாணவர் சங்கத் தலைவர் அருளானந்தம் ஜெயராசா, ஜசிந்தா புஸ்பம் தம்பதியர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# போராட்டத்திற்கு ஆதரவு




கேப்பாப்பிலவில் நில மீட்புக்காக தொடர் போராட்டம் நடத்தி வரும் மக்களுக்கு வலுச் சேர்க்கும் முகமாக வடமராட்சி சக்கோட்டை யில் உள்ள பாடசாலை மாணவர்கள் கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசா லையில் கல்வி கற்கும் மாணவர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9 மணி யளவில் பதாகைகளை தாங்கியவாறு கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை வாயிலுக்கு வந்த மாணவ ர்கள் "நல்லாட்சி அரசே மக்களை குடியிருக்க விடு, இரண்டு வருட ங்களில் என்ன நடந் தது? வடக்கின் வச ந்தம் மக்களின் கண்ணீரா? கொடு கொடு காணியை, விடு விடு குடி யிருக்க" போன்ற வசனங்கள் தாங்கிய பதாகைகளை தாங்கிய வாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-3-60)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் வல்லிபுரம் ரத்தினம்

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி ரமணி தயாபரன் அவர்களின் தந்தையார் வல்லிபுரம் ரத்தினம் அவர்கள் இறைபதம் அடைந்த செய் தியை அறிந்து துயர் பகிர்வதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(8011)

ஆசிரியர் நலன்புரிக் கழகம், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

## நன்றி நவிலலும் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர் கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம்

தோற்றம் 25.12.1948

மறைவு 25.01.2017

25.01.2017 புதன்கிழமை இறைபதம் எய்திய எங்கள் குல தெய்வம் யாழ். மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் கைலாசபிள்ளை மகேந்திரலிங்கத்தின் அமரத்துவ செய்தி கேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த வர்களுக்கும் மலர்வளையம், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோர்க்கும் வேலணை பிரதேச வைத்தி யசாலை, யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், தாதி மார், ஊழியர்களுக்கும் மற்றும் இறுதித் தருணத்தில் பல வழிகளிலும் உறு துணையாக இருந்து உதவிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.02.2017ஆம் திகதி இன்று புதன் கிழமை காலை 5.30 மணியளவில் வேலணை சாட்டி அந்தியேட்டி மடத்திலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 24.02.2017 வெள்ளிக்கிழமை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அந்நிகழ்வில் பங்குபற்றுவதோடு மதிய போச னத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனை தனிப்பட்ட அழைப்பிதழாக ஏற்று அன்பு உள் ளங்கள் அனைவரையும் வருகை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்: குடும்பத்தினர்

05.ஆம் வட்டாரம், வேலணை வடக்கு, வேலணை. தொ.இ: 021 321 4840

## நீர்க்கட்டணம் அதிகரிக்கும்

நீர்க்கட்டணத்தை அதிகரிக்க வேண் டிய நிலை ஏற்பட்டுள் ளதாக நகர திட்டமி டல் மற்றும் நீர் வள ங்கள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரி வித்துள்ளார்.

நேற்று முன்தி னம் குருநாகலில் இடம்பெற்ற நிகழ் வொன்றில் கலந்து கொண்டு உரையா ற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

ஒரு லீற்றர் நீரை சுத்திகரிப்பதற்கு 48 ரூபா செலவிடப்படு கின்ற நிலையில், குறித்த நீர் 12 ரூபா வுக்கு வழங்கப்படு கின்றது.

தொடர்ந்தும் இவ் வாறு வழங்குவதால் அரசுக்கு நட்டம் ஏற்ப டும். எனவே சிறியள வில் நீர்க் கட்டண த்தை அதிகரிக்க எண் ணியுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)


## வீடு காணி விற்பனைக்கு

கோப்பாய் மத்தி அண்ணமார் கோவில டிப் பகுதியில் சுற்றுமதிலுடன் வீடு (இர ண்டு பரப்புக்காணி) மற்றும் 5,8,7 பரப் புக் காணிகள். விலை பேசித் தீர்மானிக் கப்படும்.

தொடர்புகளுக்கு:-
த.தருமரத்தினம், அண்ணமார் கோவிலடி, கோப்பாய் மத்தி.
தொ.பே.இல. 077 821 5069

(அ-7607)


## தவறிவிட்டது

15.02.2017 காலை 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் கனகபுரத்தில் இருந்து கொங்கிறீட் பாதையூடாக பாரதி வீதி, டிப்போ ﾗ ], A9 பாதையால் முறிகண்டி சென்ற போது முக்கிய ஆவணங்கள் அடங்கிய சிவப்பு நிற பிளாஸ்ரிக் கோவை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 068 7437 எனும் தொலைபேசி இலக்கத் துக்கு தகவல் தந்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (அ-7608)


## யாழ்ப்பாணத்தில் புகைப்படக்கல்வி

தரமான புகைப்படங்களை எடுப்பதற்கு உகந்த கற்கை நெறியாகும்.




Sundays
9.00 am - 11.00 am
Commencement
26th February
Duration
1.5 months

METROPOLITAN INSTITUTE OF BUSINESS MANAGEMENT
Venue : Jaffna College Undergraduate Department, 464, Hospital Road, Jaffna
Hotline: +94 77 661 5152 | E: info@mibm.lk
www.mibm.lk

MIBM

(அ-7592)


## இராசி பலன்

22.02.2017
(மாசி 10, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு 8.02 மணிவரை
பூராடம் பின்னிரவு 5.00 மணிவரை
சுபநேரம் 5.01-6.31 மணிவரை
இராகுகாலம் 12.31-2.01 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மிருகசீரிடம் | | |
| | | | ராகு |
| சந் | சனி | குரு | |

**மேடம்:** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற் றம் காணும் நாள், தடைகள் அகன்று தனவரவுகள் கிடைக் கலாம், மறைமுகப் போட்டி களை சமாளிப்பீர்கள்.

**இடபம்:** மனக்குழப்பம் தீர கணப தியை வழிபட வேண்டிய நாள், அடுத்தவர் விவகா ரங்களில் தலையிடுவதைத் தவிர்த்தல் நல்லது.

**மிதுனம்:** உற்றார், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர் கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தி யாகும், போசன சுகமுண்டு.

**கடகம்:** உடல்நலன் சீராகி உற்சாகத் தோடு பணிபுரிவீர்கள், வழி பாடு சிறப்பினை வழங்கும், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப் படைவீர்கள், உள்ளம் மகி ழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம், பிள்ளை களின் தேவைகள் பூர்த்தியா கும்.

**கன்னி:** பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்:** சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்க ளால் பலனுண்டு, போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்:** நண்பர்கள் மூலம் சுப தகவல் கள் வந்து சேரலாம், உறவி னர் வருகையுண்டு, தனவரவு கள் திருப்தி தரும், தொழில் முயற்சியில் ஆர்வம் காட்டு வீர்கள்.

**தனுசு:** மற்றவர்களின் விமர்சனங் களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள்.

**மகரம்:** சுப விரயங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், விவா தங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்க் கைக்கு அடித்தளம் அமைப் பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உய ரும் நாள்.

**மீனம்:** தொழில் முன்னேற்றகரமாக அமையும், பெரிய மனிதர் களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.

# யாழில் 742 ஹெக்டேயரில் புகையிலை பயிர்ச்செய்கை


அரசினால் புகையிலை பயிர்ச்செய்கைக்கு தடை விதிக்கப்பட்ட போதிலும் யாழ்.மாவட்டத்தில் இம்முறை 741.615 ஹெக்டேயர் நிலப்பரப்பில் புகையிலை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.


எதிர்வரும் காலங்களில் புகையிலைச் செய்கை முற்று முழுதாக தடைசெய்யப்படவுள்ளதாக அரசால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் குறுகிய காலத்தில் அதிக வருவாயை ஈட்டும் பயிர் என்பதால் மக்கள் தொடர்ச்சியாக இப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு வருகின்ற னர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலபிரிவுகளிலும் இம்முறை 741.615 ஹெக்டேயர் நிலப்பரப்பில் புகையிலை பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக பிரிவில் 104.69 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், வேலணையில் 92.85 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், நல்லூரில் 11.5 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், சங்கானையில் 25.1 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், சண்டிலிப்பாயில் 2.675 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், உடுவிலில் 102.5 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், தெல்லிப்பழையில் 3.75 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், கோப்பாயில் 35.7 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், கரவெட்டியில் 299.275 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், பருத்தித்துறையில் 39.425 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும், சாவகச்சேரியில் 24.15 ஹெக்டேயர் நிலப்பரப்பிலும் என மொத்தமாக 741.615 ஹெக்டேயர் நிலப்பரப்பில் இப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பார்த்தீனியத்தின் பரம்பலை கட்டுப்படுத்தக் கோரிக்கை





(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள விவசாய நிலப்பகுதிகளில் பார்த்தீனிய செடியின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுவதால் விவசாயிகள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் விவசாய நிலங்களில் பார்த்தீனியத்தின் பரம்பலை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உரிய நடவடிக்கை எடுக்குமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்தவகையில் வலிகாமம் பகுதியில் ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், கோப்பாய், குப்பிளான், மயிலங்காடு, வயாவிளான், குரும்பசிட்டி, ஈவினை, சுன்னாகம், மருதனார்மடம், அச்செழு, ஊரெழு, உரும்பிராய் உள்ளிட்ட பகுதிகளில் விவசாய நிலங்களில் பார்த்தீனியச் செடிகள் அதிகம் முளைப்பதால் தமது விவசாயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் பயிர்களுக்குச் சேர வேண்டிய சத்துக்களைப் பார்த்தீனியச் செடிகள் தமக்குள் உள்ளுறிஞ்சிக் கொள்வதாகக் கவலை தெரிவித்துள்ள விவசாயிகள், பார்த்தீனியச் செடிகளை அடியோடு பிடுங்கி அழிக்கும் செயற்பாட்டை அடிக்கடி மேற்கொண்டு வந்த போதும் பார்த்தீனியச் செடிகள் மீண்டும் மீண்டும் வளர்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

பார்த்தீனிய செடியை அழிப்பதற்காகவே தாம் வேலைக்கு ஆட்களை வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் விவசாய செய்கையில் இலாபத்தினையும் பெற முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர். கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் குறித்த பார்த்தீனியத்தை அழிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது என்றும் அதன் பின்னர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளனர். அத்துடன் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

யாழ். பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை 23ஆம் திகதி வியாழக்கிழமை காலை இடம்பெறும். இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் வழங்குவார். இந்நிகழ்வில் தேர் வெள்ளோட்ட சிறப்பு மலரை வடமாகாண கல்வி அமைச்சின் உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் வெளியிட்டு வைப்பார். இத்தேர் 80 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்டது. இதேவேளை இவ்ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9மணிக்கு தேர்த்திருவிழாவும் 26ஆம்திகதி காலை 8மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. மஹோற்வ காலங்களில் தினமும் மாலை 6மணி முதல் இரவு 7மணிவரை வவுனியா தமிழ்ச்சங்கத்தலைவர் கேசிவகுமார்விசேட சமயச்சிறப்புரைகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-3)




# "கலைமாணிவிருது"



யாழ்.மாவட்ட சர்வோதய நிறுவனத்தினால் மக்கள் திலகம் எம்.ஜி. ஆரின் நூற்றாண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கலைஞர்களுக்கு கலைமாணி விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் யாழ்.மாவட்ட சர்வோதய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இதில் யாழ்.இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். இந்த நிகழ்வில் யாழ்.எழுத்தாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி) கலைமாணி விருது வழங்கி கௌரவிக் கப்படவுள்ளார். (இ-3)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் இடம்பெறும் இப்போட்டியில் பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி திருமதி.ஸ்ரீதேவி அசோகன்(லேடி றிஜ்வே மருத்துவமனை, கொழும்பு-7), சர்வதேச பொறியியல் சேவை தனியார், வரையறுக்கப்பட்ட நிறுவனம் (மாலபே) பணிப்பாளர் மு.ந. அசோகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம்-வண்ணார்பண்ணை (வண்ணை வைத்தீஸ்வரன் பரிவாரத் திருக்கோவில்) வேம்படி பிள்ளையார் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் திருவிழா இடம்பெறவுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இரண்டாவது ஆய்வரங்கு

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படும் கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் இரண்டாவது ஆய்வரங்கு மிகையில் ஷொலக்கோவ் இன் இலக்கியப் படைப்புக்கள் எனும் தலைப்பில் நாளை மறுதினம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல.62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் தலைமையுரையினை எழுத்தாளர் மு.இராசநாயகம், ஆய்வுரையினை எழுத்தாளர் ஐ.சாந்தன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# இலட்சார்ச்சனை

தெல்லிப்பழை, துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவடையவுள்ளது. 11ஆம் திகதி சனிக்கிழமை காலை மாசிமகப் பெருவிழா இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# மாசிமகப் பெருவிழா

யாழ். புங்குடுதீவு-10 கண்ணகைபுரம் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய (கண்ணகி அம்மன் கோவில்) மாசி மகப்பெருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 6மணி தொடக்கம் விசேட பூஜைகள் இடம்பெற்று ஆலய சமுத்திர தீர்த்தத்தில் தீர்த்தாடனம் இடம்பெற்று அம்பிகை வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறவுள்ளது. (இ-3)





இலங்கை மின்சார சபையும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் இணைந்து நடத்திய கணித அறிவுப் போட்டியில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதில் பங்குபற்றிய மாணவர்களை கௌரவிக்கும் முகமாக நேற்றையதினம் கல்லூரி முதல்வர் மு.கனகலிங்கம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வெற்றியீட்டிய மாண வர்களுக்கு வழங்கப்பட்ட 90 ஆயிரம் ரூபா பெறுமதியான 5 மடிக் கணனிகளையும் வெற்றிக் கேடயத்தையும் சான்றிதழ்களையும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மகாலிங்கம்)

# பொதுக்கூட்டம்

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. வலிகாமம் கிழக்குப்பிரதேச செயலர் திருமதி. சுபாஜனி மதியழகன் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் பேரவையின் அங்கத்தவர்கள், கலைஞர்கள், கலைமன்றங்களின் பிரதிநிதிகள், கலைஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# மகா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிழக்கு சித்தியம் பதியுறை திருவருள்மிகு அண்ணமார் ஆலய மகா சிவராத்திரி விழா நாளை மறுதினம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு விசேட பூஜைகளுடன் ஆரம்பமாகி மறுநாள் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு பூஜைகளுடன் நிறைவேறவுள்ளது. இரவு சமய கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் மகா சிவராத்திரி தின சிறப்புப் பூசைகள் நாளை மறுதினம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும். இரவு 10.30 மணிக்கு சிவராத்திரி மகிமை என்னும் பொருளில் வர்ணனைக் கலாநிதி மதுரகவி. காரை.எம்.பி. அருளானந்தன் ஆசிரியரின் சொற்பொழிவும், அருணகிரிநாதர் என்னும் பொருள் பற்றி கே. என். கணபதிப்பிள்ளை (சின்னமணியின் சிஷ்யன்) ஏ.என்.மதியழகன் குழுவினரின் வில்லிசை நிகழ்வும் இடம்பெறும். (இ-12)

# இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலரிடம் உதவக் கோரினோம்

## தமிழ் முற்போக்கு கூட்டணி தகவல்

மலையக கல்வி அபிவிரு த்திக்கும் மலையக மக்களின் சுகாதார விடயங்களிலும், இந்திய அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென தமிழ் முற்போக்குக் கூட்டணி, இந்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள, இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுப்ரமணியம் ஜெய்சங் கரை, தமிழ் முற்போக்குக் கூட்டணி, கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில், நேற்று முன்தினம் சந்தித்தது. இந்தச் சந்திப்பின் போதே, அக்கூட்டணி மேற் கண்டவாறு வலியுறுத்தியுள்ளது. இச்சந்திப்பில், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன், பிரதித் தலைவர்களான அமைச்சர் பி. திகாம்பரம் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணான் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.



இந்தச் சந்திப்பு தொடர்பில், கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதா கிருஷ்ணன் கருத்து தெரிவிக்கையில்,

"இந்திய வம்சாவளி மக்க ளின் பிரதிநிதிகளையும் சந்திக்க வேண்டும் என்று, அவர் கோரியதற்காமைவாக, இச்சந்திப்பு இடம்பெற்றது. மலையக மக்களுக்கு நன் மை தரக் கூடிய பல விடயங் களை நாம் இச் சந்திப்பின் போது கோரியிருந்தோம்.

குறிப்பாக, இந்திய வீடமைப்புத்திட்டத்தைக் கோரினோம். இந்திய அரசாங்கம் 4,000 வீடமைப்புத் திட்டத்தை, இந்திய வம்சாவளி மக்களு க்கு ஏற்கனவே வழங்கிய போதிலும், அது போதவில்லை என்று நாம் எடுத்துரைத் தோம். அத்துடன், மலைய கக் கல்வி அபிவிருத்தியிலும் மலையக மக்களின் சுகா தார விடயங்களிலும் கவ னம் செலுத்த வேண்டும் என்று நாம் கோரியிருந்தோம்.

இந்தச் சந்திப்பு, சுமார் 45 நிமிடங்கள் இடம்பெ ற்றன. அதன் போது, புதிய அரசியலமைப்பு தொடர்பிலும் அவர் எம்மிடம் கேட்டறிந்துகொண்டார்.

இதேவேளை, இலங்கை அரசாங்கத்தின் கல்வித்திட்டத்து க்கு அமைவாக, உதவிகளை வழங்குவதற்கு, இந்திய அர சாங்கம் தயாராகவுள்ளது என்றும் ஏனைய விடயங் களில் முன் னதைப் போலவே உதவி ஒத்தாசைகளை நல்கு வதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜெய்சங்கர் தெரிவித்ததாக, கல்வி இரா ஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)


இணுவில் திருப்பதி
அருள்மிகு
திருவேங்கடேஸ்வரர் ஆலய
இலட்சார்ச்சனை விழா -2017
15.02.2017 - 24.02.2017 வரை

தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவடையும்.
8 ஆம் நாள் இன்று (22.02.2017) சம்பரண சுத்த ஹோமம்-
நாட்டில் குழப்ப நிலைகள் நீங்க
சைவப்புலவர்- சைவநெறி சன்மார்க்கர் நித்திய தசிதரன்
விடயம்- லஷ்மி நாராயணன்
சொற்பொழிவு ஒருங்கமைப்பு
நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபம், நல்லூர்.
திரு.சண்முகராஜா கணேசலிங்கம், தர்மகர்த்தா
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
021 224 2300



40 வருடங்களுக்கு மேலாக மக்களின்
நன்மதிப்பை வென்ற
"றோயல் குளுக்கோஸ்"
PACKED BY: ROYAL INDUSTRIES,
Colombo-13 TP:- 077 727 7670
தற்போது புதிய வடிவில்!!



இழந்த சக்தியை உடனடியாக
மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
"றோயல் குளுக்கோஸ்"
தொடர்புகளுக்கு
சிவா நறுமணப் பூங்கா,
இல. 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP:-021 222 2567





World Class UK Degree @ICBT Jaffna Campus

Accredited by EQAA European Quality Assurance Agency

Apply now for New Intake 2017

ICBT HND IN BUSINESS MANAGEMENT
Finance/ Marketing/ Human Resource Management

Duration
- Full Time: 18 Months (Mon-Fri)
- Part Time: 2 Years (Sat & Sun Evening)

Part Time Entry qualifications:
GCE A/L + Work Experience

Cardiff Metropolitan University

BSc (Hons) BUSINESS MANAGEMENT
Offered by Cardiff Metropolitan University, UK

Duration
- 1 year

Entry Qualifications
- Higher National Diploma in Business Management or any other accepted programs.

UGC

Why Study ICBT?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

Week End Part Time Classes
TVEC REGISTERED

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
530, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email: jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Services Sector
www.icbt.lk



கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 18 சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6979

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 15
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BBA/அரசதொழில்
தொ.இ: B/6982

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 46
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L/தனியார்தொழில்
தொ.இ: B/6983

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
தகைமை/தொழில்:A/L பிரான்ஸ் NOT P.R
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/6985

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 48 சூரிசெவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: IAB, AAT, CIMA/கணக்காளர்
தொ.இ: G/4277

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 7
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BA/ அரச தொழில்
தொ.இ: G/4304

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 85 சூரிசெவ் 8 இல்
உயரம்: 165cm
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: G/4312

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 48 செவ் 12 இல்
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/4316

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

# இனியும் காலம் தாமதிக்க வேண்டாமெனக் கோரி
# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கவனயீர்ப்பு
# கிளியில் 2வது நாளாக நேற்றும் தொடர்ந்தது

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமற் போனோர், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை ஆகியன தொடர்பில் தெளிவான தகவல்களை வெளிப்படுத்தக் கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் இனியும் காலம் தாமதிக்க வேண்டாம்எனவும் இலங்கை அரசுக்கு பொறுப்புக் கூறல் விடயத்தில் ஐ.நா. கால அவகாசம் வழங்கும் விடயத்திற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணங்கிப் போக இருப்பதாக தகவல்கள் வெளி வருகின்றன.



எனவே இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களின் உணர்வுகளுக்கு புறம்பாக செயற்படக் கூடாது என்றும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு கடந்த தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணால் ஆக்கப்பட்டவர்கள், காணி, அரசியல் கைதிகள் விடயங்களை முதன்மைப்படுத்தி தங்களின் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கோரியிருந்தனர்.

மக்களும் அதற்கான ஆணையை வழங்கியிருந்தார்கள். ஆனால் தற்போது எங்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் அதற்கு மாறாக செயற்படுகின்றனர் என்றும் கவனயீர்ப்பில் ஈடுபட்டுள்ள மக்கள் குற்றம் சாட்டினர்.

தாங்களும் சுழற்சி முறையில் தொடர்ந்தும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (2-312-15)

வன்னி வலம்

## கால்நடைப் பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல் மார்ச் 2 இல் நடைபெறும்

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட பாரதிபுரம் பகுதியில் கால்நடைப் பண்ணையாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடல் எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாரதிபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கால்நடை வளர்ப்போருக்கான அமைப்புக்கள் இணைந்து கால்நடைகளுக்கு ஏற்படும் இடர்களை தெரியப்படுத்தி, அது தொடர்பான தீர்வு ஆராயப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அதிகளவானோரின் வாழ்வாதாரத் தொழிலாக கால்நடை வளர்ப்பு தொழிலே காணப்படுகின்றது.

இதேவேளை தற்போது கால்நடை வளர்ப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

கால்நடைகளுக்கு உரிய மேய்ச்சல் தரைகள் இன்மையால் கால்நடை வளர்ப்போர் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்து வருகின்ற அதேவேளைதங்களுடையமாதாந்த வருமானத்தையும் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட கனகாம்பிகைக் குளம், பாரதிபுரம், மலையாளபுரம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லையோரக் கிராமங்களான பொன்னகர், இந்துபுரம், செல்வபுரம், திருமுறிகண்டி போன்ற பிரதேசங்களில் உள்ள கால்நடை வளர்ப்போருக்கான விசேட கலந்துரையாடலாக இதனை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (2-15)

## மகா சிவராத்திரியை முன்னிட்டு
## திருக்கேதீச்சரத்திற்கான பாதயாத்திரை இன்று வெள்ளாங்குளத்தைச் சென்றடையும்



(மன்னார்)

மகா சிவராத்திரியை முன்னிட்டு நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் இருந்து திருக்கேதீச்சரம் வரையான பாதையாத்திரை கடந்த 19 ஆம் திகதி காலை 7.30 மணியளவில் நல்லூர் கந்த சுவாமி முன்றலில் இருந்து ஆரம்பித்தது.

இப் பாதையாத்திரை நேற்றையதினம் யாழ்.- மன்னார் பூநகரி வீதி ஊடாக பூநகரி பிரதேசத்திலுள்ள பல்லவராயன்கட்டு சேர்லை முருகன் ஆலயம், கிராஞ்சி கற்பக விநாயகர் ஆலயம், நாகபடுவான் ஞானவைரவர் ஆலயம், முழங்காவில் பிள்ளையார் ஆலயம், முத்துமாரி அம்மன் ஆலயம் வரை சென்று செல்லக் கதிர்காமம் ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தைச் நேற்று இரவு சென்றடைந்தது.

இன்று அதிகாலை 4 மணிக்கு பாதயாத்திரை வெள்ளாங்குளம் சென்று இலுப்பைக்கடவை கட்டாடி வயல் பிள்ளையார் கோவில் ஊடாக வேட்டையா முறிப்பு அம்மன் ஆலயத்தை இரவு சென்றடையும். (2)

## காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஐ.நா.செயலருக்கு மகஜர் கையளிப்பு



காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த உண்மைத் தன்மையை வெளிப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்து, ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கான மகஜர், கிளிநொச்சி 155 ஆம் கட்டை பகுதியில் அமைந்துள்ள ஐக்கியநாடுகள் உலக உணவுத்திட்ட அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் முன்னெடுத்து வரும் கவனயீர்ப்புப் போராட்டம்நேற்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்த நிலையில், அன்றைய தினம் முற்பகல் குறித்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

தமது பிள்ளைகளின் உண்மை நிலையை கண்டறியும்வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படும் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இதன்போது தெரிவித்துள்ளனர். (2-312)

## இராணுவத்தின் சிவில் அலுவலகம் தேராவிலில் இருந்து அகற்றப்பட்டது

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள மூங்கிலாறு தேராவில் பகுதியில் அமைந்திருந்த இராணுவத்தினரின் சிவில் அலுவலகம் நேன்று அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இறுதி யுத்தத்தின் பின்னர் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் விசுவமடு, உடையார் கட்டு, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் பொதுமக்கள் மீள்குடியேற்றப்பட்டபோது அவர்களின் விபரங்களை திரட்டுவதற்காகவும்,பொது மக்கள் சந்திப்புக்காகவும் இந்த தேக்கங்காட்டு இராணுவ அலுவலகம் திறக்கப்பட்டு செயற்பட்டு வந்தது.

ஆயினும் பொதுமக்கள் இந்த அலுவலகத்திற்குச் சென்று தமது தேவைகளை பெற்றுக் கொள்ளுதல் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

இந்த சிவில் படை முகாம் தென்னிலங்கையில் இருந்து முல்லைத்தீவுக்கு சுற்றுலா செல்லும் சிங்கள மக்களின் நலன் சார்ந்த செயற்பாடுகளையும் மேற்கொண்டு வந்த நிலையில்,தற்போது சிவில் படையினர் அலுவலகம் அங்கிருந்து அகற்றப்பட்டுள்ளது. (2-15)

## பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்திற்கு யாழ்.பல்கலை. மருத்துவ மாணவர்கள் ஆதரவு

கேப்பாப்பிலவுக் குடியிருப்பு மக்களின் காணி விடுவிப்பு போராட்டம் பல சவால்களுக்கு மத்தியில் நேற்று 22 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

கடந்து 31 ஆம் திகதி பிலவுக்குடியிருப்பு விமானப் படையினரின் முகாம் முன்பாக கொட்டகைகள் அமைத்து மக்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் இரவு கடும் பனிக்கு மத்தியிலும் 22 ஆவது நாளாகவும் போராட்டம் எட்டியுள்ள நிலையில் இதுவரை எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

நேற்றைய தினம் மக்களுடம் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பிரிவு மாணவர்கள் கலந்துரையாடி அவர்களுக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்டனர். (2-281)

22 ஆவது நாள்



# புதுக்குடியிருப்பில் எட்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது உணவுத்தவிர்ப்பு



புதுக்குயிருப்பு மையப்பகுதியில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தை வெளியேறுமாறு கோரியும் கோப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக பொதுமக்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் நேற்று 19 ஆவது நாளாக எட்டியுள்ள அதே வேளை சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்று எட்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்: பனிக்கன்குளம், மல்லாவி செய்தியாளர்)

## நாகதம்பிரான் ஆலய உற்சவகால முன்னாயத்த ஆலோசனைக்கூட்டம்

### பொலித்தீன் பாவனைக்கு முற்றாகத் தடை



(பரந்தன்)

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் இவ்வாண்டுக்கான வருடாந்த பொங்கலை முன்னிட்டு உற்சவ முன்னாயத்த ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற்றது.


எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள இப்பொங்கல் விழாவுக்கான ஏற்பாட்டு கூட்டத்தில் பண்டமெடுத்தல், சுகாதாரம், போக்குவரத்து, வீதி அபிவிருத்தி, குடிநீர், பாதுகாப்பு, சிரமதானம், கடை வாடகை போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

ஆலய உற்சவ காலங்களில் பொலித்தீன் பாவனை முற்றாக தடைசெய்யப்படுவதோடு மாற்றீடாக காகிதாகி பைகள்மற்றும்பனையோலை பெட்டிகளை பயன்படுத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் தின்பண்டங்கள், குளிர்பானங்கள், குடிநீர் என்பவற்றின் சுகாதாரம் உச்ச அளவில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் பி.அரியரட்ணம் கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன், உதவி மாவட்ட செயலாளர் த.பிருந்தாகரன், உள்ளூராட்சி ஆணையாளர் கரைச்சி பிரதேச சபை செயலாளர் மாவட்ட பொலிஸ் உதவி அத்தியட்சகர் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பல திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்.ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள், பக்தர்கள என பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-312)

## பாராளுமன்றம் சென்றும் காணிப்பிரச்சினை தொடர்பில் எதுவித தீர்வும் கிடைக்கவில்லை

### உணவுத் தவிர்ப்பில் பங்கேற்றார் சிவமோகன் எம்.பி



(பனிக்கன்குளம்)

பொதுமக்களின் காணிகளிலுள்ள இராணுவத்தை வெளியேறுமாறு கோரியும் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக பொதுமக்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் நேற்று பத்தொன்பதாவது நாளை எட்டியுள்ள அதே வேளை சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்று எட்டாவது நாளாக முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் எதுவித தீர்வுகளும் கிடைக்காத நிலையில் நேற்று பாராளுமன்றத்துக்கு செல்லாது மக்களோடு உணவுதவிர்ப்பு போராட்டத்தில் வன்னி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் ஈடுபட்டுள்ளார்.


இந்தப் போராட்டம் கடந்த மூன்றாம் திகதி முதல் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்னால் இடம் பெற்று வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 49 பொதுமக்களுக்கு சொந்தமான 19 ஏக்கர் காணிகளை விடுவிக்குமாறு தெரிவித்தே, பொதுமக்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

எனினும் கடந்த 9 ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சிலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதும் இதுவரை எந்தவொரு தீர்வும் முன்வைக்கப்படவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் கருத்து தெரிவிக்கையில், பலதடவைகள் பாராளுமன்றில் கதைத்தும் காணிப் பிரச்சினை தொடர்பாக எந்த பதிலும் கிடைக்கவில்லை. எனவே பாராளுமன்றிற்கு சென்றும் எந்தப் பலனுமில்லை என தெரிவித்தார்.

இந்த நிலையில் இப்போராட்டம் தொடர்ந்து இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (2-281-15)




## கற்றல் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கு கமநல கல்வி அபிவிருத்தி நிதியம் உதயம்



வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்குட்பட்ட ஓமந்தை கமநல சேவைநிலையத்தின் கீழுள்ள விவசாயகுடும்பங்களைச்சேர்ந்த மாணவர்களின் கல்விகற்றல் அடைவு மட்டத்தை உயர்த்துவதற்காக ஓமந்தையில் கமநல கல்வி அபிவிருத்தி நிதியம் என்னும் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை ஓமந்தை கமநல அபிவிருத்தி நிலையத்தின் கேட்போர் கூடத்தில் ஓமந்தை பகுதி கமநல அபிவிருத்தி திணைக்களத் தலைவர் ஏ.நாகராசா தலைமையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, ஓமந்தை கமநல சேவை நிலையப் பிரிவானது அதிகமான விவசாயக்குடும்பங்களைக் கொண்டதுடன் நாட்டில் இடம் பெற்ற யுத்த சூழ்நிலைகளாலும் மற்றும் ஏனைய வழிகளாலும் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்ட பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் காணப்படும் குடும்பங்களை கொண்ட பிரதேசமாகும்.

இந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களில் பலர் திறமையான ஆற்றல் இருந்தும் கூட கல்வியைத் தொடர முடியாமல் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியதால் சில மாணவர்கள் பாடசாலை கல்வியை விட்டு இடைவிலகி வருகின்றனர். இந்நிலையில் இவ்வாறான இப்பகுதி மாணவர்களின் தொடர் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் ஓமந்தை கமநல அபிவிருத்தி திணைக்கள பிரிவுக்குட்பட்ட விவசாயிகள், கல்வித்துறை சார்ந்தோர், வர்த்தகப் பிரிவினர் ஆகியோரை உள்ளடக்கி கல்விக்கான உதவியை வழங்கும் நோக்கோடு இவ் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார், ஓமந்தைப் பகுதி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.திலீபன், கமநல திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள், அப்பகுதி பிரமுகர்கள் எனப்பலரும்கலந்துகொண்டிருந்தனர். (2-15-250)

## காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களை சந்தித்து கலந்துரையாடினார் அமைச்சர்



(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் வலிந்து காணாமற் போனவர்கள், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை ஆகியன தொடர்பில் தெளிவான தகவல்களை வெளிப்படுத்தக் கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் நேற்று முன்தினம் தொடக்கம் கிளிநொச்சி கந்த சுவாமி ஆலய முன்றலில் தொடர் போராட்டத்தை இரவு பகலாக ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ள காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை அமைச்சர் பா. டெனிஸ்வரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோர் சந்தித்து கலந் துரையாடியுள்ளனர்.


இம் மக்களை நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்களை வடக்கு மாகாண போக்குவரத்து மீன் பிடி அமைச்சர் பா.டெனீஸ்வ ரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் ஆகியோர் சென்று சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (2-312)

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2017-13.03.2017

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

## வசதி வாய்ப்புக்கள் பெருகும் நேரம்!



முன்னேற்றம் காண முன்கோபத்தை விலக்க வேண்டும் என்று சொல்லும் தனுசு இராசி அன்பர்களே!

உங்களின் மாசி மாதக் கிரக நிலைகளைஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் குரு பகவான் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குரு சுக ஸ்தானத்திற்கும் அதிபதியாவார். எனவே அவரது சஞ்சாரம் உங்கள் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களையும், ஏற்றங்களையும் வழங்கப் போகிறது. குறிப்பாக பொரு ளாதார முன்னேற்றமும், வங்கிச் சேமிப்பில் வளர்ச்சியும் ஏற்படும்.

நினைத்த காரியத்தை முடிக்க முடிய வில்லையே என்று கவலைப்பட்டவர்கள், அந்தக் காரியங்களை இந்த மாதத்தில் வெற்றிகரமாக முடிப்பீர்கள். பொங்கல், புத்தாண்டு செலவு என கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகியிருக்கலாம். குருவின் சஞ்சாரம் அந்த நிலையை மாற்றி, அனைத்து கொடுக்கல்- வாங்கல்களையும் ஒழுங்குபடுத்தப் போகிறது. லாப குருவின் ஆதிக்கத்தால் தொழில் வளம் மேலோங்கும். துணையாக நிற்பவர்கள் தோள் கொடுத்து உதவுவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல காரியங்களை முடித்து வைப்பர்.

மகன் அல்லது மகள் வழியில் நடைபெற வேண்டிய சுபகாரியங்கள், வருடக்கணக்கில் தடைப்படுகிறதே என்று கவலைப்பட்டிருப்பீர்கள். அந்த கவலையை மகிழ்ச்சியாக்கும் விதத்தில், நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு, புதிய பொறுப்புகள் மற்றும் பதவிகள் கிடைக்கலாம். ஏழரைச் சனியில் விரயச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. எனவே உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றம், ஊர்மாற்றம், உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை அவரவர் தகுதிக்கேற்ப தானாக வந்து சேரும். இந்த மாதம் வியாழன் தோறும் குரு தட்சிணாமூர்த்தி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சிவராத்திரி விழா இந்த மாதம் நடைபெற இருப்பதால், அன்றையதினம் சிவனை வழிபட்டு சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

கும்ப புதனும், மீன புதனும்!

பெப்ரவரி 16ஆம் திகதி கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். எனவே, உடன்பிறப்புகளின் ஒத்துழைப்புக் கிடைக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். மார்ச் 5ஆம் திகதி மீனத்தில் புதன் நீச்சம் பெறுகிறார். இதன் விளைவாக 7,10 இற்கு அதிபதி நீச்சமடைவதால் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் உருவாகும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு அழைப்புகளை ஏற்றுக் கொள்வது பற்றிச் சிந்திப்பீர்கள். உறவினர்களால் நன்மை ஏற்படும்.

குருவின் வக்ர இயக்கம்!

பெப்ரவரி 22ஆம் திகதி துலாம் ராசிக்குள் குரு வக்ரம் பெறுகிறார். மேலும் மார்ச் 10 ஆம் திகதி கன்னி இராசிக்கு குரு சென்று




வக்ரம் பெறுகிறார். இந்தக் காலத்தில் எச்சரிக்கை அதிகம் தேவை. முற்றிலும் குணமாகியிருந்த உடல் நிலை, மீண்டும் தொல்லை கொடுக்கலாம். மருத்துவ செலவு செய்யும் அமைப்பு உண்டு. வாகனப் பழுதுகளால் வாட்டம் ஏற்படும்.

மேட செவ்வாயின் சஞ்சாரம்!

பெப்ரவரி 26ஆம் திகதி மேடத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். விரயாதிபதி பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் விரயம் ஏற்படும். அவர்களுக்குரிய கடமைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சிக்கு உதவி செய்வீர்கள். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துகளால் இலாபம் உண்டு.

இந்த மாதம் பௌர்ணமி அன்று கிரிவலம் வருவது பலன் தரும். மேலும் குரு வழிபாடும் குதூகலம் வழங்கும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இந்த மாதம் இராசிநாதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மனக் குழப்பம் அகலும். பொருளாதாரப் பற்றாக் குறை நீங்கி புதிய திருப்பங்கள் ஏற்படும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். தர்ம காரியங்களில் ஈடுபாடு செலுத்துவீர்கள். கணவன்-மனைவிக்குள் கனிவும் பாசமும் கூடும். குழந்தைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தனியாக தொழில் செய்ய வாய்ப்புகள் உருவாகும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்துசேரும். சிவாலய வழிபாடு சிறப்பை வழங்கும். உங்கள் பேரில் சொத்துகள் வாங்க முன்வருவீர்கள். உடன் பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

## பதவி மாற்றங்களை பரிசீலனை செய்யும் நேரம்!



செயற்படும் காரியங்களில் ஜெயம் கிடைக்க விரும்பும் மகர இராசி அன்பர்களே!

உங்களின் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். 5,10 இற்கு அதிபதியான சுக்ரன் உச்சம் பெற்றிருக்கிறார். எனவே வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்க முக்கிய புள்ளிகள் உதவிக்கரம் நீட்டுவர்.

இருப்பினும் 10இல் அல்லவா குரு சஞ்சரிக்கிறார். என்வே, பதவி மாற்றங்கள், இடமாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் போன்றவற்றை பரிசீலனை செய்யும் நேரமாக இருக்கிறது. அடிக்கடி அலுவலகத்தில் பிரச்சினைகள் தலைதூக்கலாம். இந்த இடத்தில்வேலை பார்க்கலாமா, இல்லை வேறு இடத்திற்கு வேலைக்குச் செல்லலாமா? என்று ஆருயிர் நண்பர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

அடுத்தடுத்து முடிவெடுக்க முடியாமல் மனக்குழப்பம் அதிகரிக்கும். மேலும் 2 இல் கேதுவும், 8இல் ராகுவும் அமர்ந்து ஏதேனும் ஒரு குழப்பத்தையும், தடையையும் உருவாக்கும் விதத்தில் சஞ்சரிக்கிறார்கள். இன்னல்கள் தீர ஈஸ்வரனை வழிபடவேண்டும் என்று எல்லோருக்கும் தெரியும்.

அந்த அடிப்படையில் இந்த மாதம் ஈஸ்வரனை போற்றிக் கொண்டாடும் சிவராத்திரி விழா வருகின்றது. அன்றையதினம் 6 கால பூஜையில் ஒரு கால பூஜையிலேனும் கலந்து கொண்டு சிவனையும், உமையவளையும் சிந்தையில் நிறுத்தி வழிபட்டால் கவலைகள் மாறும்.

அதுமட்டுமல்லாமல் சர்ப்ப கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கியிருப்பதால் உங்களுக்கு ஏற்றமும், இறக்கமும் வந்து கொண்டேயிருக்கும். குறுக்கீடு சக்திகள் விலக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை அனுகூலமான நாளில் செய்து கொள்வது நல்லது. மேலும் 10இல் வந்த குருவால் பதவியில் இடையூறுகள் ஏற்படாமல் இருக்க வியாழக்கிழமை தோறும் முல்லைப்பூ மாலை அணிவித்து குரு தட்சிணாமூர்த்தியை வழிபட்டு வருவது நல்லது.

கும்ப புதனும், மீன புதனும்!

பெப்ரவரி 16ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6,9இற்கு அதிபதியானவர் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குடும்ப முன்னேற்றம் கூடும். தந்தை வழியில் தன இலாபம் கிடைக்கும். வந்த வரன்களைப்பரிசீலனை செய்து ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து திருமண விழா நடத்தும் முயற்சியில் அக்கறை எடுத்துக் கொள் வீர்கள். மார்ச் 5ஆம் திகதி புதன் மீனத் தில் நீச்சம் பெறும்போது, உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல் கிடைக்கலாம். மேலதிகாரிகளின் அனுகூலத்தோடு சலுகைகளைப் பெற்றுக் கொள்வீர்கள்.




குருவின் வக்ர இயக்கம்!

பெப்ரவரி 22ஆம் திகதி துலாம் இராசியில் குரு வக்ரம் பெறுகிறார். மீண்டும் மார்ச் 10 ஆம் திகதி கன்னி இராசிக்குச் சென்று வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர காலத்தில் தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். பயணங்கள் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாக அமையும். பூர்வீகச் சொத்துகளில் ஏற்பட்ட பஞ்சாயத்துகள் நல்ல முடிவிற்கு வரும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். உறவினர் பகை மாறும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவார்கள்.

மேட செவ்வாயின் சஞ்சாரம்!

பெப்ரவரி 26ஆம் திகதி மேட இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். 4இற்கு அதிபதி 4இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் எல்லா விதமான யோகங்களும் வந்துசேரும். உடல் நலம் சீராகும். உள்ளம் மகிழும் விதத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறும். தொழிலில் கிளைத் தொழில்கள் உருவாகும். சொத்துகளாலும், சொந்த பந்தங்களாலும் நன்மை கிடைக்கும் நேரமிது. இந்த மாதம் வியாழக்கிழமை தோறும் தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

இந்த மாதம் மாற்றங்களும், ஏற்றங்களும் வந்து சேரும். குடும்பச் சுமை கூடும். குடியிருக்கும் வீட்டை மாற்றியமைக்க நேரிடலாம். பெற்றோரின் ஆதரவு குறைவாகவே கிடைக்கும். உரிமையோடு பழகுபவர்களிடம் பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கணவன்-மனைவிக்குள் அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் உண்டு. குடும்பச் செலவுகள் கூடும். பிள்ளைகளாலும் விரயம் ஏற்படலாம்.

இராகு-கேதுக்களுக்குரிய சிறப்பு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அப்பொழுது தான் பகை நட்பாகி பல விதங்களிலும் நன்மையை ஏற்படுத்தும். சிவராத்திரி அன்று சிவனை வழிபடுவது நல்லது.

(தொடரும்)

# தென் சீனக் கடலில் பதற்றம்

## அதிநவீன போர்க் கப்பல்களுடன் களமிறங்கியது அமெரிக்கா



அதிநவீன போர்க் கப்பல்களுடன் தென் சீனக் கடற்பகுதியில் அமெரிக்கா ரோந்து நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையால் கொரிய தீபகற்ப பகுதியில் பெரும் அச்சுறுத்தலான சூழல் உருவாகியுள்ளதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

மட்டுமின்றி சீனா மற்றும் அமெரிக்கா இடையே எல்லை மற்றும் வர்த்தகம் தொடர்பான அழுத்தம் ஏற்பட்டதன் பின்னரே இந்த ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகின் மூன்றில் ஒரு பகுதி கப்பல் போக்குவரத்து தென் சீனக் கடல் வழியிலேயே இடம்பெறுகின்றது மட்டுமின்றி மிக நீண்ட காலமாக தென் சீனக் கடற்பகுதியில் உள்ள நாடுகளுடன் சீனாவுக்கு பிரச்சினை இருந்து வருகிறது. இந்நிலையில் தென் சீனக் கடற் பகுதியில் சீனா தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.எனினும், தென்சீனக் கடலில் உரிமை கோரி பிலிப்பைன்ஸ், வியட்நாம், புருனை, தாய்வான், மலேசியா, கம்போடியா, சிங்கப்பூர், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகள் சீனாவுடன் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன.

சீனாவின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா பலமுறை கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் இந்த கண்டனத்திற்கு சீனா கடந்த 15ஆம் திகதி கடும் எச்சரிக்கையும் விடுத்திருந்தது.

இந்த நிலையில் அமெரிக்கா தனது அதி நவீன விமானம் தாங்கி போர்க்கப்பல்களுடன் தென் சீனக் கடற்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது சட்டத்துக்கு புறம்பானது மட்டுமல்ல தூண்டிவிடும் நடவடிக்கை எனவும் சீனா கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.குறித்த ரோந்து நடவடிக்கையில் யு.எஸ்.எஸ் Carl Vinson விமானம் தாங்கி போர்க்கப்பல், யு.எஸ்.எஸ் Wayne E. Meyer நாசகார கப்பல், F/A-18 jet fighters விமானம் உள்ளிட்டவைகள் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்காவின் இந்த திடீர் ரோந்து நடவடிக்கையின் காரணமாக கொரிய தீபகற்ப பகுதியில் பெரும் பதற்ற நிலை உருவாகியிருப்பதாக அரசியல் நோக்கர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (இ-7)

# புலிகளால் விமலுக்கு ஆபத்து

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பியுமான விமல் வீர வன்ச, எல்.ரீ.ரீ.ஈ அமைப்புக்கு (தமிழீழ விடுதலைப் புலிகள்) எதிரான கருத்துகளை கூறியவர். அவ்வமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் பலர் சிறையில் உள்ளனர். அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால், அவருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என, விமலின் சார்பில் மன்றில் ஆஜரான சட்டத்தரணி கோரி நின்றார். அதனை கவனத்தில் எடுத்த கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன, எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களால், சந்தேகநபருக்கு அச்சுறுத்தல் காணப்படுவது மற்றும் அவரை, சிறைக் கூண்டுக்குள் அடைக்கும் நேரம் தொடர்பில் கவனத்தில் எடுக்குமாறு, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பணித்தார். 91 மில்லியன் ரூபாய் அரச நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, விமல் வீரவன்சவுக்கு எதிரான வழக்கு, நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டது. இந்த வழக்கின் முதலாவது சந்தேகநபரான விமல் வீரவன்ச



சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க, தமது சேவைபெறுநர்அடைக்கப்பட்டிருக்கும் சிறைக்கூடு மாலை 5.30க்கு மூடப்பட்டு, காலை 6 மணிக்கே திறக்கப்படும். இதனால் இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்கு அவர் சிரமங் களை எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டார். அத்துடன், நீண்ட நாட்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதால் அவருடைய அடிப்படை உரிமை மீறப்படுவதாகக் கூறிய அவர், தனது சேவை பெறுநர், நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால், அவருக்கு பத்திரிகைகளை விநியோகிக்க வேண்டும் எனவும் அதைக் கொண்டே, நாடாளுமன்றத்தில், அவரால் உரையாற்ற முடியும் எனவும் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். அதுமட்டுமன்றி, தனது தரப்பைச் சேர்ந்தவருக்கு, உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றும் மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.. நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு, அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரமே, பத்திரிகைகள் வழங்கப்படுவதாகவும் தேவையெனின் சிறைச்சாலை அதிகாரிக்கு கடிதம் மூலம் தெரிவித்து பெற்றுக் கொள்ளலாம் என நீதவான் அறிவித்தார். இதேவேளை, சந்தேக நபர் மீதான உயிர் அச்சுறுத்தல் மற்றும் அவரை சிறைக் கூண்டுக்குள் அடைக்கும் நேரம் தொடர்பில் கவனத்தில் எடுக்குமாறு, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதவான் கட்டளையிட்டார். இந்நிலையில், விமல் வீரவன்சவின் விளக்கமறியல் எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி வரை நீடித்தது. அத்துடன், 2ஆவது சந்தேக நபரான, அரச பொறியியல் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் சமந்த லொக்கு ஹென்னதிகேயை 50,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல அனுமதியளித்த நீதவான், அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதித்ததுடன், கடவுச் சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். இரண்டாவது சந்தேக நபரின் தாய்க்கு 76 வயதாகவும் மூத்த பிள்ளை, இவ்வருடம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குக் குத் தோற்றவுள்ளதாகவும் 12 வயதான இரண்டாவது பிள்ளை மனரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறி, சட்டத்தரணி ஷவேந்திர பெர்னாண்டோ, பிணை கோரியிருந்தார். அதன் அடிப்படையிலேயே அவருக்கு பிணை வழங்குவதாக, நீதவான் அறிவித்தார். தேசிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சராக இருந்த போது, 2011 - 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில், தனது அமைச்சுக்குக் கீழிருந்த, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட 40 வாகனங்களை தமது அரசியல் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தி, 91 மில்லியன் ரூபாய் அரச நிதியை மோசடி செய்ததாக, நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## ஊமத்தை

Botanical Name: Datura metal
Family Name: Solanceae
English Name: Black or purple Datura
Sinhala Name: Ela-attana

இது ஓராண்டுத் தாவரமாகும். ஊமத்தையின் தண்டானது 30-60 சென்ரி மீற்றர் உயரமானது. சில தண்டுகள் Zig-Zag வடிவில் வளைந்து வளரக்கூடியது. தண்டானது அழுத்தமாகவும் பளபளப்பாகவும் காணப்படும். ஆனால் சில ஊமத்தையின் தண்டு சிறிது கரடுமுரடாகவும் சில மயிர்போன்ற அமைப்புக்களும் காணப்படும். ஊமத்தையின் இலை உதிர்ந்த பின் அடையாளம் தெளிவாகக் காணப்படும். இலைகள் தனியிலைகளாகவும் ஒன்றுவிட்ட இலை அமைப்புள்ளதாகவும் காணப்படும். இலைகள் 7.5-15 சென்ரி மீற்றர் நீளமானதாகக் காணப்படும். இலைகள் நீள் வட்ட வடிவிலும் இலையின் அடியில் நடுநரம்பு 2 பக்கங்களையும் சமமில்லாமல் பிரிப்பதாகவும் அமைகிறது. இலை நுனி கூராகவும் காணப்படும். இலைகள் சில பளபளப்பாகவும் அழுத்தமாகவும் காணப்பட்டாலும் சில இலைகள் உரோமம் போன்ற மயிரமைப்பு காணப்படுவதால் அழுத்தமற்றதாகவும் பளபளப்பற்றும் காணப்படும். இலையின் மேற்பரப்பு மங்கிய பச்சை நிறமாகவும் இலையின் கீழ்ப் பக்கம் வெளிறியும் காணப்படும். நரம்பமைப்புக்களில் ஒளி ஊடுபுகவிடக்கூடிய இயல்புள்ள போல இளம் மஞ்சள் நிறத்தில் காணப்படும். இலைக் காம்பானது 2.5-5 சென்ரி மீற்றர் நீளமானது.

பூக்கள் இருபாலானவை. வெள்ளை, ஊதா நிறப்பூக்களில் காணப்படும். பெரும்பாலும் பெரிய பூக்களாகவே காணப்படும். அல்லி, புல்லிகள் இவ் இரண்டு ஐந்து காணப்படும்.

இதன் பழமானது சதைப்பற்றாக காணப்படும். பல எண்ணிக்கையில் விதைகள் காணப்படும். விதைகள் கபில நிறமானதாகவும் அழுத்தமாகவும் காணப்படும். பூக்களானது தை தொடக்கம் பங்குனி வரை பூக்கும்.

மருத்துவப் பயன்கள்

இலையை உலர்த்தி பொடித்து 50-150 மில்லி கிராம் அளவாக உள்ளுக்கு கொடுத்தால் இரைப்பிருமல் நீங்கும்.





இலையை வதக்கி ஒற்றடம் கொடுப்பதால் கீல்வாதம் கட்டிகளால் ஏற்படும் வலி, பால்கட்டிக்கொள்வதால் உண்டாகும் வலி நீங்கும்.

இலையுடன்சமவளவுஅரிசிமா சேர்த்து அரைத்து தணலில் களிப்பதாகவேகவைத்து இளஞ்சூட்டில் பற்றுப்போட மூட்டுவீக்கம், கட்டிகளில் ஏற்படும் வலி, வெளிமூலம் என்பன நீங்கும்.

இலைச்சாறு 2 அல்லது 3 துளியை கரும்பு வெல்லத்தில் கொடுத்து பகலில் மோர்ச் சோறும் இரவில் பால் சோறும் மூன்று நாட்களுக்கும் கொடுத்து வர வெறிநாய்க்கடி நஞ்சு நீங்கும். உப்பு, புளி என்பன முற்றிலும் நீக்கவேண்டும்.

இலைச்சாற்றில் 5-10 துளிகள் தயிரில் கலந்து கொடுக்க சிறு நீர்ப்பாதை அழற்சி நீங்கி சீழ்க்குருதிப் போக்கு நிற்கும்.

விதையை பசு நெய்யில் அரைத்து மூல முளையில் பூச அற்று விழும்.

விதையை தேனில் அரைத்து கொதிக்க வைத்து பூச கட்டிகள் கரையும். வீக்கம் குறையும். வலிக்கும் இடங்களில் தடவி வைக்க வலி நீங்கும்.

புழுவெட்டினால் முடி கொட்டிய இடங்களில் தடவி வர முடி மீண்டும் முளைக்கும்.

50 கிராம் விதையை ஒன்றிரண்டாய் இடித்து 400 மி.லீ. எண்ணெய் விட்டு 7,8 நாட்கள் அரைத்து வெயிலில் வைத்து வடிகட்டி எடுத்த எண்ணெயை அடி வயிற்றில் தடவ சூதக வயிற்றுவலி, நீர்த்தாரை எரிவு தீரும்.

இதன் இலையின் சாறை ஒன்று அல்லது 2 துளி காதில் விட காது வலி நீங்கும். இதை வீக்கத்திற்கும் தடவலாம்.

கரு ஊமத்தை இலைச் சாறு, தேங்காய் எண்ணெய் இரண்டையும் காய்ச்சி கண்டும் வேளை ஓமப்பொடி 34 கிராம் கூட்டி மெழுகுப்பதத்தில் வடிகட்டி அதில் கற்பூரம் பொடித்து பூசினால் குத்தல், உளைவு, குடைச்சல் நீங்கும்.

இதன் இலையை உலர்த்தி பொடி செய்து உள்ளுக்கு கொடுப்பின் இரைப்பிருமல் நீங்கும். (இரைப்பிருமல் என்றால் ஆஸ்துமாவாகும்)

அடிகாயங்களால் வீக்கம் ஏற்பட்டால் ஊமத்தம் இலைகளை நைய இடித்து சாறு எடுத்து வீக்கமுள்ள இடத்தில் கனமாக பூசினால் வீக்கம் உருகும்.

அரையாப்பு கட்டிகளுக்கு ஊமத்தம் இலைகளை மைபோல அரைத்து கோழி முட்டையின் வெள்ளைக் கருவை விட்டு பசைபோல குழைத்து அரையாப்பு கட்டியின் மேல் கனமாக பூசிவிடவேண்டும். காயக்காய அதன்மேலேயே பூசிவைத்து மறுநாள் காலையில் இளஞ்சூட்டு நீரில் பஞ்சை நனைத்து கழுவிவிட வேண்டும். மீண்டும் மீண்டும் போட்டு வர அரையாப்பு கட்டி பழுத்து உடையும்.

ஊமத்தையில் கரு ஊமத்தை என்று ஒரு வகை உண்டு. சாதாரண ஊமத்தைச் செடியை போல இதை எங்கும் காண முடியாது. இந்தக் கரு ஊமத்தையின் பூ ஊதாநிறமாக இருக்கும். கரு ஊமத்தை பூக்களை சேகரித்து வெயிலில் காயவைத்து சுருட்டு போல் சுருட்டி அதைப் பற்ற வைத்து புகைப்பிடித்தால் ஆஸ்துமா குறையும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஊமத்தையின் விதைகள் நச்சுத்தன்மையுடையது. இதனாலேயே இது நஞ்சுமூலிகை என்று கூறப்படுகிறது. இதன் இலைகளை நல்லெண்ணெயில் வதக்கி பொறுக்கக்கூடிய சூட்டில் ஒத்தடங்கொடுக்க வாதவலி, மூட்டுவலி, தாய்ப்பால் கட்டிக்கொண்டால் ஏற்படும் வலி ஆகியவை தணியும்.

ஊமத்தம் இலைகளை உலர்த்தி பொடித்து 2 கிராம் அளவு தேனில் கொடுக்க ஆஸ்துமா குணமாகும்.

ஊமத்தம் இலைகளையும் பூக்களையும் சேர்த்து உலர்த்தி சுருட்டி சுருட்டுப் போல் புகைத்தாலும் ஆஸ்துமா குணமாகும்.

ஊமத்தம்விதையை நெய்யில் அரைத்து மூலமுளையில் வெளிப்பூச்சாக பூசிவர அவை அற்றுவிழும்.

# பாலியல் குற்றவாளிகளின் பட்டியல் ஐ.நாவிடம் கையளிப்பு

இலங்கையில் பெண்களை கைது செய்து, தடுத்து வைத்து பாலியல் வன்புணர்வு மற்றும் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்படும் ஆறு இராணுவ அதிகாரிகளின் விபரங்களை சர்வதேச மனித உரிமை அமைப்பு ஐ.நாவிடம் சமர்ப்பித்துள்ளது. இது தொடர்பான விபரங்களுடன் கூடிய ஆவணங்களுடன் இரகசியமான இணைப்பில் 6 புகைப்படங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தென் ஆபிரிக்காவை தலைமையகமாக கொண்ட இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள்சபையிடம் இந்த தகவல்களை வழங்கியுள்ள மேற்படி அமைப்பு குற்றவாளிகளான இராணுவ அதிகாரிகளை பணியில் இருந்து நீக்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோருமாறு கேட்டுள்ளது.

இதேவேளை இந்த விபரங்களை இலங்கை அரசாங்கத்திடம் கையளித்து நம்பிக்கையான விசாரணையை நடத்தும் வரை அவர்கள் அனைவரையும் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யுமாறு பெண்களுக்கு எதிரான வேறுபாடுகள் தொடர்பான ஐ.நா.குழு கோரும் என தாம் எதிர்பார்ப்பதாக இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பின் பணிப்பாளர் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், அரசாங்கம் குற்றவாளிகளின் பெயர், விலாசங்களை எங்களிடம் தொடர்ந்தும் கோரி வந்தது. நாங்கள் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களின் விபரங்களை ஐ.நா.குழு ஊடாக வழங்கியுள்ளோம். நீதியை நிலைநாட்டும் கடும் தேவை அரசாங்கத்திற்கு இருக்கின்றதா என்பதை பார்ப்போம். அரசாங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் எமது அறிக்கையில் கூறியுள்ளோம். ஐ.நாஇகுழு அதன் முன்னேற்றங்களை கண்காணிக்க முடியும் என சூகா கூறியுள்ளார்.

குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள இராணுவ அதிகாரிகளில் மேஜர் ஒருவரும் லெப்டினன்ட் ஒருவரும் அடங்குகிறார். பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டை எதிர் நோக்கும் இலங்கையின் மூன்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், அவர்களிடம் சிக்கிய பெண்களின் சத்தியக் கடிதங்களின் பெயர்கள் ஐ.நா.குழுவிடம் வழங்கப்பட்டுள்ள விபரமான அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.

இந்த அதிகாரிகளில் ஒருவர் ஐ.நா. அமைதிக்காக்கும் படையில் சேவையாற்றியுள்ளார். நான்காவது அதிகாரி சித்திரவதை கொடுப்பதில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளார். 5வது அதிகாரி இந்த குற்றங்களுக்கு உத்தரவிட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இராணுவத்தினர் பெண்களை பாலியல் அடிமைகளாக பயன்படுத்த அவர்களை நீண்டகாலம் தடுத்து வைத்ததாக இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு முகாம்கள் தொடர்பான ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளது.

முகாம்கள் இயங்கியதாக கூறப்படும் நான்கு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கையில்உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு கூறியுள்ளது. வவுனியாவுக்கு அருகில் ஒரு முகாம், புத்தளத்திற்கு அருகில் ஒரு முகாம், கொழும்பில் ஒரு முகாம் , கொழும்புக்கு வெளியில் வடக்கு, கிழக்கு அல்லாத ஒரு பிரதேசத்தில் ஒரு முகாம் என இந்த முகாம்கள் இயங்கி வந்துள்ளன எனவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

விசாரணைகளை நடத்தாமை, பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் அமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம், ஐ.நா குழுவின் முன் கடுமையாக சாடியுள்ளது. சித்திரவதை மற்றும் பயங்கரமான பாலியல் தாக்குதல்களை வெளியிட்டுள்ள 55 பெண்கள் தொடர்பான முழுமையான விபரங்களை அமைப்பு தனது புதிய அறிக்கையில் உள்ளடக்கியுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் 48 பெண்களும் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியின் கீழ் 7 பெண்களும் பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என அதில் கூறப்பட்டுள்ளது. எது எப்படி இருந்த போதிலும் இராணுவம் திட்டமிட்டு பாலியல் குற்றங்களில் ஈடுபட்டது என்பதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு சிலர் அப்படியான குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம் என அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# பேருந்து கவிழ்ந்து விபத்து; 13 மாணவர்கள் உயிரிழப்பு



மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று பிலிப்பைன்ஸில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விபத்துக்குள்ளானதில் 13 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளின் போது, குறித்த பேருந்தில் 50 மாணவர்கள் பயணித்தனர் எனவும் பேருந்து தடுப்பில் ஏற்பட்ட கோளாறே இந்த விபத்து ஏற்படக் காரணம் எனவும் தெரியவந்துள்ளது.

விபத்துக்குள்ளான மூவர் சிகிச்சை பெறும் பொருட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போது உயிரிழந்தனர். (இ-12)

# தமிழகத்தில் பெண்கள், சிறுமிகளுக்கு பாதுகாப்பு இல்லை - ஸ்டாலின் புகார்

தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றும், தொடர்ந்து பெண்களும் சிறுமிகளும் , கொலை செய்யப்படும் சம்பவம் நடந்து கொண்டிருக்கிறது என்றும் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டினார்.

தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின், எண்ணூர் மீனவக்குடியிருப்பில் கொலை செய்யப்பட்ட சிறுமி ரித்திகா வீட்டுக்கு நேற்று முன்தினம் சென்று, ஆறுதல் தெரிவித்தார்.

இதன் பின்னர் அவர் நிருபர்களிடம் இவ்வாறு தெரிவித்தார். (இ-12)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு நிதிதிரட்டல்

(சென்னை)

ஐ.எஸ்.தீவிரவாத இயக்கத்துக்கு நிதி திரட்டிய சென்னையை சேர்ந்தவரை பொலிஸார் அதிரடியாக கைது செய்தனர்.

மேலும் 4 பேரை பிடிக்க தீவிரமடைந்துள்ளனர். ஐ.எஸ்.தீவிரவாத இயக்கம் அனைத்து மாநிலங்களிலும் தங்களது ஆதரவாளர்களுக்கு வலை விரித்து வருகிறது.

இதனை தடுப்பதற்காக மத்திய உளவு பிரிவினர், மாநில பொலிஸாருடன்இணைந்து தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ராஜஸ்தான் மாநிலத்தில் ஜமீல் முகமது என்ற இளைஞர் கைது செய்யப்பட்டார்.

ஐ.எஸ்.தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த இவரை அம் மாநிலத்தின் தீவிரவாத தடுப்பு பிரிவு பொலிஸார் பிடித்தனர். பொலிஸ் விசாரணையில், ஜமீல் முகமது தமிழகத்தை சேர்ந்த வாலிபர்களை குறிவைத்து காய் நகர்த்தி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

சென்னை மயிலாப்பூரை சேர்ந்த இக்பால் என்ற இளைஞனுடன் ஜமீல் நெருங்கிய தொடர்பில் இருந்தது தெரிய வந்தது. இக்பால் ஐ.எஸ். இயக்கத்துக்கு தமிழகத்தில் இருந்து நிதி திரட்டி கொடுக்கும் பணியில் ஈடுபட்டது வெளிச்சத்துக்கு வந்தது. அந்த வகையில் இக்பால், ஜமீல் முகமதுவிடம் ரூ.65 ஆயிரம் பணம் வாங்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து ராஜஸ்தான் பொலிஸார், தமிழக பொலிஸாரின் உதவியுடன் இக்பாலை தேடி வந்தனர். இந்தநிலையில் இக்பால், கடந்த சில தினங்களுக்கு முன்னர் தங்க கடத்தலில் சிக்கினார். மத்திய வருவாய் புலனாய்வு பிரிவினர் சென்னையில் இக்பாலை நேற்று முன்தினம்கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர்.

இதுபற்றி தகவல் கிடைத்ததும், ராஜஸ்தான் பொலிஸார் சென்னைக்கு நேற்று விரைந்து வந்தனர். பின்னர் புழல் சிறையில் இருந்த இக்பாலை ராஜஸ்தான் மாநில நீதிமன்றில் கைது உத்தரவு பெற்று முறைப்படி கைது செய்தனர். ஐ.எஸ்.தீவிரவாதியான ஜமீல் முகமதுவுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து நிதி உதவி செய்த குற்றச்சாட்டின் பேரில் இக்பால் கைது செய்யப்பட்டார். பின்னர் அவரை ராஜஸ்தானுக்கு கொண்டு சென்றனர்.

பொலிஸார் நடத்திய விசாரணையில், இக்பால் நீண்ட நாட்களாகவே ஐ.எஸ்.இயக்கத்துடன் தொடர்பில் இருந்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டது. (இ-12)

# ஓ.பி.எஸ். - ஜெ.தீபா சுற்றுப்பயணம்

(சென்னை)

தமிழகம்முழுவதும்ஓ.பன்னீர்செல்வம் மற்றும் தீபா கூட்டாக சுற்றுப்பயணம் செல்ல திட்டமிட்டு உள்ளனர். ஜெயலலிதா பிறந்த நாளான நாளை மறுதினம் 24ஆம் திகதி, ஆர்.கே. நகரில் பிரமாண்ட பொதுக் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க. பொதுச் செயலாளராகவும், அக்கட்சியின் சட்டசபை குழு தலைவராகவும் சசிகலா தேர்வு செய்யப்பட்டார். இதையடுத்து முதலமைச்சராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் இராஜினாமா செய்தார். சசிகலா தரப்பினர் மீது பல்வேறு அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை அவர் முன்வைத்தார்.

இதைத்தொடர்ந்து ஓ.பன்னீர்செல்வம் அணி மற்றும் சசிகலா அணி என அ.தி.மு.க. இரண்டாக உடைந்தது. சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலாவுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதால், அவர் முதலமைச்சராக பதவி ஏற்க முடியாத சூழல் ஏற்பட்டது. இதையடுத்து எடப்பாடி பழனிச்சாமி சட்டசபை குழு தலைவராக அறிவிக்கப்பட்டார்.

எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக பதவியேற்பதை தடுக்கும் வகையிலும், அ.தி.மு.கவை கைப்பற்றும் நோக்கிலும் ஓ.பன்னீர்செல்வம் அணி தீவிரமாக செயற்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டம் கூவத்தூர் சொகுசு விடுதியில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சில எம்.எல்.ஏ.க்களும் ஓ.பன்னீர்செல்வம் அணிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

இந்த நிலையில் கடந்த 18ஆம் திகதி சட்டசபையில் நடந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை பெரும்பான்மையை நிரூபித்தது. எனவே அடுத்த கட்டமாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து ஓ.பன்னீர்செல்வம் அணியினர் தீவிர ஆலோசனை செய்து வருகின்றனர்.

சென்னை அடையாறு கிரீன்வேஸ் சாலையில் உள்ள இல்லத்தில் ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களான மதுசூதனன், பொன்னையன், மைத்ரேயன் எம்.பி., கே.பி.முனுசாமி, நத்தம் விஸ்வநாதன், க.பாண்டியராஜன், சண்முகநாதன், மனோஜ்பாண்டியன் உட்பட மூத்த நிர்வாகிகளுடன் தீவிர ஆலோசனை மேற்கொண்டார். பின்னர் க.பாண்டியராஜன் நிருபர்களிடம் கூறியதாவது,

ஒன்றரை கோடி உறுப்பினர்களை கொண்ட அ.தி.மு.கவின் கொள்கைகள் கோட்பாடுகளை ஒருமுகப்படுத்தும் வகையில் தொழில்நுட்ப ரீதியாக 'வட்ஸ்-அப்', 'பேஸ்புக்' போன்ற சமூக வலைத்தளங்களில் கட்சியின் கருத்துகள் முன் வைக்கப்படும். இப்போது இருக்கிற எழுச்சியில் அ.தி.மு.க. தொண்டர்கள் ஒவ்வொருவரும் பங்கு பெறும் வகையில் அனைத்து இடங்களுக்கும் ஓ.பன்னீர்செல்வம் சுற்றுப் பயணம் மேற்கொள்வார்.

ஜெயலலிதா விட்டு சென்ற கட்சி கட்டமைப்புகளை உணரும் வகையில் கட்சி நிர்வாகிகள் ஒருங்கிணைக்கப்பட்டு மண்டலங்கள், மாவட்டங்கள், வட்டங்கள் வாரியாக கட்சி கட்டமைப்புகள் அமைக்கப்படும். கட்சியை காப்பாற்றும் வகையில் தமிழகம் முழுவதும் மக்களை சந்திக்கும் வகையில் இடைசிய பயணம் மேற்கொள்ள விருக்கிறோம். இந்த பயணத்தில் ஓ.பன்னீர்செல்வத்துடன் ஜெ.தீபாவும் கலந்து கொள்கிறார்.

தமிழகம் முழுவதும் 60 ஆயிரம் கிளைகள் உள்ளன. அவற்றில் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்தநாளை (24ஆம் திகதி) சீரிய முறையில் கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆர்.கே.நகர் தொகுதியில் அன்று மிகப் பெரிய பொதுக்கூட்டம் நடைபெறும். அதில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அ.தி.மு.க. முன்னோடிகள் கலந்து கொள்வார்கள் என தெரிவித்தார். (இ-12)

## தீவிரவாதி ஹபீஸ் மீது பாக்.நடவடிக்கை

# இந்தியா வரவேற்பு



(இஸ்லாமாபாத்)

தீவிரவாதி ஹபீஸ் சயீத் மீது தீவிரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதை இந்தியா வரவேற்றுள்ளது.

தீவிரவாதி ஹபீஸ் சயீத் மீது தீவிரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதை இந்தியா வரவேற்றுள்ளது.

லஷ்கர்-இ-தொய்பா, ஜமாத் -உத்-தவா என்ற பெயர்களில் அமைப்புக்களை நிறுவி, தீவிரவாத தாக்குதல்களை அரங்கேற்றி வருபவன் ஹபீஸ் சயீத். மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த தாக்குதல்களுக்கு மூளையாக செயற்பட்ட இவரை இந்தியா தேடப்படும் குற்றவாளியாக அறிவித்துள்ளது. பாகிஸ்தானில் வாழும் இவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு அந்த நாட்டை மத்திய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில் ஹபீஸ் சயீத் மீது பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாண அரசு நடவடிக்கை எடுத்து இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. ஹபீஸ் சயீத் மற்றும் அவரது நெருங்கிய கூட்டாளியான குவாசி காஷிப் ஆகியோரை தீவிரவாத தடுப்பு சட்டத்தின் 4 ஆவது அட்டவணையின் கீழ் கொண்டு வந்துள்ளது.


இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தீவிரவாத தடுப்பு துறைக்கு உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது. இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக ஹபீஸ் சயீத் மற்றும் அவரது கூட்டாளிகள் 4 பேர் கடந்த 30 ஆம் திகதி முதல் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தீவிரவாதி ஹபீஸ் சயீத் மீது எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையை இந்தியா வரவேற்று உள்ளது. இது குறித்து வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் விகாஸ் ஸ்வரூப் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

ஹபீஸ் சயீத் ஒரு சர்வதேச தீவிரவாதியும், மும்பை தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவரும் ஆவான். லஷ்கர்-இ-தொய்பா, ஜமாத்-உத்-தவா மற்றும் அவற்றை சார்ந்த இயக்கங்கள் மூலம் பாகிஸ்தானின் அண்டை நாடுகள் மீது பயங்கரவாத செயல்களை கட்டவிழ்த்து விட்டு வருகிறான்.

சர்வதேச அளவில் அவன் மீதும், அவனுடைய இயக்கங்கள் மற்றும் கூட்டாளிகள் மீதும் எடுக்கப்பட்டுள்ள இந்தப் பயனுள்ள நடவடிக்கை அவர்களை நீதியின் முன்கொண்டு வருவதற்கான முதல்படி ஆகும். இதன் மூலம் தீவிரவாதம் மற்றும் பிரிவினைவாதவன்முறை ஆகிய இரட்டை அச்சுறுத்தலை இந்த பிராந்தியத்தில் இருந்து ஒழித்துக் கட்ட முடியும் என விகாஸ் ஸ்வரூப் மேலும் தெரிவித்தார். (இ-12)

# விமானம் விபத்து; 5 பேர் பலி!



அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரத்திலுள்ள பிரபல கட்டடம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் காலை சிறிய விமானம் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் இரண்டாவது பெரிய நகரமான மெல்பேர்னின் புறநகர் பகுதியில் உள்ள எசன்டன் விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கட்டுப்பாட்டை இழந்து அருகிலிருந்த கட்டடத்தின் மேற்புறக்கூரையில் விழுந்து விபத்திற்குள்ளானது. இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 5 பேரும் உயிரிழந்ததாக பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. (இ-12)

## பெற்றோலிய வளத்தை பறிமுதல் செய்ய ஈராக்கில்

# முகாமிடவில்லை

## அமெரிக்க பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு



ஈராக் நாட்டில் யாருடைய பெற்றோலிய வளத்தையும் பறிமுதல் செய்வதற்காக தங்கள்நாட்டு படைகளை அனுப்பவில்லை என்று அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலாளர் தெரிவித்துள்ளார்.

ஈராக் மற்றும் சிரியாவில் 2014 ஆம் ஆண்டு பல பகுதிகளை ஐ.எஸ். தீவிரவாதிகள் கைப்பற்றி இஸ்லாமிய தேசம் என்ற நாட்டை தன்னிச்சையாக உருவாக்கினர்.

ஈராக் நாட்டின் 2ஆவது பெரிய நகரமான மொசூல் நகரத்தை ஐ.எஸ். அமைப்பினரின் பிடியில் இருந்து மீட்பதற்காக, அந்த நாட்டின் படைகள் சண்டையிட்டு வருகின்றன. இந்த சண்டையினால் அந்த நகரத்தைச் சேர்ந்த சுமார் 47 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதில் ஈராக் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் படைகள் கூட்டுச் சேர்ந்து ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றன.

இந்நிலையில், ஈராக் நாட்டில் உள்ள பெற்றோலிய வளத்தை பறிமுதல் செய்வதற்காக தங்கள் நாட்டு படைகளை அனுப்பவில்லை என்று அமெரிக்க பாதுகாப்புத் துறை செயலாளர் ஜிம் மட்டீஸ் தெரிவித்துள்ளார்.

பக்தாத் நகருக்கு நேற்று முன்தினம் சென்ற அவர், "இங்கு நாங்கள் பெற்றுக்கொள்ளும் காஸ் மற்றும் எண்ணெய் பொருட்களுக்கு உரிய தொகையை செலுத்தி வருகிறோம். வருங்காலத்திலும் அவ்வாறே செய்வோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)




## உலகில் 6 வருடங்களின் பின் சூடானில்

# பஞ்சம்; ஐ.நா.பிரகடனம்



(சூடான்)

உலகில் கடந்த 6 வருடங்களில் முதல் தடவையாக தெற்கு சூடானில் பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக ஐ.நா.பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

பத்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு இலட்சம் பேர்வரை பட்டினியில் வாடுவதாகவும் அந்த நாட்டு அரசாங்கமும் ஐ.நாவும் கூறியுள்ளன.

உள்நாட்டுப் போரும் பொருளாதார வீழ்ச்சியும் இந்தப் பஞ்சத்துக்கு காரணமாகக் கூறப்படுகின்றது.

ஏமன், சோமாலியா மற்றும் வடகிழக்கு நைஜீரியாவில்நிலவரம் பஞ்ச நிலையை எட்டியுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ள போதிலும், தெற்கு சூடானில்தான் பஞ்சம் முதல் தடவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

தெற்கு சூடானின் யுனிட்டி மாநிலத்தில் பஞ்சம் தாக்கியுள்ளதாகவும் ஆனால், மனிதநேய உதவிகள் உடனடியாக வழங்கப்படாவிட்டால், நெருக்கடி ஏனைய இடங்களுக்கும் பரவலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

தெற்கு சூடானின் மக்கள் தொகையின் 40 வீதத்துக்கும் அதிகமான மக்கள் அதாவது 49 இலட்சம்பேருக்கு அவசர உணவு உதவி தேவைப்படுவதாக ஐ.நாவின் உலக உணவுத் திட்டம் மற்றும் ஐ.நாவின் சிறார் அமைப்பான யுனிசெப் உட்பட உதவி நிறுவனங்கள் கூறியுள்ளன.

பஞ்சம் எப்போது பிரகடனப்படுத்தப்படும்?

உணவுத் தட்டுப்பாடு பெருமளவிலான மக்களை ஊட்டச்சத்தின்மை நிலைக்கு தள்ளினாலும், ஐ.நாவின் தரங்களின்படி பஞ்சம் பிரகடனப்படுத்தப்படுவது மிகவும் அரிதாகும்.

நீண்டகால வரட்சியும், ஏனைய பிரச்சினைகளும் உணவு விநியோகத்தை குறைத்தாலும் அவை பஞ்ச நிலைக்கு போகும் என்ற அவசியமில்லை.

உயிரிழப்பு, ஊட்டச்சத்தின்மை மற்றும் பசி ஆகியன ஒரு எல்லையை எட்டும் போதுதான் பஞ்சம் அறிவிக்கப்படும்.

பஞ்சம் அறிவிக்கப்படுவதால் ஐ.நா. உறுப்பு நாடுகள் மீது அது எந்தவிதமான கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தாது. ஆனால், அந்தப் பிரச்சினை குறித்து உலக கவனத்தை ஈர்க்கவே அது செய்யப்படுகிறது. (இ-12)


# சவுதியில் பெண்களுக்கு வாய்ப்பு அதிகரிப்பு

சவுதி அரேபியாவில் பங்குச் சந்தையின் தலைவராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்ட ஒரு வாரத்திற்கு பிறகு, அந்நாட்டின் முக்கிய வங்கி ஒன்று பெண் ஒருவரை அதன் தலைமை நிர்வாகியாக நியமித்துள்ளது.

சம்பா நிதியக்குழு, ரனியா மகமத் நஷார், அதன் தலைமை நிர்வாகியாக பணியில் நியமிக்கப்பட்டார்.

மூன்று நாட்களுக்கு முன்னர், சரா அல் சுஹைமி சவுதி பங்குச் சந்தையின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

வீழ்ச்சியடைந்து வரும் எண்ணெய் விலைகளை சரி செய்ய இலக்கு வைக்கப்பட்டுள்ள பொருளாதார சீர்திருத்தங்களின் ஒரு பங்காக, பணிகளில் அதிக பெண்களை நியமிக்க சவுதி அரேபியா முயற்சித்து வருகிறது



ஆனால் சவுதியின் பெண்கள் தங்களின் பல செயல்களுக்கு கணவன் அல்லது ஆண் உறவினரின் அனுமதியைப் பெறும் பாதுகாவல் அமைப்பின் கீழ்தான் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-12)

# ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும்

(கொழும்பு)

சுகாதார மற்றும் உயர்கல்வி அமைச்சுக்களை 48 மணித்தியாலங்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் டாக்டர் நலின் டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி இரண்டு அமைச்சுக்களையும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தப் பிரச்சினை 48 மணித்தியாலங்களுக்குள் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினையாகும். உயர்கல்வி அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்காவிட்டால் ஜனாதிபதி இந்தப் பிரச்சினையில் தலையீடு செய்து தீர்வு வழங்க வேண்டும்.

குறைந்தபட்ச தகுதியையும் நிர்ணயம் செய்து வர்த்தமானியில் அறிவிக்க வேண்டும்.

தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக குரல் கொடுத்து வந்த சுகாதார அமைச்சர் தற்போது தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளார்.

மருத்துவ பேரவையினால் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. குறைந்தபட்சம் மருத்துவ பேரவையின் இணையத்தளத்தில் காணப்படும் தர நிர்ணயங்கள் குறித்த கையேட்டு விபரங்களையேனும் வர்த்தமானியில் அறிவிக்க வேண்டுமென டாக்டர் நலின் டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அனுமதி இரத்தாகும்

## மீன்பிடி அமைச்சர் அமரவீர அறிவிப்பு

(கொழும்பு)

கடற்றொழில் நீரியல்வள அமைச்சின் ஆலோசனைகளைப் புறக்கணித்து பயணிகளை ஏற்றிச்செல்லும் மீன்பிடிப் படகுகளுக்கான அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்யுமாறு அமைச்சர் மகிந்த அமரவீர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கட்டுக்குறுந்த கடலில் விபத்திற்கு உள்ளான மீன்பிடிப் படகு எந்த வகையிலும் பயணிகள் போக்குவரத்திற்குப் பொருத்தமானதல்ல. இதில் ஐந்து பேர் மாத்திரமே பயணிக்க முடியும் என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

விபத்து நிகழ்ந்த போது 30 பேர் பயணித்துள்ளதாகவும் படகில் இருந்த எந்தவொரு பயணியும் பாதுகாப்பு அங்கி அணிந்திருக்கவில்லை என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விபத்திற்கு உள்ளான படகின்கடற்றொழில்அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்யுமாறு கடற்றொழில் பணிப்பாளர் நாயகத்திற்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

விபத்து பற்றி விசாரித்து அறிக்கைசமர்ப்பிக்குமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (இ-7)

# சட்டத்தரணிகள் சங்க தேர்தல்

# ஒத்திவைப்பு

2017 - 2018 ஆண்டுக்கான புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த சட்டத்தரணிகள் சங்கத் தேர்தல், இராமநாதன் கண்ணனை மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமித்த பிரச்சினையால்இலங்கை நீதிச் சேவைகள் சங்கத்துடன் ஏற்பட்ட தகராறு காரணமாக காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

நீதிச் சேவைகள் சங்கத் தேர்தல் அலுவலகர்கள் கடமையாற்ற மறுத்தமையால். இந்த தகராறு உண்டானது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், சட்டத்தரணியொருவர் மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டமை தொடர்பில். இரு சங்காங்களுக்கும் இடையே உண்டான கருத்து வேற்றுமை காரணமாக, சட்டத்தரணிகள் சங்கத் தேர்தலில் தேர்தல் அலுவலர்களாக முன்னைய தேர்தல்களில் நீதிச் சேவைகள் சங்கத்தினர்கடமையாற்றியுள்ளபோதும், இம்முறை அவ்வாறு கடமை புரிய மறுத்துள்ளனர்" என, சட்டத்தரணிகள் சங்கச் செயலாளர் அமல்.எ.ரத்தெனிய தெரிவித்தார். (இ-7)

# ரணிலின் கண்காணிப்பிற்குள் சு.க.முதல்வர்



மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, தொடர்ந்தேர்ச்சியாக ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சனம் செய்து வருவது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அரசாங்க தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் கூடியபோது ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், எஸ்.எம். மரிக்கார் ஆகியோர் இது தொடர்பில் பிரதமரிடம் முறைப்பாட்டை முன்வைத்துள்ளனர்.

பின்னர், இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு எடுத்துக் கொண்டுள்ளதாக மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய முன்வைத்துள்ள அறிவிப்பு தவறானது என இக்கூட்டத்தில் கலந்துகொண்ட அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்துக்கு



கொண்டுவர ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# பழைய முறையிலேயே தேர்தல்

## பிரதமர் ரணிலிடம் சிறுபான்மை அரசியல் கட்சிகள் வலியுறுத்து

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள எல்லை நிர்ணய அறிக்கையின் பிரகாரம் தேர்தலை நடத்தக்கூடாது. பழைய முறைமையிலேயே தேர்தல் நடத்தப்படவேண்டியது அவசியம் என சிறு. சிறுபான்மை அரசியல் கட்சிகள் கூட்டாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேரில் சந்தித்து இவ்விடயம் தொடர்பில் இறுதி முடிவை எட்டுவோமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறு மற்றும் சிறுபான்மை அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களிடத்தில் தெரிவித்துள்ளார்.

புதிய எல்லை நிர்ணய அறிக்கை தயாரிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அவ்வறிக்கையின் பிரகாரம் தேர்தல் நடத்தப்படுமாகவிருந்தால் சிறு, சிறுபான்மை அரசியல் கட்சிகளின் பிரதிநிதித்துவங்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆகியன கூட்டாக கண்டித்திருந்தன.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அக்கட்சிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய சோஷலிச கட்சி ஆகியனவும் இணைந்து விசேட சந்திப்பை நடத்தியிருந்தன.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியன இந்த சந்திப்பில் கலந்து கொள்ளாத போதும் அக்கட்சிகளும் குறித்த நிலைப்பாட்டிலேயே இருப்பதாக அறிவிப்பைச் செய்திருந்தன.

அலரி மாளிகையில் மாலை 6.30 மணியளவில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் சார்பில் அமைச்சர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி, ஐக்கிய சோஷலிச கட்சியின் தலைவர் ஸ்ரீதுங்க ஜயசூரிய ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (இ-7)

# தேர்ச்சி கட்டாயம்

"நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் இரட்டை மொழித் தேர்ச்சி இருக்க வேண்டும்" என, தேசிய சகவாழ்வு மற்றும்தேசிய அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற, தேசிய சமய மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "இரட்டை மொழிகளிலும் தேர்ச்சியற்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களால், வடக்கு மற்றும் தெற்கிலுள்ள மக்களின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவோ அல்லது அப் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கவோ முடியாது. அதனால், அவர்களுக்கு இரட்டை மொழித் தேர்ச்சியைக் கட்டாயப்படுத்தும் சட்டம் அமுல்படுத்தப்படல் வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## எதையும் ஏழு தடவை சொல்ல வேண்டுமா?

மனிதர்களில் தான் எத்தனை இரகங்கள்! சொல்வதைச் சரிவரச் சொல்லாதவர்கள் ஒரு புறம். சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிற பேர் வழிகள் மறுபுறம்.

மனிதர்களின் கிரகிப்புத் தன்மையைப் பொருத்தும் விடயங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லாமல்; தவறில்லை. ஆனால் உப்புப் பெறாத விடயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதும் எதையும் உடனே புரிந்து கொள்கிறவர்களுக்கும் நன்கு மனதில் வாங்கிக் கொள்கிறவர்களுக்கும் திரும்பத் திரும்பச் சொல்லும் தண்டனையை அளிப்பானேன்?

இந்தச் செயல் இவர்களைக் கண்டாலே மற்றவர்கள் பின்னங்கால் பிடரியில் படும்படி ஓட வைக்கும். இவர்களைக் குடும்ப உறுப்பினர்களாகவோ, முதலாளிகளாகவோ, மேலதிகாரிகளாகவோ, அல்லது ஆசிரியர்களாகவோ கொண்டவர்கள் பாடு ரொம்பவும் பரிதாபத்திற்குரியவர்கள்.

இவர்கள் ஏன் இப்படிச் செய்கிறார்கள்? மற்றவர்கள் நாம் சொல்வதைச் சரிவர கிரகித்துக் கொள்ளவில்லை அல்லது கிரகித்துக் கொள்ளச் சக்தியற்றவர்கள் என்று (எல்லோரையும்) நினைப்பதுதான் காரணம்.

இன்னொன்று மனதில் தோன்றும் ஒரு வித அரிப்பு இது. நீர் நிரம்பிய தண்ணீர்த் தொட்டி தன்னிடமுள்ள கூடுதல் தண்ணீரை வெளியே ற்றித் தீருவது மாதிரி மனதில் ஏற்படும் இந்த அரிப்பை இவர்கள் திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் தீர்த்துக் கொள்கிறார்கள். இந்தக் குறையை உணர்ந்து இவர்கள் தங்களை மாற்றிக்கொள்வது நல்லது.

திரும்பத் திரும்பச் சொல்பவர்கள் தங்கள் நோக்கத்தில் தோல்விதான் அடைகிறார்கள். எப்படி? இவர்கள் எதையும் பல தடவை சொல் வார்கள் என்பது தெரிந்தவுடனேயே முதல் தடவையிலிருந்து கடைசித் தடவை வரை இவர்கள் சொல்லும் எதற்கும் மற்றவர்கள் காதோ, மனசோ கொடுக்காமல் விட்டு விடு கிறார்கள். எனவே இவர்கள் சொல்லுவது எதுவுமே மனசில் படுவது இல்லை.

ஆனால் ஒரே தடவை சொல்பவர்களிடத்திலோ, இந்த மனிதர் திரும்பவும் சொல்ல மாட்டரே என்று காதைத் தீட்டிக் கொள்கின்றார்கள். மனக்கதவுகளும் அவர் சொல்வதைப் பதிவு செய்து கொள்வதற்காகத் திறந்து கொள்கின்றன. திரும்பத் திரும்பச் சொல்பவர்களிடத்திலோ, மற்றவர்கள் தங்கள் காதுகளை மானசீகப்பஞ்சால் அடைத்துக் கொண்டு விடுகிறார்கள். எனவே எத்தனை தடவை சொன்னாலும் எடுபடுவது இல்லை.

எதையும் இரண்டு முறை சொல்லலாம். தவறில்லை மூன்றாவது தடவை சொல்வது என்றால் சொல்லும் முறையில் அழகு தேவை அல்லது புதுக்கோணத்தில் சொல்ல வேண்டும் பணியையாவது மாற்ற வேண்டும்.

இல்லாவிட்டால் கீறல் விழுந்த ரெக்கார்டு மாதிரி நமக்கும் மதிப்பில்லாமல் போய் விடும்.

**லேனா தமிழ்வாணன்**


# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

ஆசிரியர் : திரு. மு. வே. அன்பழகன்


பகுதி-I

☛ 01 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

***** முதலில் தரப்பட்ட பொருளுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய பொருளைத் தெரிவு செய்க.

1. 

1) 2) 3)

2. 

1) 2) 3)

***** பின்வரும் கோவைகளில் கட்டமிடப்பட்டுள்ள பகுதியின் பெறுமானத்திற்குப் பதிலாக இடப்படவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

3. 10 + [60 + 30] = 100

1) [55 + 40] 2) [45 + 45] 3) [70 + 30]

4. 10 + [14 + 6] = 30


1) [25 - 5] 2) [35 - 5] 3) [45 - 20]

***** சரியான விடையைத் தெரிவு செய்க.


5. "விளையும் பயிரை முளையில் தெரியும்" என்பதன் கருத்து.
   1) ஒருவரின் சிறுவயதுப் பழக்கத்தை வைத்து அவரைப் பற்றி மதிப்பிடலாம்.
   2) பயிர் விளைவதற்கு விதையைத் தெரிவு செய்ய வேண்டும்.
   3) பெரியவர்களாக வளர சிறியவர்களுக்கு உதவுதல் வேண்டும்.

6. "முயற்கொம்பு தேடி அலைந்தது போல" என்பதற்குப் பொருத்தமான சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்க.
   1)வழிதவறி நிற்பவனிடம் வழி கேட்டல்
   2) இல்லாத பொருளைத் தேடி அலைதல்
   3) அலைந்து திரிந்து தேடிய பொருளைப் பெறுதல்

***** ஒரே வடிவமுடைய இரு உருக்களைக்காட்டும் விடையைத் தெரிவு செய்க.


7. 



1) A,B
2) C,D
3) A,D

8. 



1) A,C
2) B,D
3) D,E

***** முதலில் இரு உருக்களுக்கிடையே உள்ள தொடர்பைப் போல் அடுத்த உருவுக்குப் பொருத்தமான தொடர்புள்ள விடையைத் தெரிவு செய்க.

9. 


10. 


***** தரப்பட்ட படங்களில் சரியான ஒழுங்குவரிசையைக் காட்டும் விடையின் கீழ்க் கோடிடுக.


11. 


1) 5 , 2 , 1 , 4 , 3 2) 4 , 2 , 1 , 5 , 3 3) 4 , 1 , 2 , 5 ,3


12. 


1) 2 , 1 , 4 , 5 , 3 2) 3 , 2 , 1 , 5 , 4 3) 2 , 5 , 1 , 3 , 4

***** 13 ஆம் 14 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் முதலில் தரப்பட்டுள்ள உருவத்துடன் தொடர்பில்லாத உருவைத் தெரிந்து கீறிடுக.

13. 

1) 2) 3)

14. 

1) 2) 3)

***** 15 ஆம் 16 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்ட படங்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து கீறிடுக.

15. 
1) சிறுவர்
2) விளையாட்டு
3) கடை

16. 
1) நீர்
2) ஆறு
3) மழை

17. நான் ஓர் அப்பியாசக் கொப்பியையும் அதன் நான்கு மடங்கு விலையுள்ள புத்தகம் ஒன்றையும் வாங்குவதற்காக ரூபாய் 50 ஐச் செலவு செய்தேன். புத்தகத்தின் விலை யாது?
    1) ரூபாய் 10 2) ரூபாய் 30 3) ரூபாய் 40

18. தற்போது எனது வயது 12 வருடங்கள் ஆகும். எனது அம்மாவின் தற்போதைய வயது எனது வயதின் மூன்று மடங்காக இருப்பின் இன்னும் எத்தனை வருடங்களில் எனது அம்மாவின் வயது 40 வருடங்கள் ஆகும்?
    1) 4 வருடங்கள் 2) 8 வருடங்கள் 3) 10 வருடங்கள்

19. கண்ணன் 200 சிறிய குழிகளை வெட்ட 20 நாட்கள் எடுப்பான். அவன் 50 குழிகளை வெட்ட எத்தனை நாட்கள் எடுப்பான்?
    1) 5 நாட்கள் 2) 10 நாட்கள் 3) 15 நாட்கள்

20. ஒரே அளவான 2 மெழுகுவர்த்திகள் ஒன்றாகப் பற்றவைக்கப்பட்டன. 20 நிமிடங்களில் அவை இரண்டும் ஒன்றாக எரிந்து முடிந்தன எனின் ஒரு மெழுகுவர்த்தி எரிந்து முடிய எடுத்த நேரம் எவ்வளவு?
    1) 10 நிமிடம் 2) 20 நிமிடம் 3) 40 நிமிடம்

***** 21 ஆம் 22 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தரப்பட்டுள்ள கூற்று பிழையானது ஆகும். இக்கூற்று ஏன் பிழையானது என்பதைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.

21. நரி திராட்சைப் பழங்களை உண்டு பசியைத் தீர்த்தது.
    1)நரிக்குத் திராட்சைப்பழத்தைத் தெரியாது.
    2) நரி தாவர உணவுகளை உண்பதில்லை.
    3) திராட்சைப் பழத்தை உண்பதால் நரியின் பசி தீராது.

22. கால்கள் ஒடிக்கப்பட்ட பாம்புகள் வேகமாக ஓடுவதில்லை
    1) பாம்பின் கால்களை ஒடிக்க முடியாது.
    2) கால்கள் ஒடித்தாலும் பாம்புகள் வேகமாக ஓடும்
    3) பாம்புகளுக்குக் கால்கள் இல்லை.

23. மூன்று பிள்ளைகள் வரிசையாக நின்று கொண்டிருந்தனர். முதலில் இருப்பது ரவியல்ல. இறுதியில் இருப்பது நிமல் அல்ல. கமல் இருப்பது முதலிலோ, இறுதியிலோ அல்ல. அதன்படி மூன்று பிள்ளைகளும் வரிசையில் முதலிலிருந்து நின்று கொண்டிருக்கும் ஒழுங்குமுறை.
    1) கமல் , ரவி , நிமல் 2) ரவி , கமல் , நிமல்
    3) நிமல் , கமல் , ரவி

24. பெட்டியொன்றில் 4 சிவப்பு நிறப் பந்துகளும் 6 நீல நிறப்பந்துகளும் உள்ளன. பிள்ளையொன்று இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு ஒவ்வொரு பந்தையும் வெளியே எடுத்தது. நிச்சயமாக அவருக்கு

நீல நிறப்பந்தொன்று எத்தனையாவது சந்தர்ப்பத்தில் கிடைக்கும்?

1) 6 ஆவது சந்தர்ப்பத்தில்

2) 5 ஆவது சந்தர்ப்பத்தில்

3) 1 ஆவது சந்தர்ப்பத்தில்

25. சீருந்து ஒன்றும் உந்துருளி ஒன்றும் p என்னும் இடத்திலிருந்து ஒரே நேரத்தில் வடக்குத் திசையை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தன. சீருந்து மணித்தியாலத்திற்கு 25 கிலோமீற்றர் வேகத்திலும், உந்துருளி மணித்தியாலத்திற்கு 35 கிலோ மீற்றர் வேகத்திலும் பயணித்தன எனின், ஒரு மணித்தியாலத்தின் பின் இரண்டு வாகனங்களுக்கும் இடையேயுள்ள தூரம்?

1) 60km 2) 15km 3) 10km

26. என்னிடம் ரூபாய் 5.00 நாணயங்கள், ரூபாய் 10.00 நாணயங்கள் மாத்திரம் உள்ளன. அந்த நாணயங்களின் மொத்தப் பெறுமதி ரூபாய் 70.00 ஆகும். அதன்படி என்னிடமுள்ள ரூபாய் 5.00 நாணயங்களின் எண்ணிக்கை

1) 7 2) 9 3) 6

27. பிழையான கருத்தைக் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

1) பூனை வீடுகளில் வளர்க்கப்படும் பிராணியாகும். அது அனைத்து முண்ணியாகும்.

2) முதலை கொடிய பிராணியாகும். அது நீரிலும் நிலத்திலும் வளரும்

3) கொக்கு வெள்ளை நிறமாகும். அது சமாதானத்தின் சின்னமாகக் கருதப்படும்

28. மார்ச் மாதத்தில் இருக்கத்தக்க ஆகக்கூடிய சனிக்கிழமை நாட்களின் எண்ணிக்கை

1) 4 2) 6 3) 5

*** 29 ஆம் 30ஆம் வினாக்களில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

29. மீனவனுக்குக் கடல் போன்று, விளையாடுபவனுக்கு......................

1) மைதானம் 2) பந்து 3) துடுப்பு

30. ஆசிரியருக்கு மாணவன் போன்று மருத்துவருக்கு..............

1) பொதுமக்கள் 2) நோயாளி 3) தாதி

31. ஒவ்வொரு பாத்தியிலும் ஒரு வகை மாத்திரம் இருக்கத்தக்கதாக 5 பாத்திகளில் மரக்கறிப் பயிர்களும் பூச்செடிகளும் வளர்க்கப்படுகின்றன. பூச்செடிகள் வளர்க்கப்படும் பாத்திகளின் எண்ணிக்கை இரண்டு ஆகும். மரக்கறிப் பயிர்களும் பூச்செடிகளும் இருக்கத்தக்க விதத்தைத் தெரிவு செய்க.

1) றோசா, செவ்வந்தி, முள்ளங்கி, அவரை, கோவா

2) றோசா, செவ்வந்தி, அந்தூரியம், முள்ளங்கி, அவரை

3) றோசா, முள்ளங்கி, அவரை, கோவா, கரட்

32. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 2 கொடிகள் வீதம் தொங்க விட்டு அவ்வீதியை அலங்கரிக்கத்தக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 8 மின்கம்பங்கள் இருந்தால், அவற்றுக்கிடையே தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?

1) 14 கொடிகள் 2) 16 கொடிகள் 3) 18 கொடிகள்

33. கடலில் நிதமும் இருப்பவை,

1) அலைகளும் மீன்களும் 2) மீன்களும் நீரும் 3) நீரும் உப்புச் சுவையும்

34. ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை,

1) எழுத்துக்களும் கருத்துக்களும்

2) கருத்தும் அச்சுப் பிழைகளும்

3) இகரக்குறியும் உகரக்குறியும்

35. சந்திரன் தோற்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக்கூட்டத்தைக் காணலாம் என மோகன் கூறுகின்றான். இது நடைபெற இயலாது. இதற்குக் காரணம்,

1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.

2) அமாவாசை நாளில் சந்திரன் தோன்றாது.

3) தொலைவில் உள்ள சந்திரனைப் பார்க்க முடியாது.

36. கண்ணனின் ஒரே பிள்ளையாகிய ரவி பாடசாலைக்குத் தாமதமாக வந்து, தம்பியுடன் கடைக்குச் சென்று திரும்பி வருவதற்குத் தாமதம் ஏற்பட்டதெனக் கூறினான். இது உண்மையாக இருக்கலாம். இதற்குக் காரணம்,

1) ரவி உலாவித்திரிய விரும்புகின்றமை

2) ரவிக்குச் சில சகோதரர்களும் சகோதரிகளும் இருக்கின்றமை

3) ரவியின் சிறிய தகப்பனாரின் ஒரு மகனும் ரவியின் வீட்டில் இருக்கின்றமை

*** 37 ஆம் 38ஆம் வினாக்களிலே தொடக்கத்தில் தரப்பட்டுள்ள கூற்றைப் பற்றிய சரியான முடிவைத் தெரிவு செய்க.**

37. பாடசாலைக்குச் சேவைப் பேருந்து நேரம் தவறாமல் பாடசாலைக்கு வருகின்றது.

1) இது பெரும்பாலும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

2) இது ஒருபோதும் நடைபெறுவதில்லை

3) இது எப்போதும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

38. முயன்றால் வெற்றியீட்டலாம்.

1) இது எப்போதும் உண்மையாகும்

2) இது பெரும்பாலும் உண்மையாகும்

3) இது ஒருபோதும் உண்மையானதன்று

*** பின்வரும் இரு கவிதைகளையும் வாசித்து 39 ஆம் 40 ஆம் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**

குளத்தில் தாமரை மலர்கள் மலர்ந்தனவே
பூவின் நறுமணம் திசையெங்கும் பரவியதே
வீசிய காற்று குளிரைத் தரவே
எம் உள்ளம் அசைந்ததே

உள்ளம் எங்கும் உவகை தோன்றவே
கையில் பூவை ஏந்திச் சென்று
மகனே உன் பெற்றோரை நீ வணங்குவாயானால்
ஒருபோதும் உனக்கு வாராதே தீங்கு

39. "வீசிய காற்று குளிரைத் தரவே" என்பதன் கருத்து யாது?

1) வீசிய குளிர்ச்சியான காற்று

2) குளத்தில் நிறைந்த நீர்

3) பூக்களின் மணமுள்ள காற்று

40. "உனக்கு வாராதே தீங்கு" என்பதன் கருத்து யாது?

1) பெற்றோர்கள் உனக்குத் தீங்கு செய்யமாட்டார்கள்

2) உனக்கு ஒருபோதும் தீங்கு ஏற்படமாட்டாது

3) உனது வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்கும்

## 17-02-2017 வெள்ளி வெளியான பகுதி 2 இற்கான விடைகள்

01. 1. காகம்
 2. வியப்புக்குறி / ஆச்சரியக்குறி, வினாக்குறி
 3. 1. தெரு 2. மனத்திலே
 4. காகம்
 5. வண்ண, சிறந்த, வளர்ப்பு
 6. நீயாவாய்

02. 1. கூவின 2. குரைத்தது

03. 1. வறுமையிற் செம்மை 2. உத்தம நட்பு

04. 1. நட்டாற்றில் கைவிடல் 2. நெஞ்சு புண்ணாதல்

05. 1. குனிந்து வளைந்து கும்மியடி 2. குத்து விளக்கே சாய்ந்தாடு

06. 1. காடுகளை அழிப்பதனால் சுற்றுப்புறச்சூழல் மாசடைகின்றது.
 2. உழவுத் தொழிலுக்கு ஒப்பானது இவ்வுலகில் வேறெதுவும் இல்லை.

07. 1. பால் 2. நாணல்

08. 1. Sun

09. 1. கவனமாய் இரு 2. தயவுசெய்து உங்களுடைய வீட்டு வேலையை செய்யுங்கள்

10. 1. பாகற்காய்

11. 1. மிருகக் காட்சிச்சாலைக்குப் போவோமா?
 2. முப்பது ரூபாய்

12. எழுவாய் பயனிலை கொண்ட (5 சொற்களுக்கு மேல் இருத்தல் வேண்டும்)

13. 1) 1240 2) 200

14. 1. 4l 600ml / 4600ml

15) 45

16) 1) 15 : 45 மணித்தியாலங்கள் 2) 8 மணி 30 நிமிடம்

17) 96 cm

18) 2550 தேங்காய்கள்

19) ராமு

20) 24cm

21) 1250ml / 1 l 250ml

22) 1920g / 1kg 20g

23) 3/12, 6/24, 1/4

24) ரூபா 50.00

25) VIII

26. 90m

27. 1080 மாணவர்கள்

28) 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 29) 3 | 34) 1 | 39) 4 | 44) 3 | 49) 2 | 54) 2 |
| 30) 2 | 35) 2 | 40) 3 | 45) 2 | 50) 2 | 55) 3 |
| 31) 1 | 36) 3 | 41) 3 | 46) 1 | 51) 4 | 56) 2 |
| 32) 4 | 37) 2 | 42) 1 | 47) 4 | 52) 1 | 57) 2 |
| 33) 3 | 38) 4 | 43) 3 | 48) 1 | 53) 3 | 58) 2 |

# நற்பழக்கவழக்கங்களையும் சகோதரத்துவத்தையும் மாணவர்களுக்கிடையே உருவாக்கும் சாரணியம்



சமூகத்தில் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும் சகோதரத்துவ மனப்பாங்கு உடையவர்களாகவும் கீழ்ப்படிவுள்ளவர்களாகவும் பிறருக்கு உதவி செய்பவர்களாகவும் நாட்டில் நற் பிரஜையாகவும் வாழ வழிப்படுத்துவது சாரணியம் ஆகும். மாணவர்கள் சாரணியத்தில் இணைந்து செயற்படுவதன் மூலம் தமது வாழ்க்கையை வளமானதாக மாற்றிக் கொள்ள முடியும். ஓய்வு நேரங்களை பயனுள்ள வகையில் கழிப்பதற்கு இது உதவும். இத்தகைய உன்னதமான அமைப்பை ஸ்தாபித்தவர் றொபேட் ஸ்ரீபன்சன் சிமித் பேடன் பவல் ஆவார்.

சாரணர் இயக்கத்தை ஸ்தாபித்த உலகப் பிரதம சாரணரான பேடன் பவலின் 160 ஆவது பிறந்த தினம் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி உலகங்கொங்கும் உள்ள சாரணர்களால் கொண்டாடப்படுகின்றது.

சாரணியத்தின் இலட்சியங்களையும் நோக்கங்களையும் நினைவுகூரும் தினமாக உலக சாரணர் தினம் உலகெங்கும் அனுஷ்டிக்கப்படுகின்றது.

சமூகத்துடன் இணைந்து தன்னை மேம்படுத்திக் கொள்ளவும் சமூகத்தைப் புரிந்து கொள்வதற்கான பயிற்சிக்களமாகவும் பாடசாலையில் சாரணியம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதில் ஆண், பெண் இருபாலாரும் இணைந்து செயற்படலாம். இவர்களுக்கு ஏற்ற வகையில் சாரணியச் செயற்றிட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இன, மத வேறுபாட்டைக் களைந்து ஒற்றுமையாக, சகோதர மனப்பாங்குடன் சமூகத்தை அணுகுவதற்கான நல்ல பண்பாட்டை, சமூக விழுமியங்களை மாணவர்களுக்கு கற்றுத் தருகின்றது.

'எதற்கும் தயாராக இரு' என்பது சாரணியத்தின் தொனிப்பொருளாகும். இத்தகைய சாரணர் இயக்கத்தை ஸ்தாபித்த சாரணியத்தின் தந்தை என்று அழைக்கப்படும் கில்வெல் பேடன் பவல் 1857ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இங்கிலாந்தின் லண்டன் நகரில் பிறந்தார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த றொபேட் கிறோஸ் பேடன் பவல் இவரது தந்தை ஆவார். தாயார் பிரித்தானியக் கடற் படைத் தளபதி டபிள்யூ.டீ.சிமித் என்பவரது மகளாக கென்றீற்றா கிறெசி ஆவார்.

பேடன் பவலுக்கு 3 வயதாக இருக்கும் போது அவரது தந்தை இறந்துவிட்டார். இதனால் அவரது குடும்பத்தில் உள்ள 7 சகோதரர்களும் தாயாரின் அரவணைப்பிலேயே வளர்ந்தனர். கஷ்ட ஜீவனம் நடத்தினாலும் குடும்ப அங்கத்தவர்களிடையே அன்பும் பாசமும் ஒருபோதும் குறைந்ததில்லை. இந்நிலை அவர்களது கஷ்டங்களை மறக்கச் செய்தது.

பேடன் பவல் தனது ஆரம்பக் கல்வியை கேம்பிரிஜ் வேல்ஸ் றோஸ்கில் பாடசாலையில் கற்றார். தனது நான்கு சகோதரர்களுடன் பல இடங்களுக்கும் சென்று வெட்டவெளி வாழ்க்கையை வெகு இன்பமாக கழித்து வந்தார். 1870இல் லண்டனில் இருந்த சாட்டர் ஹவுஸ் கல்லூரியில் உபகாரச் சம் பளம் பெற்று கல்வி பயின்றார். இவர் கல்வியில் நாட்டமில்லாதபோதும் உற்சாகமுள்ளவராகத் திகழ்ந்தார். கல்லூரியில் நடைபெறும் அனைத்து நிகழ்விலும் அவரைக் காணக் கூடியதாக இருக்கும். இவரது சுறுசுறுப்பும், துடிப்பும், குறும்புத்தனமும் ஆசிரியர்களைக் கவர்ந்தது.

இதனால் ஆசிரியர்கள் இவரைக் கண்காணித்து வந்தனர். எனினும் இவர் ஆசிரியர்களுக்குத் தெரியாமல் தனது பள்ளிக்கு அருகிலிருந்த காட்டினுள் சென்று விலங்குகளைப் பின் தொடர்வதிலும் அவற்றின் சுவடுகளைக் கண்காணிப்பதிலும் அவற்றை வேட்டையாடுவதிலும் கவனம் செலுத்துவார்.

கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவில் முக்கிய அங்கத்தவராக இருந்தார். அத்துடன் நடிப்புத்திறன் மிக்கவராகவும் சங்கீதத்தில் விருப்பமுடையவராகவும் சித்திரம் வரைவதில் ஆர்வம் உள்ளவராகவும் இருந்தார். பிற்காலத்தில் அவரது நூல்களுக்கு தானே சித்திரம் வரைந்தார்.

பேடன் பவல் தனது 19 ஆவது வயதில் சாட்டார் ஹவுஸ் கல்லூரியில் பட்டம் பெற்றவுடன் இராணுவத்தில் சேர்ந்தார். குதிரைப் படையின் உப தளபதியாக இந்தியா வுக்குச் சென்றார். இவரது குதிரைப்படை 'கிரமின்' யுத்தத்தில் பெரும் புகழ் பெற்றது. தனது 26 ஆவது வயதில் தளபதியானதுடன் திறமையான இராணுவ சேவையாளராகவும் திகழ்ந்தார்.

1887 ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் சூலு சாதியினருக்கு எதிராகவும் கொடிய அசாந்தி இனத்தினருக்கு எதிராகவும் மிலேச்சம டோபினி சாதியினருக்கு எதிராகவும் பெரும் யுத்தங்களையும் நடத்தினார். இதனால் சுதேசிகள் மிகவும் பயந்தனர். இவரது திறமையைக் கண்டு இவரை ' இம்பீசா ' என்று சுதேசிகள் அழைத்தனர்.

இம்பீசா என்பதன் பொருள் ஒருபோதும் துயில் கொள்ளாத ஓநாய் என்பதாகும். இவ்வாறு பேடன் பவல் படிப்படியாக பல பதவிகளில் உயர்ந்தார்.

1899ஆம் ஆண்டு இவர் கேணலாக பதவி உயர்த்தப்பட்டார். 42 ஆம் வயதில் ஆபிரிக்காவில் உள்ள 'மேம்சிங்' நகரில் தன் சிறு படையுடன் இருக்கும் போது அந்த முகாம் எதிரிகளால் முற்றுகையிடப்பட்டது. இவருக்கு உதவிபுரிய வந்த படை வந்து சேரும் வரை இந்த நகரை 7 மாதங்கள் வரை தன் சிறிய படையுடன் பாதுகாத்தார். இதனால் இவர் மேஜர் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டார். பின் தாய்நாடு திரும்பினார். அங்கு அவருக்கு பல கௌரவங்கள் காத்திருந்தன.

1901 ஆம் ஆண்டு சாரணியத்துக்கான துணை என்றும் நூலினை எழுதினார். இந்நூல் சிறுவர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றதுடன் பாடசாலைகளிலும் பாடத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டது.

தன் தேசச் சிறார்கள் சிறந்த ஆளுமையுடையவர்களாக வருவதற்கு உதவி செய்ய சிறந்த வழியை இங்கு அவர் கண்டார். சிறார்களுக்காக 'சிறார்களுக்கான சாரணியம்' எனும் நூலை வெளியிட்டார்.

பேடன்பவல் இந்தியா - ஆபிரிக்கா ஆகிய இடங்களில் தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு தனது கடமைகளை மேற்கொண்டார். முதன் முதலாக உலகம் கண்ட சாரணியச் சிறுவர் பாசறை வாசத்தை 1907இல் இங்கிலாந்துக் காஸ்வோயில் அமைந்துள்ள பிறவுன்சி தீவில் 20 சாரணர்களுடன் முதலாவது சாரணர் பாசறையை நடத்தினார். இப்பாசறை வாசம் பெரும் வெற்றியைக் கொடுத்தது. 1908 ஆம் ஆண்டு இளைஞர் சாரணியம் என்றும் நூலை வெளியிட்டார்.

1920 இல் உலக சாரணர்களை ஒன்றிணைத்து பேடன் பவலின் தலைமையில் உலக ஜம்போறி ஒன்றுஇடம்பெற்றது. 1929 இல் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னன் பேடன் பவலுக்கு 'கில்வெல் பேடன் பவல் பிரபு' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தார்.

உலக சகோதரத்துவத்தையும் தியாக சேவையுணர்வையும் இலட்சியமாகக் கொண்ட சாரணியத்தின் மூலமாக சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் நல்லொழுக்கத்தையும் கட்டியெழுப்புதல் வேண்டும் என்பதே இன்றைய எதிர்பார்ப்பாகும்.

1921, 1934 ஆம் ஆண்டுகளில் தனது மனைவியோடு பேடன் பவல் இலங்கைக்கு விஜயம் செய்து பல சாரணிய நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தார்.

தனது இறுதிக் காலத்தை தனது துணைவியோடு ஆபிரிக்காவில் கழித்த பேடன் பவல் 1941ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். ஆபிரிக்காவின் கென்யாவில் நைரோபி என்ற இடத்தில் இவரது பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது. இவர் இவ் உலகை விட்டு மறைந்தபோதும் சாரணியச் செயற்பாட்டின் மூலம் சாரணர் மனதில் என்றென்றும் நிலைத்து நிற்பார். வளர்க சாரணியம்'

ம.ஜெகதீஸ்வரன்
(ஜனாதிபதி சாரணன்)
சாரணர் பொறுப்பாசிரியர்
கிளி / வட்டக்கச்சி மத்திய கல்லூரி.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 994


ரூபன்




சர்மிலா




பபிஸ்ரன்





வானுசா




தீபன்




சாந்தினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொழும்பு நகரிலும் பெரிய கொழும்பு நகரிலும் (Megapolis) தமிழர்கள் ஒரு பார்வை


கொழும்பு மெகாபொலிஸ் திட்டத்தை உத்தியோகபூர்வமாக மேற்குப் பிரதேச மெகா பொலிஸ் திட்டமென்றும், மேற்கு ப்பிரதேச கருத்திட்ட செயற்றிட்டமெனவும் அழைக்கப்படுகின்றது. இது அபிவிருத்தியுடன், வலய உருவாக்கத்துடன் கூடிய நகரத்திட்டமாகும். இத்திட்டம் டுபாய், சிங்கப்பூர், சியோல், டோக்கியோ நகரத்திட்டங்களின் பண்பை ஒத்தது. இத்திட்டத்தின் மூலம் பொருளாதார அபிவிருத்தி, வேலைவாய்ப்பு அதிகரிப்பு , சமூகநீதி, சமாதானம் மற்றும் நல்ல சுற்றுச்சூழலை உருவாக்க முயற்சிப்பது. மேலும் இத்திட்டத்தின் மூலம் சமூக உட்கட்டுமானம், வீட்டுவசதிகள், சுகாதாரம், கல்வி மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளில் வளர்ச்சி காண்பது முக்கிய இலக்காகும்.

இத்திட்டம் இன்றைய பிரதமரால் 1994இல் முன்னெடுக்கப்பட்டு பின்னர் இவரால் மீண்டும் 2002இல் முன்னெடுக்கப்பட்டும் ஆட்சி மாற்றங்களால் கைவிடப்பட்டன. 2015 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் இத்திட்டம் 2016 தனியான அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்பு விருத்தி இத்திட்டத்தில் முக்கிய இடம் பெறுகின்றது. மேற்கு மாகாணத்திலுள்ள நகர்கள், பெருஞ்சாலைகள் அகன்ற மேம்படுத்தப்பட்ட சாலைகளூடாகவும் துரித, இலகுவான தொடர்புகள் ஏற்படுத்தப்படும். மேலும் வீதிப் போக்குவரத்து, ரயில் போக்குவரத்து விருத்தி செய்யப்படும். நீர் நிலைகள் போக்குவரத்துக்கு ஏற்றதாக மாற்றப்படும். போக்குவரத்து, மின்சாரம், சேவை வசதிகள் மேலும் சிறப்பாக விருத்தி செய்யப்படும்.

இந்த மெகா பொலிஸ் திட்டம் பின்வரும் திட்ட பரப்புக்களை உள்ளடக்கியது.

1.கொழும்புத்துறைமுக/ நிதி நகர் விருத்தி




2. கட்டுநாயக்க விமானத்தின் அபிவிருத்தி

3. மினுவாங்கொடையில் விமான வாழிட நகரவிருத்தி

4.முத்துராஜாவல ஓடை விருத்தியும் சுற்றுலாத்துறை மேம்பாடும் ஓடை விருத்தியும்

5. மீரிகமத்தில் கைத்தொழில் நகரம்

6.ஹொரணையில் கைத் தொழில் நகரம்

7. கொழும்பு துறைமுகத்தையண்டி கணிப்பியல் திட்டம் சார்ந்த (Logistics town) நகர உரு வாக்கம்

8. கொழும்பு நகரின் மத்திய வியாபாரப் பகுதி அபிவிருத்தி

9. வெளி வலய மத்திய பிரதேசங்களில் வாழிடப் பரப்புகள் விருத்தி செய்தல்


10.பத்தரமுல்ல-கோட்டை நகரப்பகுதியை நிர்வாக மையமாக வளர்த்தெடுத்தல்

11. மாலபே-ஹோமகம நகர் பிரதேசத்தை விஞ்ஞான தகவல் தொழில்நுட்ப, உயர் கல்வி, ஆராய்ச்சி நிறுவனங்களை கொண்ட நகர்ப் பகுதியாக விருத்தில் செய்தல். ஏற்கனவே இப் பிரதேசத்தில் உயர் கல்வி நிறுவனங்கள், தகவல் தொழில் நுட்ப நிறுவனங்கள் செயற்படத் தொடங்கியுள்ளன.

அவிசாவளையைப் பெருந்தோட்ட கைத்தொழிலுக்கு ஏற்ற நகராக விருத்தி செய்தல்

மேற்கு மாகாணத்தின் தென் பகுதியை குறிப்பாக புளத் சிங்கள, அகலவத்தை, மத் துகமப் பகுதியின் உப்பகுதிகளை காட்டுப் பகுதிகளாகவும் விவசாய பகுதிகளாகவும் விருத்தி செய்தலுடன் இங்கு காட்டு தொழிலுக்கு ஏற்ற நகரையும், சுற்றுச்சூழலுடன் இணைந்த சுற்றுலாத்துறையை மேம் படுத்தல்

மேற்குறிப்பிட்டவை மெகா பொலிஸ் திட்டத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. இத்திட்டத்திற்குள் வீட்டுத் திட்டங்கள், கைத்தொழில் வலயங்கள், பசுமை வலயங்கள், விவசாய வலயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.




கொழும்பு நகரையும் அதனையண்டிய நகர்களையும் மற்றும் கிராமங்களையும் இணைத்து மெகா பொலிஸை சிமாா்ட் (Smart) நகரை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இப் பெரிய நகர் மேற்கு மாகா ணம் முழுவதையும் உள்வாங்குகின்றது. இந் நகரின் மொத்த மக்கள் 5.6 மில்லியன் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந் நகருள் வரும் தமிழர் எண்ணிக்கை 400,000 இற்கு மேற்பட்டதாக இருக்கும்.


பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

இந் நகரின் குடித் தொகையை மூன்று வலயங்களாகப் பிரிக்கலாம்

1) கொழும்பு மாநகரசபை (முழுமையாக நகராக்கப்பட்ட பகுதி

2)கொழும்பு மாநகரசபை அண்டிய பிரதேசப் பிரிவில் அடங்கிய உள்வலயம் (துரித நகராக்கம் பெற்று வரும் பகுதிகள்)

3)- உள் வலயத்துக்குள் வெளியில் அமைந்துள்ள பரப்பு- (கிராமங்கள், தோட்டங்களைக் கொண்ட பகுதிகள் என்றும் பல நகர்களையும் (கம்பஹா, களுத்துறை, பாணந்துறை, மத்துவம், வியாங் கொடை, மீரிகம, ஹொரண போன்றன, அபிவிருத்தி மைய ங்களான மாலபே, ஹோமாகம ஆகிய நகர்களும் இதற்குள் அட ங்கும்)

மெகா பொலிஸுக்குள் பெரிய நகரத்துக்கள் மூன்று வலயங்களுக்குள் இருக்கும். தமிழர் எண்ணிக்கையும் விகிதாசாரமும் பின் வருமாறு.

அட்டவணை IV

மேற்கு மாகாணத்தின் தமிழர்களில் 43.92 வீதத்தினர் கொழும்பு நகரத்திலும் 34.60 விகிதத்தினர் கொழும்பு நகரையண்டிய உள் வல யத்திலும் மிகுதி 21.48 வீதத்தினர் களுத்துறை, கொழு ம்பு, கம்பஹா மாவட்ட தோட்டப் புறங்களிலும் கிரா மப்புறங்களி லும் வாழ்கின்றனர். 1950,1960, 1970 களில் தமிழர்க ளின் நகரக் குடியேற்றம் கொழும்பு நகரிலி ருந்தும் தெஹிவளை, இரத்மலானை நோக்கியதாக இருந்தது. இதற்கு சேர். கந்தையா வைத்திய நாதனின் பங்கு 1940, 1950 களில் குறிப்பிடத்தக்கது. 1990களின் பின்பு தமிழர்களின் நகரக் குடியேற்றம் கொழும்பு நகரி லிருந்து வடக்கு நோக்கி வத்தளை , ஜா எல நோக்கி நகர்ந்ததைக் காணமுடிகின்றது. எக்கந்த, ஹெந்தல தெற்கு, கெகிற்ற, திம்பிலிகசாய, எவாரிவத்தை, கல்வெற்றியா, மாபோலை, கந்தானை, உடங்காவ, எத்தல மற்றும் கொலன்னாவையில் காணப்படும் தமிழர் குடியிருப்பும் கொழும்பு நகர எல்லையை அண்டிய வாதுள்ள , செடவத்தைப் பிரிவுகளில் காணப்படுகின்றது. இதேபோல் ஸ்ரீ ஜெயவர்த்தன புரவில் வசிக்கும் தமிழர்களில் கூடிய பங்கினர் ஒபயசேகரபுர வெலிக்கடைப் பகுதியில் வசிக்கி ன்றனர்.

உள் வலயத்தில் வசிக்கும் தமிழர்கள் கொழும்பு நகரை அண்மித்தே கூடுதலாகக் காணப் படுகின்றனர். பெரிய நகர் திட்டத்தின் மூலம் உள் வலயம், வெளி வலயங்களில் வாழும் தமிழ் மக்கள் கொழும்பு நகருடன் நெருங்கிய தொடர்பை பெற வாய்ப்பு ஏற்படலாம். (தொடரும்)

அட்டவணை VII

| பெரிய நகரின் உள்வலயம் (INNER ZONE) | தமிழர்களின் எண்ணிக்கை | தமிழர்களின் விகிதம் |
|---|---|---|
| வத்தளைப் பிரதேசப் பிரிவு | 36299 | 20.68 |
| ஜா- எல பிரதேசப் பிரிவு | 9269 | 4.60 |
| நீர்கொழும்பு பிரதேசப் பிரிவு | 12238 | 9.61 |
| கட்டான பிரதேசப் பிரிவு | 10847 | 4.61 |
| களனி பிரதேசப் பிரிவு | 8900 | 6.48 |
| கொலன்னாவ பிரதேசப் பிரிவு | 17518 | 9.17 |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுர பிரதேசப் பிரிவு | 7166 | 7.64 |
| மகரகம பிரதேசப் பிரிவு | 3870 | 1.97 |
| தெஹிவளை பிரதேசப் பிரிவு | 13798 | 15.51 |
| இரத்மலானை பிரதேசப் பிரிவு | 15720 | 9.14 |
| மொறட்டுவை பிரதேசப் பிரிவு | 3702 | 3.20 |
| | 139386 | |

அட்டவணை VIII

| கொழும்பு மாநகர வலயம் (City Zone) | தமிழர் குடித்தொகை | குடித்தொகையில் தமிழர் விகிதம் |
|---|---|---|
| கொழும்பு பிரதேசப் பிரிவு | 129496 | 40.06 |
| திம்பிரிகசாயப் பிரிவு | 70155 | 28.02 |
| கொழும்பு நகர் | 176972 | 31.53 |

அட்டவணை IX

| பெரிய நகரின் வெளிவலயம் (Outer ZONE) | | |
|---|---|---|
| களுத்துறை மாவட்டம் முழுமையாக | 45213 | 3.99 |
| கம்பஹா மாவட்டம் (வத்தளை, ஜா எல, நீர்கொழும்பு, கட்டான, களனி பிரிவுகள் நீங்கலாக) | 22796 | 30.78 |
| கொழும்பு மாவட்டம் (கொழும்பு, திம்பிரிகசாயா, கொலன்னாவை, ஸ்ரீஜயவர்த்தனபுர, மகரகம, தெஹிவளை, இரத்மலானை, மொறட்டுவை நீங்கலாக) | 18592 | 7.2 |
| | 86581 | |

# வாக்குறுதிகளுடன் வரவேண்டாம்; உறுதியான தீர்மானத்துடன் வாருங்கள்

## பரவிப்பாஞ்சான் மக்களின் கவனயீர்ப்பு 2ஆவது நாளாக நேற்றும் தொடர்ந்தது

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரவிப்பாஞ்சான் பகுதியில் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ள தமது பூர்வீகக் காணிகளை விடுவிக்கக்கோரி காணி உரிமையாளர்களினால் 3ஆம் கட்ட தொடர் கவனயீர்ப்பு பேராட்டம் பரவிப்பாஞ்சான் இராணுவமுகாம் முன்பாக நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. எங்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதி கள் எங்களின் காணிப் பிரச்சினைக்கு அரசுக்கு போதிய அழுத்தம் கொடுக்காமையே இந்தப் போராட்டங்கள் தொடர்ச்சியாக நீண்டு செல்வதற்கு காரணமாக அமைந்துள்ளது என இரண்டாவது நாளாகவும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாதுள்ள 9.5 ஏக்கர் காணிக்குச்சொந்தமான 27 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் சுழற்சி முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்களின் காணி மீண்டும் தங்களிடம் கையளிக்கப்படும் வரை சுழற்சி முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடபோவதாக தெரிவித்து இரண்டாவது நாளாகவும் கவனயீர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரவிப்பாஞ்சானில் பொதுமக்களின் காணிகளில் இராணுவ முகாம் அமைத்து கடந்த 7 வருடங்களாக இராணுவத்தினர் ஆட்சி செய்து வரும் நிலையில், தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி மாலை முதல் 17 குடும்பங்கள் இராணுவ முகாமுக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

ஏழு நாட்களாக போராட்டம் தொடர்ந்த போதிலும், மக்களின் காணிகளை விடுவிக்க எந்தவொரு தரப்பினரும் முன்வராததை அடுத்து அப்பகுதி மக்கள் தமது போராட்டத்தை காலவரையறையற்ற உண்ணாவிரதப் போராட்டமாக ஆரம்பித்திருந்தனர்.



இதனையடுத்து போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு நேரடியாக சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் இந்த விடயம் தொடர்பில் பேசியுள்ளதாகவும் இரண்டு வாரங்களுக்குள் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்றும் உறுதியளித்து மக்களின் உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்தார்.

இதனையடுத்து இரண்டு வாரங்களுக்கு தமது போராட்டத்தை மக்கள் ஒத்தி வைத்திருந்த நிலையில், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியின் பிரகாரம் 3 ஏக்கர் காணி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய 15 இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு சொந்தமான 9.5 ஏக்கர் காணி விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில் மிகுதி 9.5 ஏக்கர் காணிகளையும் விடுவிக்குமாறு வலியுறுத்தி பரவிப்பாஞ்சான் மக்கள் மீண்டும் போராட்டத்தை முன்னெடுத்த நிலையில், போராட்டம் இடம் பெற்ற பகுதிக்குச் சென்ற சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் 3 மாத காலப்பகுதிக்குள் இராணுவத்திடம் உள்ள காணிகள் விடுவிக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

இவரின் வாக்குறுதியையடுத்து மக்கள் தமது போராட்டத்தை 3 மாத காலத்திற்கு ஒத்திவைத்து போராட்டத்தை இடைநிறுத்தம் செய்தனர்.

ஆயினும் வாக்குறுதி காலமான 3 மாத எல்லை கடந்த டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதியுடன் முடிவடைந்த நிலையில், தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் மீண்டும் பரவிப்பாஞ்சான் மக்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் தொடர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

எனவேதான் நாங்கள் தற்போது தீர்க்கமான முடிவாக எடுத்திருக்கின்றோம். எங்களின் காணி எங்களிடம் கிடைக்கும் வரைக்கும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்று தெரிவித்துள்ளனர்.

மேலும் எங்களை சந்திப்பதற்கு எவரேனும் அரசியல்வாதிகள் வருவதாக இருந்தால் கடந்த காலங்கள் போன்று வாக்குறுதிகளோடு வர வேண்டாம் என்றும் உறுதியான தீர்மானத்துடன் வாருங்கள் அல்லது நல்லாட்சி அரசுக்கு கடுமையான அழுத்தங்களை கொடு ங்கள் என்றும் கேட்டுக்கொண்டனர். (2-312-15)




# மிதிவெடி அபாய எச்சரிக்கை பகுதிகளுக்கு செல்ல வேண்டாம்

## பொதுமக்களுக்கு டாஸ் நிறுவனத்தினர் எச்சரிக்கை

(மல்லாவி )

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள முகமாலைப் பகுதியில், வெடி பொருட்களை அகற்றுவதில் பாரிய சவால்களை எதிர்கொள்வதாக கண்ணிவெடி பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் இங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் வெடிபொருட்களை அகற்றிவரும் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் அமைப்பான டாஸ் நிறுவனத்தின் முக்கிய பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கும் போது,




இப்பகுதியில் அதிகளவான நிலக்கண்ணிவெடிகள், வாகன கண்ணிவெடிகள் என்பன மிகவும் ஆபத்தான நிலையில் புதைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் வெடிக்காத நிலையில் காணப்படுகின்ற வெடி பொருட்களும் அதிகளவில் காணப்படுகின்றன. இராணுவ மண் அணைகள்மற்றும் கைவிடப்பட்ட காவலரண்களுக்கு அருகில் மிக ஆபத்தான வகையில் இந்த வெடிபொருட்கள் விதைக்கப்பட்டுள்ளன.

இதனை அகற்றுவதில் பாரிய சவால்கள் காணப்படுகின்றன எனவும் இவ்வாறான பகுதிகளுக்குள் பொது மக்கள் பலர் நுழைந்து உயிரிழப்புக்கள் மற்றும் காயங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். மிக அண்மையில் கிளாலிப் பகுதியில் இவ்வாறான சம்பவம் நடைபெற்ற வேளை உயிழப்புக்களும் இடம்பெற்றுள்ளன.

எனவே பொது மக்கள் மிதிவெடி அபாயம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தினர் பொதுமக்களை எச்சரித்துள்ளனர். (2-15)

# அத்துமீறி வாடியமைத்த மீனவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கருநாட்டுங்கேணியில் அத்துமீறிய வகையில் வாடி அமைத்துள்ள தென்னிலங்கை மீனவருக்கு எதிராக கரை துறைப்பற்று பிரதேச செயலாளரினால் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறித்த வழக்கு எதிர்வரும் மார்ச்மாதம் 15ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

கருநாட்டுக்கேணிப் பகுதியில் யுத்த காலத்திற்கு முன்பு உள்ளூர் மீனவர்களின் இறங்குதுறையாக இருந்த பிரதேசத்தினை உள்ளடக்கியதாக எவரின் அனுமதியும் இன்றி குறித்த பிரதேசத்தினையும் உள்ளடக்கியதாக தென்னிலங்கை மீனவர் ஒருவரினால் அடாத்தான வகையில் வாடி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்ட வாடியானது மீள்குடியேற்றக் காலத்தில் 2012 ஆம் ஆண்டிலேயே குறித்த வாடி அமைக்கப்பட்ட நிலையில் மீனவ அமைப்புக்கள் அது தொடர்பில் தமது ஆட்சேபனையை தெரி வித்த போதும் தென்னிலங்கை மீனவர் அதற்கு கட்டுப்படாது தொடர்ந்தும் செயற்பட்ட நிலையில் குறித்த விடயம் திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. இருப்பினும் உரிய தீர்வு எட்டப்படவில்லை.

குறிப்பாக வாடி அமைப்பதற்கான பிரதேச செயலாளரின் எழுத்து மூலமான அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும்.

அவ்வாறு பெறப்படாது அமைக்கப்பட்ட வாடியை அகற்றுமாறு பிரதேச செயலாளரினால் தெரியப்படுத்தப்பட்டபோதும் தென்னிலங்கை மீனவர் மறுத்திருந்தார்.

இதன் காரணமாக கடந்த 16ஆம் திகதி பிரதேச செயலாளரினால் குறித்த வாடி உரிமையாளருக்கு எதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இதன் பிரகாரம் குறித்த வழக்கினை ஆராய்ந்த நீதிமன்றம் எதிர்வரும் மார்ச் மாதம் 15ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவித்தது. (2-281)




# புகழ் போதை

மக்களுக்கு தேவையான தைவாரி, வாரி இறைத்தான். மக்களும் அவன் வீட்டு வாசலில் குவிந்தனர். கேசவனும் புகழ் வெறியில், மக்களுக்கு தேவையானதை பூர்த்தி செய்து வந்தான். அந்த சமயத்தில் அங்கு வந்து சேர்ந்த மாணிக்கம் கூட்டத்தினரை நோக்கி, "ஊர்மக்களே! நீங்கள் யாருடைய பணத்தில் ஆட்டம் போடுகிறீர்கள் தெரியுமா?" என்று கேட்டான். எல்லாரும் விழித்தனர். "இது என்னுடைய பணம்". கேசவன் தந்தை தன்னுடைய நிலங்களை எல்லாம், என் தந்தையிடம் விற்று பணம் வாங்கியிருந்தார். ஆனால், நட்பு காரணத்தால், கேசவன் தந்தையின் நிலத்தை சொந்த மாக்கிக் கொள்ளாமல் விட்டு விட்டார். என் தந்தை இறந்து போனபிறகு இந்த விடயம் இதுவரை எனக்கு தெரியவில்லை. இன்று நான் என் தந்தையின் பழைய பெட்டியை குடைந்த போது அதில் கேசவன் தந்தை என் தந்தைக்கு எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தைக் கண்டு எடுத்தேன். "அதனால்.. இன்று முதல் கேசவனுடைய சொத்துக்கெல்லாம் நானே சட்டப் பூர்வமான சொந்தக்காரன். இதுவரை அவன் ஊருக்கெல்லாம் வாரி வழங்கினான். இனி மேல் நான் அதற்கு சம்மதிக்க மாட்டேன் எல்லாரும் வீட்டிற்கு போங்கள்," என்று சொன்னான். இதையெல்லாம் கேட்டுக் கொண டிருந்த கேசவனுக்கு தலை சுற்றியது. மயக்கம் வருவது போலிருந்தது. குழம்பிப் போய் கொண்டிருந்த கூட்டத்தைப் பார்த்தான்.



மாணிக்கம் பேச்சைக் கேட்ட ஊர் மக்கள் அனைவரும் வெளியேறிக் கொண்டிருந்தனர். மக்களை நோக்கி, "போகாதீர்கள் போகாதீர்கள்!" என்று கத்தினான் கேசவன். அதற்கு அவர்கள்..."போய்யா! போ. இனியும் உன் பேச்சைக் கேட்பதற்கு நாங்கள் ஒன்றும் மடையர்கள் இல்லை. இனி நீயும் எங்களைப் போல் ஒரு ஏழைதான்," என்று கூறி விட்டு, "வாருங்கள் போகலாம்!" என்று ஒருவன் கையசைக்க, அனைவரும் அவனைத் தொடர்ந்து சென்றனர். அனைவரும் சென்றவுடன் தன்னிந்தனியாக கவலையோடு ஒன்றும்புரியாமல் நின்றிருந்த கேசவன் தோளில் தட்டிய மாணிக்கம், "வா உள்ளே போகலாம்," என்றான். கேசவன் எதிலும் விருப்பமின்றி, வெறுப்புடன் அவனுடன் சென்றான். வீட்டிற்குள் நுழைந்ததும் மாணிக்கம் வயிறு வலிக்கச் சிரித்தான். ஒன்றும் புரியாதவனாய் கேசவன் விழிக்க மாணிக்கம் கேசவனை நோக்கி அதிர்ந்து விட்டாயா?

தொடரும்...




- 1495 - பிரான்ஸ் மன்னன் எட்டாம் சார்ல்ஸ் நேபபில்சை அடைந்து அந்நகரத்தைக் கைப்பற்றினான்.
- 1658 - டச்சுக்காரரினால் மன்னார் கைப்பற்றப்பட்டது.
- 1819 - ஸ்பெயின் புளோரிடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்றது.
- 1847 - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: புவெனா-விஸ்டா நகரில் இடம்பெற்ற போரில் 15.000 மெக்சிக்கர்களை 5.000 அமெரிக்கப் படைகள் தோற்கடித்தன.
- 1848 - பாரிசில், லூயி பிலிப் மன்னனுக்கெதிராக புரட்சி வெடித்தது. இரண்டு நாட்களின் பின்னர் அவன் முடி துறந்தான்.
- 1853 - வோஷிங்டன் பல்கலைக்கழகம் எலியட் செமினறி என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1862 - அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பின் தலைவராக ஜெபர்சன் டேவிஸ் அதிகாரபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1882 - சேர்பிய பேரரசு மீள உருவாக்கப்பட்டது.
- 1900 - ஹவாய் ஐக்கிய அமெரிக்காவின் ஒரு பிரிவானது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சில் ஐக்கிய அமெரிக்காவின் தோல்வியைத் தொடர்ந்து அமெரிக்கத் தளபதி டக்ளஸ் மக்கார்த்தரை வெளியேறுமாறு அமெரிக்க அதிபர் பிராங்கிளின் ரூஸ்வெல்ட் பணித்தார்.
- 1943 - நாசி ஜெர்மனியில் வைட் ரோஸ் இயக்க உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர்.
- 1948 - செக்கோஸ்லாவாக்கியா கம்யூனிசப் புரட்சி இடம்பெற்றது.
- 1958 - எகிப்தும் சிரியாவும் இணைந்து ஐக்கிய அரபுக் குடியரசை அமைத்தன.
- 1961 - ரஷ்ய மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகத்திற்கு கொங்கோவில் கொல்லப்பட்ட கறுப்பினத் தலைவர் பத்திரிசு லுமும்பாவின் நினைவாக அவரது பெயர் சூட்டப்பட்டது.
- 1969 - பீட்டில்சின் அனைத்து அங்கத்தவர்களும் கடைசித் தடவையாக சேர்ந்து பாடல் பதிவில் ஈடுபட்டனர்.
- 1974 - சாமுவேல் பிக் ஐக்கிய அமெரிக்க அதிபர் ரிச்சார்ட் நிக்சனைக் கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.
- 1979 - சென் லூசியா ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 2002 - அங்கோலாவின் அரசியல் தலைவர் ஜொனாஸ் சவிம்பி இராணுவத்தினரால் கொல்லப்பட்டார்.
- 2002 - இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் வவுனியாவில் கைச்சாத்திடப்பட்டது.
- 2006 - பிரித்தானியாவின் சரித்திரத்தில் மிகப் பெரும் கொள்ளை கொண்ட நகரில் இடம்பெற்றது. +53 மில்லியன் பணத்தை அறுவர் சேர்ந்து கொள்ளையிட்டனர்.

பிறப்புகள்

- 1732 - ஜோர்ஜ் வோஷிங்டன், ஐக்கிய அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவர் (இ. 1799)
- 1824 - பியேர் ஜான்சென், பிரெஞ்சு வானியலாளர் (இ. 1907)
- 1857 - பேடன் பவல், சாரணர் இயக்க நிறுவனர் (இ. 1941)
- 1879 - ஜொஹான்ஸ் நிக்கொலஸ் பிரோன்ஸ்டெட், டென்மார்க் வேதியியலாளர் (இ. 1947)
- 1914 - ரெனாட்டோ டுல்பெக்கோ, உடலியக்கவியல் மருத்துவப் பிரிவின் நோபல் பரிசைப் பெற்றவர்
- 1932 - எட்வர்ட் கென்னடி, அமெரிக்க செனட்டர் (இ. 2009)
- 1936 - மைக்கேல் பிஷப், உடலியக்கவியல் மருத்துவப் பிரிவின் நோபல் பரிசைப் பெற்றவர்.
- 1938 - கோவை மகேசன், சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர், நாட்டுப்பற்றாளர் (இ. 1992)
- 1962 - ஸ்டீவ் இர்வின் ஆஸ்திரேலிய இயற்கை ஆர்வலர் (இ. 2006)
- 1963 - விஜய் சிங், கோல்ஃப் விளையாட்டு வீரர்

இறப்புகள்

- 1556 - ஹுமாயூன், முகலாயப் பேரரசன் (பி. 1508)
- 1944 - கஸ்தூரிபாய் காந்தி, மகாத்மா காந்தியின் மனைவி (பி. 1869)
- 1987 - அன்டி வார்ஹால், அமெரிக்க ஓவியர் (பி. 1928)
- 2006 - எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் (பி. 1915)

சிறப்பு நாள்

- சென் லூசியா - விடுதலை நாள் (1979)
- புனித பேதுரு திருவிழா




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 70 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 200 | 220 | 200 | 160 |
| தக்காளி | 40 | 40 | 40 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 | 70 | 80 | 60 |
| கோவா | 20 | 30 | 20 | 40 | 40 | 40 |
| கரட் | 40 | 60 | 40 | 60 | 120 | 40 |
| பூசணி | 60 | 60 | 30 | 90 | 60 | 60 |
| புடோல் | 50 | 60 | 40 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 110 | 100 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 140 | 240 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 100 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 130 | 80 | 180 | 120 | 120 |
| லீக்ஸ் | 50 | 80 | 60 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 80 | 80 | 40 | 70 | 80 | 70 |
| கறிமிளகாய் | 150 | 200 | 130 | 160 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 700 | 500 | 400 | 600 | 400 | 600 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 110 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 60 | - | 80 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 120 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 20-50 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 180 | 300 | 150 | 180 | 200 | 120 |
| வெங்காயப்பூ | 60 | 40 | 40 | 60 | 80 | 50 |
| முள்ளங்கி | 40 | 100 | 30 | 60 | 60 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 100 | 50 | 50 | 60 | 70 |

> தீய செயல்கள் நம்மை துன்புறுத்துவது அவற்றை செய்த காலத்தில் அன்று, வெகுகாலம் சென்ற பின்னர்தான். – ரூஸோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் நலனில் உங்களுக்கு அக்கறை உண்டா?

தமிழர் நலனில் இலங்கை அரசுக்கு அக்கறை இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்திய வெளியுறவுச் செயலரிடம் முறையிட்டுள்ளது எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஸ்தம்பித நிலையில் உள்ளதெனவும் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பல பிரச்சினைகள் இன்னமும் தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்திய வெளியுறவுச் செயலரிடம் முறையிட்டுள்ளனர்.

கூட்டமைப்பினரின் மேற்போந்த முறையீட்டைப் பார்க்கும் போது இவர்கள் இருக்கும் வரை தமிழனுக்கு எந்த உரிமையும் கிடையாது என்பது உறுதியாகிறது.

ஆம், கொண்ட கொள்கையில் உறுதியில்லாத இவர்களால் எதுவும் செய்ய முடியாது.

ஆக, அரசாங்கத்தின் சலுகைகளைப் பெற்றுக் கொண்டு சுகபோக வாழ்க்கையை இவர்கள் வாழலாமேயன்றி தமிழ் மக்களுக்கு இவர்கள் ஏதேனும் பெற்றுத் தருவார்கள் என்று யாரேனும் நம்பினால் அதை விட்ட முட்டாள்தனம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

இலங்கை அரசு ஏமாற்றுகிறது என்பது உண்மை; அரசியலமைப்புச் சீர்திருத்தம் ஸ்தம்பித நிலையில் உள்ளதென்பதும் உண்மை; தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இதுவரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என்பதும் உண்மை.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கை அரசிடம் எதையும் எதிர்பார்க்க முடியாது. நல்லாட்சியும் நம்மை ஏமாற்றுகிறது என்பது சாதாரண மக்களுக்கும் தெரிந்திருந்த போதும் தமிழ் அரசியல் தலைமை என்று மார்தட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமைக்குத் தெரியாமல் போனது ஏன்?

தமிழ் மக்களுக்கான உரிமையைத் தருவதில் இலங்கை அரசு இழுத்தடிப்புச் செய்கிறது என்பதை இந்திய வெளியுறவுச் செயலருக்கல்ல, இந்த உலகுக்கே பகிரங்கமாக சொல்லியிருக்க வேண்டும். இதைக் கூட்டமைப்புச் செய்யாதது ஏன்?

போருக்குப் பின்பு தமிழ் மக்கள் படும் துன்ப துயரங்களை வெளிப்படுத்த, சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டுவர தமிழ் மக்கள் பேரவை முற்பட்ட போதெல்லாம் இதோ! இனப் பிரச்சினைக்குத் தீர்வு வரப்போகிறது. புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் வெளிவந்ததும் எங்கள் பிரச்சினைகள் தீர்ந்து விடும். எழுக தமிழ் எழுச்சிப் பேரணி தேவையற்றது.

இத்தகைய பேரணிகளை நடத்துவது மக்களை உசுப்பேத்தும் செயல் என்றெல்லாம் மேடைகளில் முழங்கினீர்களே! அப்போது உங்களுக்குத் தெரியாதா? நாம் ஏமாற்றப்படுகிறோம் என்று.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை தடுத்து நிறுத்தி இலங்கை அரசுக்கு உங்கள் விசுவாசத்தைக் காட்டவும் நாங்கள் அசைந்தால் தான் தமிழினம் அசையும் என்ற போலித்தனத்தை பாதுகாப்பதற்காகவும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு வரப்போகிறது என்று மேடைகளில் கூறிய உங்கள் செய்திகளை – உரைகளை இலங்கையில் இருக்கும் இந்தியத் தூதரகமும் அதன் பிராந்திய நிலையங்களும் கவனிக்காமலா விட்டிருக்கும்.

இப்போது இந்திய வெளியுறவுச் செயலரிடம் தமிழர் நலனில் இலங்கை அரசுக்கு அக்கறை இல்லை என்று கூறுகிறீர்களே உங்களுக்கு வெட்கமாக இல்லையா?

மட்டக்களப்பில் நீங்கள் பேசியது என்ன? 2016 டிசம்பரில் தீர்வு என்றது எங்கே. இப்போது இந்தியாவிடம் நீங்கள் சொல்வது என்ன?

முதலில் தமிழ் மக்களின் நலனில் நீங்கள் அக்கறைப்படுங்கள். கொண்ட கொள்கையில் ஆற்று நீர் ஓட்டம்போல ஒரேபக்கமாக இருங்கள். இதைவிட்டு கடல்போல அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் ஓடாதீர்கள். அது உங்களை ஏமாளிகளாக்கிவிடும். கவனம்.

# அரிசியை அதிக விலைக்கு விற்ற 52 வியாபாரிகள் அகப்பட்டனர்

அரிசியை அதிக விலையில் விற்பனை செய்ய 52 வியாபாரிகள் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளின் சுற்றிவளைப்பில் இனம்காணப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் 137 வர்த்தக நிலையங்களை அதிகார சபை அதிகாரிகள் சுற்றிவளைத்தனர். இதன் போதே குறித்த 52 வியாபாரிகள் இனம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் நுகர்வோர் அதிகார சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 13 வியாபாரிகளும், கண்டியில் 12 வியாபாரிகளும், குருநாகலில் 10 வியாபாரிகளும், அநுராதபுரத்தில் 8 வியாபாரிகளும், வவுனியாவில் 7 வியாபாரிகளும், பொலநறுவை மற்றும் கேகாலையில் 6 வியாபாரிகளும் இந்த சுற்றிவளைப்பின் போது இனம்காணப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையிலும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலும் சில வியாபார நிலையங்கள் குறிப்பாக முற்றுகையிடப்பட்டதாகக் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை விசாரணை அதிகாரிகள், தமது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துமாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் உத்தரவிட்டுள்ளார்.

சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களிலும் விடுமுறைகள் என்று பாராது கடமையில் ஈடுபட்டு பாவனையாளர்களின் நன்மை கருதி செயற்படுமாறு அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மோசடியில் ஈடுபடும் வர்த்தகர்களுக்குக் கடுமையான தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

# பொன்சேகாவின் யோசனைக்கு அமையவே விஞ்ஞானபீடம் நிர்மாணிப்பு- கோத்தபாய

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான பீடம் நிர்மாணிக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தகவல் வெளியிட்டுள்ளார்.

இலங்கை மருத்துவ சபை பேராசிரியர் கார்லோ பொன்சேகாவின் யோசனையை தொடர்ந்து இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னரே குறித்த விஞ்ஞான பீடம் நிர்மாணிக்கப்பட்டது என கோத்தபாய கூறியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதேமுன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நான் அழுத்தம் கொடுத்து விஞ்ஞான பீடம் நிறுவப்பட்டது என சிலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஆனால்,எனக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பேராசிரியர் கார்லோ பொன்சேகாவே பதிலளிக்க வேண்டும்.

காரணம் விஞ்ஞானப் பீடத்தை நிறுவுமாறு ஏனைய பேராசிரியர்களே கார்லோ பொன்சேகாவிற்கு அறிவுறுத்தியுள்ளனர் என கோத்தபாய குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தில் வைத்தியர்களுக்கு பற்றாக்குறை இருந்தது, தற்போதும் இருந்து வருகின்றது.

எனவே இந்தப் பற்றாக்குறை பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் புதிய விஞ்ஞானபீடத்தை நிர்மாணிக்க வேண்டும் என்பதே எங்களது நோக்கமாக இருந்தது என்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# சைவக்கொடி தினம்

(யாழ்ப்பாணம்)

உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளையின் ஏற்பாட்டில் சைவக் கொடி தினம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவராத்திரி தினத்தன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கொழும்பிலும் வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பகுதி உட்பட இலங்கையின் சகல மாவட்டங்களிலுமுள்ள பெரும்பாலான ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகளில் கொடிதினம் இடம்பெறும்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கும் பயன்படுத்தப் படவிருக்கிறது.

சிவராத்திரி தினத்தன்று உலக சைவப் பேரவையின் கொடிதினம் சர்வதேச ரீதியில் இந்து மக்கள் வாழும் நாடுகளிலும் நடத்தப்படவிருப்பதுடன் இலங்கையின் சில இடங்களில் கொடிதின வாரமும் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளைத் தலைவர் கா.தயாபரன் அறிவித்துள்ளார். (இ-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும்தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ். பிரதேசத்தில் விக்னேஸ்வரா வீதி, ஊறணி, வீரவாணி, காளி கோவிலடி, வதிரி, இரும்பு மதவடி, சக்களாவத்தை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் நெளுக்குளத்திலிருந்து பறயனாளங்குளம் வரை, பறயனாளங்குளத்திலிருந்து முகத்தாங்குளம் வரை, பூவரசங்குளத்திலிருந்து கங்கன்குளம் வரை, புளிதறித்த புளியங்குளத்திலிருந்து செக்கட்டிப்புலவு வரை, பிரமனாலங்குளத்திலிருந்து பெரியதம்பனை வரை, மறக்கறம்பளையிலிருந்து மணிபுரம் வரை, தாண்டிக்குளத்திலிருந்து சின்னவலயங்கட்டு வரை, வவுனியா புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து புளியங்குளம் வரை, திருநாவற்குளம், சாந்தசோலை, அக்போபுர, கொக்கெலிய, வவுனியா தொழில்நுட்பக் கல்லூரி, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வேளாங்குளம்விமானப்படைமுகாம், ஓமந்தை தொழில் நுட்பக் கல்லூரி, ஓமந்தை யூனியன் அலியன்ஸ் லிமிற்றட், வரன் அரிசி ஆலை, நொதேர்ண் பார்ம், மறக்கறம்பளை பயிற்சிக்கூடம், கொக்கெலிய இராணுவ முகாம், மீன் பிடி வலைத்தொழிற்சாலை, ஓமந்தை AMP Ceylon PVT (LTD) ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் பறயனாளங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, பெரிய பண்டி விரிச்சானிலிருந்து மடு வரை, தடச்சனா மருதமடுவிலிருந்து பள்ளமடு வரை, விடத்தற்தீவிலிருந்து வெள்ளாம்குளம்வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, விசேட அதிரடிப்படை முகாம், வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, எருக்குப்பிட்டிபம் கவுஸ், மீன் பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத் துறைமுகம், சன்னார் இராணுவ முகாம், கணேசபுரம் இராணுவமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# வீதிகளில் நாய்களை விடுவோரை கண்காணிக்க சீ.சீ.ரி.வி. கமராக்களைப் பொருத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாய்களை பொது இடங்களில் விட்டுச் செல்கின்றவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், இவ்வாறானவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும் அமைச்சின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

தெரு நாய்களை வீதிகளில் அல்லது பொது இடங்களில் கொண்டு வந்து விடுபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதையும் மீறும் பட்சத்தில் ஆறு மாத கால சிறைத் தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானவர்களின் நடவடிக்கைகளை கண்டுபிடிப்பதற்கு சீ.சீ.ரி.வி கமராக்களைப் பொருத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

கமராக்கள் பாதுகாப்பாக, மறைமுகமாக பொது இடங்களில் பொருத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# கதிரொளி ரொக்கெட் அணியை வீழ்த்தி கோல்ஸ்ரார் அரையிறுதிக்கு தகுதி



தந்தை செல்வா வி.க நடத்தும் மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் கோல்ட் ஸ்ரார் அணி முதல் போட்டியில் புளு ஸ்ரார் அணியை 6இலக்குகளினால் வீழ்த்தியது.

அண்மையில் நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கோல்ட் ஸ்ரார்அணி ரொக்கெட் அணியை எதிர் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாட களம் இறங்கிய கஜனின் அதிரடி ஆரம்பத்தின் உதவியுடனும் மகியின் இறுதிநேர அதிரடி உதவியுடனும் 10 பந்துப் பரிமாற்றங்களில் 6இலக்குகளை இழந்து 88 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் கோல்ட்ஸ்ரார் அணி சார்பாக கஜன் 38 , மகி 21 ஓட்டங்களை பெற்றனர்.

89 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு களம் புகுந்த ரொக்கெட் அணி கோல்ட் ஸ்ரார் அணியின் துல்லியமான பந்துவீச்சில் குறிப்பிட்ட இடைவெளியில் இலக்குகளை இழந்த வண்ணம் இருந்தது. இறுதியில் 8.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 67 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் ரொக்கெட் அணி சார்பாக சுல்ப்பி 14 ஓட்டங்களை பெற்றார்.

பந்து வீச்சில் கோல்ட்ஸ்ரார் அணி சார்பாக மகி 5 இலக்கினையும் கஜன் 2, பிறேம், ஹரி, பகி ஆகியோர் தலா ஒவ்வோர் இலக்கினையும் கைப்பற்றினர். இறுதியில் கோல்ட் ஸ்ரார் அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கதிரொளி ரொக்கெட் அணியை வீழ்த்தியதுடன் அரையிறுதி போட்டிக்கு தகுதி பெற்றது. (க)





நல்லூர் பிரதேச செயலக விளையாட்டு விழா (20.02.2017) அன்று யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதி நாள் விழாவில் கயிறு இழுத்தல் இறுதிப் போட்டியில் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி அரியாலை ஐக்கிய கழகம் சம்பியனாகியது. (க)

# சென்.அன்ரனீசை வீழ்த்தியது இளவாலை யங்கென்றீஸ்



வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடத்தும் Northern Challengers உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (20-02-2017) அன்று இரவு நடந்து முடிந்த சுப்பர் 8 சுற்று முதலாவது ஆட்டத்தில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனீஸ் விளை யாட்டுக் கழகம் மோதியது.

இடைவேளை வரை விறுவிறுப்பானஆட்டத்தில் இரு அணிகளும் விளையாடிய போதும் இடைவேளையின்பின் யங்கென்றீஸ் தனது கோல் மழையை பொழிந்தது.

ஆட்ட நேர முடிவில் 5.0 என்ற ரீதியில் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு தனது பிரிவில் மேலும் தன் னை வலுவாக்கியது இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக்கழகம். (க)

# இன்றைய போட்டிகள்

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான Northern challengers உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வடமராட்சி மனோகரா விளையாட் டுக் கழகமும் இரவு 8 மணிக்கு நடை பெறும் போட்டியில் மன்னார் கில்லறி விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

◆◆◆◆◆◆◆◆◆◆◆

ஞானதீபம் இளையோர் திறன் விருத்தி மையம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்துடன் இணைந்து நடத்தும் 23 வயதுக் குட்பட்டவருக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று மாலை 6 மணிக்கு நடைபெறும் போட்டியில் கொழும்புத்துறை Martian அணியை எதிர்த்து வழக்கம்பரை அம்பாள் விளையாட்டுக் கழகமும் மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் இரவு 7.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் தமிழ்மதி விளையாட்டுக் கழகமும் இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (க)

# யாழ்.பல்கலை விளையாட்டுப்போட்டி; கலைப்பீடம் முதலாமிடம்



யாழ் பல்கலைக்கழக 2016ஆம் ஆண்டுக்கான முதலாம் வருட மாணவர்களின் பீடங்களுக்கிடையிலான விளையாடுப்போட்டியில் கலைப்பீடம் 330 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.(க)

# வல்வைக்குட்பட்ட கழகங்களிடையே மாபெரும் கயிறு இழுத்தல் போட்டி

## உதயசூரியன், ரேவடி சம்பியன்



வல்வை விளையாட்டுக் கழகமானது வல்வைக்குட்பட்ட கழகங்களிடையே நடத்தும் மாபெரும் விளையாட்டுப்போட்டி -2017 இன் ஓர் அங்கமான கயிறு இழுத்தலானது அண்மையில் உதயசூரியன் கடற்கரையில் இடம்பெற்றது.

ஆண்களிற்கான கயிறு இழுத்தலின் இறுதிப்போட்டியில் இளங்கதிர், உதயசூரியன் அணிகள் மோதின. பலத்த போராட்டத்தின் மத்தியில் உதயசூரியன் அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. இளங்கதிர் அணி இரண்டாமிடத்தினை பெற்றது.

பெண்கள் பிரிவில் இறுதிப் போட்டியில் ரேவடி. உதயசூரியன் அணிகள் மோதின.இதில் ரேவடி அணி வெற்றி பெற்று சம்பியனாகியது .உதயசூரியன் அணி 2 ம் இடத்தினைப் பெற்றது. (க)



வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## கொடூர சித்திரவதை...

யப்பட்டது.

கடந்த 2010ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை அனுஷ்டித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் பொலிஸாரினால் சித்திரவதை செய்யப்பட்ட நிலையில் உயிரிழந்திருந்தார். பின்னர் அவரது சடலம் கிளிநொச்சி இரணைமடுக்குளத்திலிருந்து மீட்கப்பட்டது.

குறித்த குற்றச் சாட்டின் பேரில் கைதான ஏனைய இருவரும் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனப் பொலிஸாரால் வழக்குப்பதிவு செய்யப்பட்ட நிலையில் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இருப்பினும் குறித்த சம்பவம் தொடர்பாக கண்கண்ட சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் அங்கு கடமையில் இருந்த பொலிஸார் 8 பேருக்கு மல்லாகம் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, குறித்த வழக்கு மல்லாகம் நீதவானால் யாழ்.மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டநிலையில் வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது. எனினும், சம்பவத்தில் இறந்த இளைஞனின் சடலம் கிளிநொச்சிப் பகுதியிலிருந்து மீட்கப்பட்டமையால் கிளிநொச்சி நீதிமன்றத்தில் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை இடம்பெற்று வருகிறது.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் யாழ்.மேல் நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் 8 சந்தேக நபர்களில் கைது செய்யப்பட்ட 7 சந்தேக நபர்களும் மன்றில் ஆஜராகியிருந்தனர். அதில் 7 ஆவது எதிரியாகக் கருதப்படும் விஜயரட்ணம் கோபி கிருஷ்ணன் என்பவர் தற்போது கனடாவில் வசித்து வருவதால் இதனையடுத்து அவருக்கு மன்றினால் சர்வதேச பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதில் முதலாம் நான்காம், ஐந்தாம், ஆறாம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி அன்ரன் பவானந்தனும், 2ஆம் எதிரி சார்பில் சர்மினி விக்னேஸ்வரனும், 7ஆம் எதிரி சார்பில் றெமிடியசும், 8ஆம் எதிரி சார்பில் றஞ்சீத் குமார் ஆஜராகியிருந்தார். சட்டமா அதிபர் சார்பில் பிரதி மன்றாதிபதி குமாரரட்ணம் ஆஜராகியிருந்தார்.

இவ் வழக்கு விசாரணையின் போது 8 சாட்சிகள் அழைக்கப்பட்டதுடன் அதில் களவு வழக்கில் கைது செய்ததாக கூறி மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட 2 சாட்சிகளும், இறந்த சுமணனின் மாமா, மற்றும் அப்பகுதியில் கிராம சேவையாளராக பணியாற்றிய கிராம சேவையாளர் ஆகியோரின் சாட்சிகள் பதிவு செய்யப்பட்டன.

இதன்போது சாட்சித்திற்காக முதலாவது சாட்சியாகவுள்ள இராசதுரை சுரேஸ் நீதி மன்றத்தின் விசேட பணிப்பின் பேரில் சிறைச்சாலையிலிருந்து அழைத்து வரப்பட்டார். இவர் வேறோரு வழக்கில் யாழ் சிறைச்சாலையில் விளக்கமறியலில் இருந்து வருகின்றார்.

அவர் சாட்சியமளிக்கையில்,

நான் கூலித்தொழிலாளியாக இருக்கின்றேன். கடந்த 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் எமது பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பைகள் அன்பளிப்பாக வழங்கியிருந்தோம். அது மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்காகவே புத்தகப்பைகள் வழங்கியதாக கூறி நான் இரவு 10.30 மணியளவில் கைது செய்யப்பட்டேன். என்னுடன் மேலும் எனது சகோதரன், எனது அத்தானான இறந்து போன சிறிஸ்கந்தராஜா சுமணன், லோகன் போன்றோர் கைதுசெய்யப்பட்டனர். என்னையும் இறந்து போன சுமணனையும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒரே அறையில் வைத்திருந்தனர். என்னை ஒரு தூணில் கட்டி வைத்து கம்பியால் குத்தினர். ஆணியால் எனது காலில் அடித்தனர். எனது இரு பெருவிரலிலும் கயிறு கட்டி தொங்கவிட்டனர். எனது பிறப்புறுப்பை குறட்டினால் பிடித்திழுத்தார்கள்

இறந்துபோன சிறிஸ்கந்தராஜா சுமணனை இரு மேசைகளின் நடுவிலும் கட்டிவைத்து தாக்கியதோடு, களவு சம்பந்தமாக விசாரித்தனர். களவெடுத்த பொருட்கள் எங்கே என கேட்டனர். எனினும் சுமணன் தான் இயலாதவன் எனக்கு ஒன்றும் தெரியாது என்னை அடிக்கவேண்டாம் என கெஞ்சினார். எனினும் பொலிஸார் கம்பிகளாலும் பொல்லுகளினாலும் தாக்கினர். இதன்போது அவருக்கு மூக்காலும் வாயாலும் இரத்தம் வந்தது அவன் இறக்கப்போகிறான் விடுங்கள் என நான் கூறினேன்,

எனினும் தொடர்ந்து தாக்கியதால் சுமணனின் உயிர் பிரிந்தது. ஆனால் பொலிஸார் மதுபோதையில் இருந்தமையால் வெறித்தனத்தை அடக்க முடியாமல் இறந்த சடலம் என்றும் பாராமல் மீண்டும் தாக்கினர். பின்னர் பொலிஸ் வாகனத்தில் அவரை ஏற்றி சென்றனர். இதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிந்திக பண்டார, மயூரன், கோபி , மற்றும் மன்றில் ஆஜராகியுள்ள பொலிஸாருமே இத்தாக்குதலில் ஈடுபட்டனர். எனினும் 3ஆவது சந்தேக நபரான தாயாளனை சம்பவ இடத்தில் நான் காணவில்லை எனவும் தெரிவித்ததோடு, குறித்த சித்திரவதைக் கொலை தொடர்பில் வெளியில் தெரிவித்தால் குடு, கஞ்சா கடத்தல் வழக்கு போடுவோம் எனவும் மிரட்டினர். பின்னர் களவு வழக்கு என கூறி மல்லாகம் நீதவான் வீட்டில் எங்களை ஆஜர்ப்படுத்தினர். கண்ணுக்கு முன்னால் நடைபெற்ற கொலையைப்போல் எம்மையும் கொன்றுவிடுவார்கள் என்ற பயத்தினாலும், பொலிஸாரின் மிரட்டலினாலுமே நாம் இந்த உண்மையை கூறவில்லை எனவும் தெரிவித்தார்.

குறித்த வழக்கின் இரண்டாவது சாட்சியான துரைராசா லோகேஸ்வரன் சாட்சியமளிக்கையில்,

நான் கடந்த 2011.11.21ஆம் திகதி தமது புன்னாலைகட்டுவன் சித்தி விநாயகர் பாடசாலையில் கற்கின்ற தாய் தந்தையை இழந்த மற்றும் போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புத்தகப்பைகளை வழங்கினோம். இதன்போது அங்கு வந்த ஊரெழு இராணுவ முகாமை சேர்ந்த பிரசாத் என்பவர் நீங்கள் மாவீரர் நிகழ்வா கொண்டாடுகிறீர்கள் என கேட்டார் நான் இல்லையென பதிலளித்தேன். அன்றைய தினம் இரவு எனது வீட்டிற்கு வந்த சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சிந்திக்கபண்டார, மயூரன், பிரசாந் ஆகியோர் என்னை திருட்டு குற்றச்சாட்டு ஒன்றில் கைது செய்து அழைத்து சென்றனர்.

இதன்பின்பு 24.11.2011 அன்று சுமணன் என்பவரையும் சிந்திக்க, மயூரன் ஆகிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்து காலை 9 க்கும் 10க்கும் இடைப்பட்ட நேரத்தில் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். இதன்போது சுமணனது நெற்றிப் பகுதியில் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. தனிநாடு வேண்டுமா என கேட்டு கேட்டு என்னை அடித்ததுடன் மின்சார கம்பியினால சூடுவைத்தனர் என தெரிவித்தார். இதனை தொடர்ந்து அரச தரப்பு விசாரணையில் உங்களையும் சுமணனையும் கைது செய்த பொலிஸ் உத்தியோகத்தர்களை அடையாளம் காட்ட முடியுமா என வினவியபோது குறித்த சாட்சி அவர்களை எதிரி கூண்டில் நின்றவாறு சுட்டு விரலால் அடையாளம் காட்டி அவர்களில் இருவரது பெயர்களையும் சரியாக குறிப்பிட்டிருந்தார்.

அதனை தொடர்ந்து, சிறிஸ்கந்தராஜா சுமணன் மனநோயாளியாக இருந்தவர். கிட்டத்தட்ட 8 மாதங்கள் சிகிச்சை பெற்ற நிலையில் வீடுதிரும்பியிருந்தார். எனினும் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் அவர் நல்ல ஆரோக்கியமான மனநிலையிலேயே காணப்பட்டார் என சம்பவம் இடம்பெற்ற காலப் பகுதியில் கிராம சேவையாளராக இருந்த வேலுப்பிள்ளை சம்பந்தநாதன் சாட்சியமளித்திருந்தார். அத்துடன் இறந்தவரின் உறவினர் ஒருவருடைய சாட்சியமும் பதிவு செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து இவ் வழக்கை நெறிப்படுத்தும் பிரதி மன்றாதிபதி குமாரரட்ணம் இவ் வழக்கின் குற்றப் பத்திரிகையில் 30ஆம் 31ஆம் 32ஆம் சாட்சிகளாக மூன்று பொலிஸ உத்தியோகத்தர்களை அழைப்பதற்கு மன்றின் அனுமதியை கோரியிருந்தார். அத்துடன் இவ் வழக்கின் சாட்சியில் இருந்து 2ஆம் 4ஆம் 5ஆம் சாட்சிகளை நீக்குவதற்கான அனுமதியையும் கோரியிருந்தார். இவ்விரு விண்ணப்பங்களும் மன்றானது அனுமதியளித்ததுடன் இவ் வழக்கின் மீதி சாட்சிப்பதிவுகளை பதிவு செய்வதற்காக எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் திகதி வரை ஒத்திவைத்ததுடன் அதுவரை குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களை விளக்கமறியலில் வைக்கவும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார். (செ-9.4)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்...

இணைந்து செயற்பட தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தொடர்ந்தும் இந்த கொள்கையோடு இருந்தால் அவரையே மாற்று தலைமையாக ஏற்றுக்கொள்ளவும் நாம் தயாராக இருப்பதாகவும் தலைமைகள் விடுகின்ற தவறுகளை கூட்டமைப்புக்குள் இருந்துகொண்டே சுட்டிகாட்டியவர்தான் விக்னேஸ்வரன். அதில் மாற்றுக்கருத்து இல்லை எனவும் கஜேந்திரகுமார் குறிப்பிட்டுள்ளார்.

கந்தர்மடத்தில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்ற வகையில் அங்கு சென்று மோசடி செய்து இனத்தை விற்றுக் கொண்டு இருக்கும் நிலையில். அதனை மாற்றுவதற்கு களத்தில் முடிவுகளை எடுத்து வருகின்றோம். கடந்த வருடம் ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் கையொப்பங்களை நாங்கள் திரட்டியிருந்தோம்,

அதற்கு அடுத்த கட்டமாக தமிழ் மக்களின் பேராதரவுடன் எழுகதமிழை நடத்தியிருந்தோம். ஒட்டுமொத்தமாக தமிழ் மக்களுடைய பெயரை பயன்படுத்தி இந்த துரோகங்களை செய்பவர்களுக்கு மக்கள் வழங்கிய ஆணையை மீள பெற்று மக்கள் தங்கள் கருத்தாக முன்வைக்க கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் எங்களை அவர்கள் தொடர்ந்தும் விற்றுக் கொண்டுதான் இருப்பார்கள். இதன் அடிப்படையில்தான் அரசியல் கட்சியாக அல்லாமல் ஒரு சிவில் அமைப்பாக தமிழ் மக்கள் பேரவையும் செயற்பட்டு கொண்டுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமை தமிழ் மக்களுக்கு மோசமானவற்றை செய்து வருகின்றது என்பது அம்பலத்துக்கு கொண்டு வருவதற்கும், அந்த தலைமையிலிருந்து தமிழ் மக்களை காப்பாற்ற வேண்டிய தேவை ஒன்று உருவாகத்தான் சிவில் சமூகம் தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பை உருவாக்குகின்றது. அந்த அடிப்படையில் அரசியல் தீர்வு திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டது. மக்கள் கொள்கையோடு உறுதியாக இருக்கின்றார்கள் என்பதனை வெளிக்காட்ட தான் எழுக தமிழ் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பிற்குள் நின்று கொண்டு விமர்சிப்பது எந்த பிரயோசனமும் இல்லை. ஆகையால் தான் அதனை விட்டு வெளியேற வேண்டும் என கோருகின்றோம். சிலர் நினைக்கின்றனர் சம்பந்தனை இந்த அரசாங்கம் ஏமாற்றுகின்றது என்று, சம்பந்தனை இந்த அரசு ஏமாற்றவில்லை. தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவார்கள் என்று தெரிந்து கொண்டுதான் சம்பந்தன் செயற்படுகின்றார்.

கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளை அவர் சில வேளை ஏமாற்றியிருக்கலாம், ஆனால் அரசாங்கம் சம்பந்தனை ஏமாற்றவில்லை. அவர் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் தான் நிற்கின்றார். சம்பந்தனுக்கு கீழ் உள்ள அரசியல் கட்சிகள் தமிழ் மக்கள் பேரவைக்குள் சரியான நிலைப்பாட்டை எடுக்கின்றனர். அப்படி என்றால் கூட்டமைப்புக்குள் தொடர்ந்தும் அவர்கள் இருக்க முடியாது. அல்லது கூட்டமைப்பின் தலைமையை நிராகரிக்க வேண்டும். அந்த மாற்றத்தை கொண்டுவரவேண்டும். த.தே.கூட்டமைப்பின் பேரால் பலரும் சம்பந்தனையும், சுமந்திரனையுமே மட்டுமே சந்திக்கின்றனர். அந்த அதிகாரத்தை பாங்காளி கட்சிகள் வழங்கி விட்டு இப்போது விமர்சிக்க முடியாது. இனத்தை விற்கும் அதிகாரத்தை இவர்கள் தான் சுவீகரித்துள்ளார்கள். இந்த மோசடியை கூட்டமைப்பில் உள்ள ஏனையோர் முன்பு தெரிந்து கொள்ளாமல் இருக்கலாம், ஆனால் இனியும் தெரியாது என கூற முடியாது. எனவே கொள்கையில் இணைந்து செயற்பட முன்வந்தால் அவர்களுடன் நாம் இணைந்து செயற்பட தயார் எனவும் கஜேந்திரகுமார் தெரிவித்தார். (செ-4)

## புதிய அரசியலமைப்பு...

நாடாளுமன்றத்திலுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சிகளினதும் பங்களிப்புடன் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவரும் நிலையிலேயே அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இந்த அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

சமுர்த்தி மற்றும் சமூக நலன்புரி அமைச்சில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க மேலும் கூறுகையில்,

நாட்டின் ஐக்கியம், இறையாண்மை என்பவற்றை மாற்றுவதற்கு ஒருபோதும் நாங்கள் தயாரில்லை. அதேபோன்று ஜனாதிபதி முறைமையையும் முற்றுமுழுதாக இல்லாதொழிக்க மாட்டோம். நடைமுறையிலுள்ள அரசியலமைப்பில் சர்வஜன வாக்கெடுப்பில் மட்டும் மாற்றக்கூடிய பிரிவுகளுக்கான திருத்தங்களைக் கொண்டுவர மாட்டேன் என்றும், நாட்டின் இறையாணமை, ஐக்கியம் என்பவற்றைப் பாதுகாக்கக்கூடிய திருத்தங்களுக்கு மாறாக அதற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு திருத்தத்திற்கும் கைவைக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்திருக்கின்றார். மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிக்கு அமைய நாட்டின் ஐக்கியத்திற்கு அச்சுறுத்தலாகும் விடயத்திற்கோ மற்றும் சமஷ்டி அரசியலமைப்பு உருவாகும் விடயத்திற்கோ கைவைக்கப்போவதில்லை என்றும் கூறியிக்கின்றார். புதிய அரசியலமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்தும் விடயம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது. அவர்களுக்கும் இந்த நாட்டு மக்கள் ஆணையை வழங்கியிருக்கின்றனர். அதேபோல எங்களுக்கும் மக்கள் ஆணை கிடைத்துள்ளது. எனவே அமைக்கப்பட்டுள்ள தேசிய அரசாங்கத்திற்கு முழுமையான அரசியலமைப்பொன்றுக்குச் செல்ல வாய்ப்புக்கள் இல்லை என்று கட்சி என்ற அடிப்படையில் நாங்கள் நினைக்கின்றோம். அதேபோல போர்க் குற்ற விவகாரங்களை விசாரணை செய்வதற்காக வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளக விசாரணையில் அமர்த்துவது குறித்து தற்போது பல்வேறு தரப்பினரால் பேசப்பட்டு வருகின்றது. இது முற்றிலும் பிழையாகும். இந்த நாட்டில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிமன்றம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் வாக்குறுதி அளித்திருக்கவில்லை. அதேபோல வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் இந்த நாட்டில் போர்க் குற்ற விசாரணைகளை ஆரம்பிப்பதற்கும் ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இடமளிக்காது என அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (செ-11)

## வாக்குறுதிகள்...

வில்லை என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை இரத்து செய்வதற்கோ, காவலில் உள்ளவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுப்பது தொடர்பிலோ இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் தோல்வியடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் பாதுகாப்புத் துறையில் மாற்றம் செய்வதாக அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதனையும், காலமாறு நீதிப் பொறிமுறைமை உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் முனைப்பு குறித்தும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென, மனித உரிமைக் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய வலய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு வாக்குறுதி அளித்து 18 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இலங்கைத் தலைவர்கள் முக்கிய மனித உரிமை விடயங்களுக்கு தீர்வு காண முனைப்பு காட்டவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## மீள்குடியேற்றத்தை...

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் எஸ்.இன்பம். எந்த அரசியல் கட்சி சார்பற்ற போராட்டமாகவே குறித்த போராட்டம் நடைபெறும் என தெரிவித்துள்ளார்.

யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக இன்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ள இந்த போராட்டத்தில் கேப்பாப்பிலவு மக்களின் வாழ்விடங்கள் எந்த நிபந்தனையுமின்றியும். தாமதமின்றியும் வழங்கப்பட வேண்டும்.

வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் எப்போது? காணாமல் ஆக்கப்பட்டோரின் முடிவு என்ன?அரசே பதில் சொல்! அரசியல் கைதிகளின் விடுதலை எப்போது? நல்லாட்சியின் போலி முகமே பதில் சொல. மக்களின நிலம் மக்களுக்கே சொந்தம். இராணுவமே மக்களின் நிலங்களை விட்டு வெளியேறு போன்ற கோரிக்கைகளை முன்வைத்து கோஷங்கள் எழுப்பப்படவுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து 8 வருடங்கள் ஆகிவிட்டது. ஆனால் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் நடுத்தெருவில் விடப்பட்டவர்களாகவும், அவல வாழ்க்கைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர்.

இந்நிலையில் நல்லாட்சி என சொல்லிக் கொள்ளும் அரசாங்கமும். அதோடு ஒட்டிக் கொண்டு சுகபோகம் அனுபவித்துக்கொண்டிருக்கும் தமிழ் தலைமைகள் மக்களின் துன்பங்களையும். அவலங்களையும் கண்டுகொள்வதாக இல்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் அரசியல் தலைவர்களினதும். பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுமின்றி அநாதைகளாக நின்று தமது உரிமைகளுக்காக தனித்து நின்று போராடிக் கொண்டிருக்க. அரசுக்கு சேவகம் செய்யும் சில தலைவர்கள் தமக்கு இடம்பிடிப்பதற்காக அவ்வப்போது மக்கள் தாமாக நடத்தும் போராட்டங்களில் கலந்துகொண்டு தங்களை மக்களின் பிரதிநிதிகளாக காட்டிக்கொள்ள முற்படுகின்றனர். ஆனால், அவர்களின் போலி வேஷத்தை மக்கள் இனங்கண்டு கொண்டுவிட்டனர். இனிமேல் இவர்களின்" பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவல்" என்ற இரட்டை வேசத்தை மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

தமிழ் தலைமைகள் ஒருமித்த குரலாக பாராளுமன்றத்தில் அழுத்தங்களை முறையாக கொடுத்திருந்தால், மக்களின் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வைப் பெற்றிருக்க முடியும். அப்படி ஒரு தீர்வு கிடைத்திருந்தால், கேப்பாப்பிலவு மக்கள் பனியிலும். வெயிலிலும வாடி நாட்கணக்கில் ஒரு போராட்டத்தினை நடத்த வேண்டி வந்திருக்காது.

மக்கள் போராடிக்கொண்டிருக்கின்ற இந்த சூழ்நிலையிலும் கூட தலைவர்கள் அரசாங்கத்தினைப் பாதுகாக்கவும், அனுசரணையாளர்களாக செயற்படுத்துவதிலும். போட்டி போடுகின்றனர். ஆனால். வாக்களித்த மக்களின் துன்பங்கள் அவர்கள் சிந்தும் கண்ணீர இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

எனவே. நல்லாட்சி வேடமிட்டுள்ள அரசாங்கம் எம்மத்தியில் உள்ள கையாலாகாத் தலைவர்களும். கோடாரிப்பாம்பாக செயற்படும் தலைவர்களும் இணக்க அரசியல் என்றிருப்போரும் உள்ளவரையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு வழங்கப்போவதில்லை. மக்கள் போராட்டம் ஒன்றே தீர்வினைப் பெற்றுத்தரும்" எனவே போராடும் மக்களுக்கு பலம சேர்க்க அனைத்து மக்களையும் ஒன்றிணையுமாறு வேண்டுகோள் விடுப்பதாக போராட்டதரப்பினரால்அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.(செ-4)

## ஜனாதிபதி மைத்...

ரிபால சிறிசேன மக்களிடத்தில் மன்னிப்புக் கோர வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர நேரிடும் என தூய்மையான ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எச்சரித்துள்ளார்.

தூய்மையான ஹெல உறுமய கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டக்களப்பில் சேவையாற்றி வந்த இராமநாதன் கண்ணன் என்ற சட்டத்தரணியை ஜனவரி 31 ஆம் திகதி பிரதம நீதியரசராக நியமித்து முழு சட்டத்துறையினையும் தளம்பலடையச் செய்துள்ளார்.

மேற்படி இராமநாதன் கண்ணன என்பவர் 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் உயர் நீதியரசர்களுக்கான தேர்வுகளில் சித்தியடையவில்லை. அந்த பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் தற்போதும் நீதிவான்களாக சேவையாற்றுகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால செய்த தவறை ஏற்றுக்கொண்டு இனி இந்த தவறை செய்யப் போவதில்லை என்று நாட்டு மக்களிடத்தில் மன்னிப்புக் கோர வேண்டும்.இல்லாவிட்டால் இது ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் ஒரு தவறாக மாறிவிடும் என உதய கம்மன்பில மேலும் தெரிவித்தார். (இ-7)

## தண்ணீர் பிரச்...

யில் நடைபெற்றது.

இதன் போது தண்ணீர் பிரச்சினை தொடர்பில் சிறப்பு அமர்வு முன்னர் தீர்மானித்தபடி நாளை வியாழக்கிழமை நடத்தப்பட வேண்டுமென உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை விடுத்திருந்தனர். எனினும் வடக்கு முதலமைச்சரினது கோரிக்கைக்கு அமைய அடுத்த மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக மாகாண சபையின் அமர்வில் சபைத்தலைவர் அறிவிப்பில் மேற்படி நீர் விடயம் தொர்பாக முதலமைச்சர் அவைத தலைவருக்கு எழுதிய கடிதம் வாசிக்கப்பட்டு பிற்போடுவதற்கான கருத்துக்கள் கேட்கப்பட்டது. அதன்போது. கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் தவராசா. விவசாய அமைச்சினால் தண்ணீர் பிரச்சினை தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட குழுவினால் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கைக்கும் மாகாண சபைக்கும் என்ன என்பது பற்றி விளக்கம் தர வேண்டும். இந்த ஆய்வறிக்கையை வைத்து ஒரு சிலர் பணம் சம்பாதித்துக்கொண்டு செல்வதற்காக அனுமதி வழங்க முடியாது.

இந்த ஆய்வறிக்கை தேவைப்படாத ஒரு விடயம். வடமாகாணத்தில் உள்ள 12 லட்சம் மக்களின் வாழ்க்கையினை பணயம் வைக்க முடியாது. மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் சுன்னாகம் குடிநீர்ப்பிரச்சினையினை லஞ்ச ஊழல் ஆணைக்குவிடம் சமர்ப்பித்துள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசேட பெறுபேறுகள் என்ன என்பது பற்றி சபை விவாதிக்க வேண்டும். அண்மையில் நடத்தப்பட்ட நீர்க் கொள்கையை உருவாக்குவதற்கான மாநாட்டின் அடிப்படையில் விவாதத்தினை நடத்தினால் நன்றாக இருக்கும் என எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா குற்றஞ்சாட்டினார்.

ஆய்வறிக்கை வந்தபின்னர். வேண்டுமானால் இறுதி விவாதத்தின் போது அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களையும் வைத்து விவாதிக்க முடியும். எனவே. இரு அமர்வுகளாக விவாதிக்க வேண்டும். அந்தவகையில், எதிர்வரும் மார்ச் 07 ஆம் திகதி ஒரு அமர்வினை நடத்திய பின்னர் மே 23 அடுத்த விவாதத்தினை நடத்த தீர்மானிப்போம்.

எனவே. தண்ணீர்ப் பிரச்சினைக்கான இறுதி முடிவு எட்டப்பட வேண்டும் என உறுப்பினர் சிவாஜிலிங்கம் வலியுறுத்தினார்.

அதனடிப்படையில் உறுப்பினர்களின் கடும் வாக்குவாதங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களின் மத்தியில் தண்ணீர்ப் பிரச்சினைக்கான விசேட அமர்வினை எதிர்வரும் 07 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்படுகின்றதாக அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் அறிவித்தார். இதேவேளை குறித்த சிறப்பு அமர்வு நாளைய தினம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)





### பதவி வெற்றிடங்கள்

கடந்த 30 வருடங்களாக சிறந்த காப்புறுதிச் சேவையினை சிறப்பாக வழங்கி வரும் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தினர் யாழ்ப்பாணம் வாழ் மக்களுக்கு ஓர் சிறப்பான ஆயுட்காப்புறுதி சேவையைத் தொடர்ந்து வழங்குவதற்காக யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்திற்கு AGENCY DEVELOPMENT OFFICER (ADO) தரத்திலான பதவிக்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்ட இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி வெற்றிடங்கள் - 05

**DEVELOPMENT OFFICER (ADO) -TEAM Leader**

தகைமைகள்

01.குறைந்த பட்சம் க.பொ.த. உயர்தர (A/L) பரீட்சையில் சித்தி
02.காப்புறுதி, சந்தைப்படுத்தல் துறை அல்லது தனியார் தொண்டு நிறுவனங்களில் (NGO) பணியாற்றியவர்கள் விரும்பத்தக்கது.
03.அர்ப்பணிப்பு மற்றும் குழுவையும் ஆலோசகர்களையும் வழிநடத்தும் திறன்
04.வாடிக்கையாளர் மீதான அக்கறை, நம்பிக்கை மற்றும் சிறந்த தொடர்பைப் பேணும் திறன்

நீங்கள் எம்முடன் இணைந்து சேவையாற்றுவதனால் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள்

01. அடிப்படை வேதனம் மற்றும் இதர கொடுப்பனவுகள்
02. மாதாந்த High Flyer allowance கொடுப்பனவுகள்
03.வருடாந்த Incentives கொடுப்பனவு
04.உள்ளூர் மற்றும் சர்வதேச பயிற்சிகள்
05.வருடாந்த இலவச வெளிநாட்டு சுற்றுலாக்கள்
06.சர்வதேச விருதுகள்
07.விரைவான பதவியுயர்வுகள்
08.இலவச காப்புறுதி அனுகூலம்
09.Tab/ Laptop வசதிகள்
10.கடன் வசதிகள் (மோட்டார் சைக்கிள், கார்)

நீங்கள் எம்முடன் இணைந்து சேவையாற்ற விரும்பினால் தங்களது விண்ணப்பப் படிவங்களை கீழுள்ள எமது மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது எமது பிராந்திய அலுவலக முகவரிக்கு 08.03.2017 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

செ.கிரிதரன்
அபிவிருத்தி முகாமையாளர்
இல:139, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

மேலதிக தொடர்புகளுக்கு
077 242 5414
E.mail ID:
kiritharans@unionlifesales.lk

யூனியன் அஷ்யூரன்ஸ்

GREAT PLACE TO WORK Best Companies to Work for 2015 Sri Lanka

(8018)



### CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062
follow us cnrworldwideexpress

(சி-7620)



### V2 TRAVELS

தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி



அதிஸ்ட எண். -N/13JAN17/1371/152

சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி

இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார்

நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல
வாய்ப்புக்களுக்கு: 0768226240

(சி-7628)



### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்



UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



## கண்ணீர் அஞ்சலி

சமூகஜோதி

### கா.க.ச.பரமலிங்கம்

(கைதடி வீட்டுத்திட்டச் சங்க செயலாளர்)



குந்திக் குடியிருக்க குடி நிலமின்றி குமுறுகின்ற குடும்பத்தாரை கைதடி வீட்டுத் திட்டச் சங்கத்தில் பயனாளிகளாக இணைத்து வீடு கட்டக் காணி வழங்கி வரும் வேளையில் திடீரென எமை விட்டுப் பிரிந்த சமூகஜோதி கா.க.ச.பரமலிங்கம் அவர்களுக்கு கண்ணீர் மலர் தூவி அஞ்சலிக்கின்றோம்.

கைதடி வீட்டுத்திட்டச்
சங்கப் பயனாளிகள்,
நாவற்குழி

(சி-7626)


இப்பத்திரிகை வலம்புரி அன்சேர ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.